புதுமலர்

14

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

புதுமலர் 14	:	ஏப்ரல் - ஜூன் 2026 திருவள்ளுவர் ஆண்டு 2057
ஆசிரியர்/வெளியீட்டாளர்	:	கண. குறிஞ்சி
இதழ் முகவரி	:	6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு, திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012.
இதழ் தொடர்பு எண்	:	**94433 07681**
மின்னஞ்சல்	:	gana.kurinji@gmail.com
புலனம்	:	புதுமலர் இதழ் நண்பர்கள்
அட்டை வடிவமைப்பு	:	**கண.குறிஞ்சி**
தனி இதழ்	:	ரூ. 130

ஆண்டுக்கட்டணம்	:	ரூ. 500
இரண்டாண்டுக் கட்டணம்	:	ரூ. 1000
மூன்றாண்டுக் கட்டணம்	:	ரூ. 1,500

இதழுக்கான கட்டணம் அனுப்பியவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் இதழின் தொடர்பு எண் மூலம் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம்

புலனம் (வாட்ஸ்அப்) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்

ஆண்டுக்கட்டணம் குறித்துத்தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்:
94433 07681

நெறியாளர்கள்

- **வீ. அரசு**
- **பொதியவெற்பன்**
- **ஜமாலன்**
- **ரவி குமாரசாமி**

வங்கிக்கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/c No. 7390 144 253 IFSC NO. IDIB 000 T202

G Pay No. 94433 07681 G. Shanmuga Sundaram

★ புதுமலர் இதழில் வெளியாகும் படைப்புகளின் கருத்துக்கள் படைப்பாளிகளின் சொந்தக் கருத்துக்களாகும்.

உள்ளடக்கம்

★ இதழின் குரல் 4

★ தோழர் தியாகு பேட்டி 9
- **கண.குறிஞ்சி**

★ ஔவைக்கு இணை ஔவையே!
- **முனைவர். தாயம்மாள் அறவாணன்** 34

★ மகளிரின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தமிழன்பனின் சிந்தனைகள்
- **பவளசங்கரி** 47

★ இந்தியால் உடையும் இந்தியா?
- **குமணராசன்** 60

★ அகப்புற முரண்களில் சிக்கித் தவிக்கும் பிரமிளின் இலக்கியக் கோட்பாடுகள்
- **ஜமாலன்** 77

★ மார்க்சியப் பெண்ணிலைவாதம்: ஒரு வரலாற்று நோக்கு
- **யமுனா ராஜேந்திரன்** 98

★ எச்சிலையும் தமிழர் தன்மானமும்
- **தமிழ் இராசேந்திரன்** 116

★ ஊபாச் சட்டத்தின் கோர முகம்
- **பொன்.சந்திரன்** 120

★ **ரவி குமாரசாமி** கவிதை 125

★ நிகழ்வு 126

★ உங்கள் மனஓசை 132

இதழின் குரல்

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மற்றும் இசுரேல் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இரு போர்வெறியர்களின் காரணமாக, உலகம் இன்று பெருந்துன்பத்தில் அலை மோதுகிறது. ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையே ஓமனில் நடந்த பேச்சு வார்த்தையில் ஏறக்குறைய ஒரு தீர்வு எட்டப்பட்ட நிலையில், அணு ஆயுதம் தயாரிக்கத் தேவையான யுரேனியத்தை ஈரான் செறிவூட்டி வருவதாகவும், அதனால் அமெரிக்கா மற்றும் இசுரேல் நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும், பொய்யான குற்றச்சாட்டைக் கூறி ஈரான் மீது இவ்விரு நாட்டு அதிபர்களும் கொடூரமான போரைத் தொடங்கினர். ஆனால். இசுரேலிலும், அமெரிக்காவிலும்கூட இன்று இப்போருக்குக் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. குறிப்பாக இப்போருக்கு அமெரிக்கக் காங்கிரசின் அனுமதியே பெறப்படவில்லை என்பது கருதத்தக்கது: மேற்காண் இரு நாடுகள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் நீதியற்ற இப்போரை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்கள் தெருவில் இறங்கி அணி அணியாக ஆர்ப்பரித்துப் போராடி வருகின்றனர்.

உலக மக்களின் ஆவேச எதிர்ப்பைக் கண்டு அஞ்சி நடுநடுங்கிய இசுரேலின் மரண வணிகன் நெதன்யாகு , உலக மக்களைப் பாதுகாப்பதற்காகவே இந்தப் போரை நடத்துவதாகப் பசப்புகிறான். மேலும் ஈரானை எதிர்த்துப் போராட மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் கெஞ்சுகிறான். ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் அவர்களும், மத்திய கிழக்கு இராணுவ நடவடிக்கைக்குக் கண்டனம் தெரி

வித்திருப்பதோடு போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தி உள்ளார்.

இந்தப் பின்னணியில் பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசின் அணுகுமுறை எவ்வாறு உள்ளது என்பதை மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. பிரித்தானிய வல்லரசிடமிருந்து விடுதலை பெற்ற பிறகு, இந்தியாவின் அயலுறவுக் கொள்கை என்பது பஞ்சசீலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

- அனைத்து நாடுகளும் சமாதான சக வாழ்வு வாழ வேண்டும்.
- வலிமை குறைந்த நாடுகளை வலிமைமிக்க நாடுகள் துன்புறுத்தக் கூடாது.
- மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் எந்த நாடும் தலையிடக்கூடாது
- தேவை உள்ள அனைத்து நாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரவேண்டும்.
- அனைத்து நாடுகளின் எல்லைப் பாதுகாப்புக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும்.

எனும் ஐந்து கொள்கைகளை நேரு (இந்தியா) நாசர் (எகிப்து) டிட்டோ (யுகோஸ்லாவியா) சுகர்னோ (இந்தோனேசியா) நிக்ருமா (கானா) ஆகிய முன்னோடிகள் இந்த பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கி அணிசேரா நாடுகள் (Non-Aligned Movement - NAM) என்ற வரிசையில் பல்வேறு நாடுகளை இணைத்தனர். இதனால் ஓரளவு தேவையற்ற போர்கள் தவிர்க்கப்பட்டு, நாடுகளின் தற்சார்புத்தன்மை பேணப்பட்டது: ஆனால் மோடி அரசு பதவியேற்ற, 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட அணிசேராக் கொள்கை காற்றில் பறக்க விடப்பட்டது.

பொதுவாக ஒரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கையின் நீட்சியாகத்தான் அந்த நாட்டின் வெளியுறவுக் கொள்கையும் அமைந்திருக்கும். கார்ப்பரேட் - காவி பாசிச பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி சர்வதேச அளவில் இயல்பாகவே வல்லரசுகளுக்கும், பிற்போக்கான கொள்கைகளுக்கும்

ஆதரவளிக்கும் நிலைபாட்டைத்தான் எடுத்து வருகிறது: ஒவ்வொரு சர்வதேசச் சிக்கல்களின் பொழுதும் டிரம்ப்பின் கொத்தடிமையாக இந்தியா மாறி வருவதை அவதானிக்க முடியும்.

மோடி அரசு பதவி ஏற்ற பிறகு இந்திய அமெரிக்கப் பாதுகாப்புக் கட்டமைப்பு எனும் போர்வையில் இரு நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பை உறுதிப் படுத்தும் நான்கு ஒப்பந்தங்கள் இறுதிப் படுத்தப்பட்டன.

பாலஸ்தீனப் பிரச்சனையில் கடந்த காலங்களில் இந்தியா பாலஸ்தீனத்திற்கு முழு ஆதரவை வழங்கி வந்துள்ளது. ஆனால், அண்மையில் காஸாவின் மீது இசுரேல் கொடூரமான தாக்குதல் நடத்திக் குழந்தைகள், முதியோர், பெண்கள், நோயாளிகள் உள்ளிட்ட 75 ஆயிரம் பேரைப் படுகொலை செய்த இஸ்ரேலைக் கண்டிக்க முன்வராத மோடி அரசு, ஹமாஸ் அமைப்பின் மீது மட்டும் கடும் கண்டனத்தை தெரிவித்தது. கடந்த (2025) பிப்ரவரி 25/26 ஆகிய நாட்களில் இந்தியப் பிரதமர் மோடி இசுரேலுக்கு அதிகாரப்பூர்வப் பயணம் மேற்கொண்டார். அப்பொழுது இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் மோடி உரையாற்றிய பொழுது காஸாவின் அவலநிலை குறித்தோ, பாலஸ்தீனியர்கள் படும் எண்ணற்ற இன்னல்கள் குறித்தோ ஒரு வார்த்தையும் பேசவில்லை. மாறாக, என்றென்றைக்கும் இஸ்ரேலுடன் அனைத்துத் தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து மட்டுமே பேசினார். அதுமட்டுமல்ல “இந்தியா, என் தாய்நாடு. இஸ்ரேல், தந்தை நாடு.” என்று கூறி கைதட்டல் வாங்கிக் கொண்டு இந்தியா திரும்பினார். மோடியின் பயணத்திற்குப் பிறகு இஸ்ரேல் கடும் தாக்குதலை ஈரான் மீது தொடுத்தது. அதனால் இந்தியாவுக்குச் சர்வதேச அளவில் பெரும் தலைக்குனிவு ஏற்பட்டது. மேலும் மோடி அரசின் இந்தப் பயணத்தை இஸ்ரேல் தனது அங்கீகாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

அதே போல், ஈரான் குறித்த பிரச்சனையிலும், அமெரிக்கா - இசுரேல் கூட்டுத் தாக்குதலில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டது குறித்து எவ்விதக் கண்டனமும் தெரிவிக்காமல், தனது இறையாண்மை, சுதந்திரம் மற்றும் எல்லை ஆகியவற்றைப் பாதுகாக்கப் போராடிவரும் ஈரான், போர் நிறுத்தத்தை

முன்னெடுக்க வேண்டும் என மோடி அருளுரை வழங்கினார். ஆனால் போருக்குக் காரணமான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் குறித்து எதுவுமே பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போர் தொடங்கிய காலகட்டத்தில் ஈரானிய அதிபர் காமெனி அமெரிக்கத் தாக்குதலால் படுகொலை செய்யப்பட்ட பொழுது உலகமே வருத்தம் தெரிவித்தது. ஆனால் ஒரு நாட்டின் உச்சபட்சத் தலைவர் கொல்லப் பட்டதற்கு வருத்தமோ, கண்டனமோ தெரிவிக்காமல் மோடி அரசு கனத்த மௌனம் சாதித்தது.

ஈரான் நாட்டின் மீதான அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலால் 175 பள்ளிச் சிறுமிகள் கொல்லப்பட்ட கொடிய நிகழ்வுக்கும் இந்தியா கண்டனம் தெரிவிக்கவில்லை.

இரசியாவிடமிருந்து சலுகை விலையில் இந்தியா எண்ணெய் வாங்கி வருவதை "நிறுத்து" என அமெரிக்கா, கட்டளை இட்டதும், மோடி அதை அடிபணிந்து ஏற்றுக்கொண்டார். மீண்டும் சர்வதேச அளவில் எண்ணெய் பெறுவதில் சிக்கல் வந்தவுடன் "30 நாளைக்கு மட்டும் இரசியாவில் எண்ணெய் வாங்கிக்கொள்" என அமெரிக்க முதலாளி டிரம்ப் உத்தரவிட்டதும் அப்படியே அதை வேதவாக்காக ஏற்றுக் கொண்டு செயல்பட்டார் மோடி.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இந்தியக் கடற்படையின் கப்பல் அணிவகுப்பு ஆய்வு நிகழ்வில் நட்பு முறையில் பங்கேற்ற ஈரானியப் போர்க்கப்பலை அமெரிக்கா திடீரெனத் தாக்கி மூழ்கடித்தது. இதில் அநியாயமாக 100-க்கும் மேற்பட்ட மாலுமிகள் கொல்லப்பட்டனர். இந்தியாவுக்கு விருந்தினராக வந்தவர்கள், மனித நேயமற்ற முறையில் தாக்குதலுக்கு உள்ளானது குறித்து ஈரான் நாட்டிற்கும், பாதிக்கப்பட்டு உயிரிழந்த மாலுமிகளின் குடும்பத்தினருக்கும் இரங்கல் தெரிவித்து மோடி அரசு அதிகாரப்பூர்வமாக ஓர் அறிக்கை கூட வெளியிடவில்லை.

அதே போல், அமெரிக்கா, வெனிசூலா நாட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அந்நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவையும், அவரது துணைவியாரையும் சட்டவிரோதமாகக் கைது செய்து அமெரிக்கச் சிறையில் அடைத்த பொழுதும், இந்தியா அதைக் கண்டிக்கவில்லை.

பிரிக்ஸ் அமைப்பில் அங்கம் வகிக்கும் பிற நாடுகளான பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இரசியா, சீனா போன்றவை காசா/ பாலஸ்தீனம் / வெனிசுலா / ஈரான் போன்ற அனைத்துப் பிரச்சனைகளிலும் உறுதியான நிலைபாட்டை எடுத்துள்ளன. மேலும் அமெரிக்காவுக்கு எதிரான தங்களது கண்டனத்தை உரத்துப் பதிவு செய்துள்ளன.

சர்வதேசப் பிரச்சனைகளில் இந்தியா, அமெரிக்கச் சார்பு நிலையை எடுத்துவிட்டதால், இந்தியாவின் முக்கியத்துவம் தற்பொழுது குறைந்துவிட்டது. இதனால், ஈரான் மீதான அமெரிக்காவின் போரில் சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க இந்தியா அழைக்கப்படவில்லை. ஆசியக் கண்டத்தில் இந்தியாவை ஓரங்கட்டிவிட்டு அமைதிப் பேச்சுவார்த்தையை பாகிஸ்தான் முன்னெடுக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதுவும் இந்திய அயலுறவு கொள்கையில் ஒரு பெரும் பின்னடைவாகும்.

எனவே உலக அளவில் கடும் தாக்கத்தை உருவாக்கியுள்ள அமெரிக்க - இசுரேலியப் போர்க் கூட்டணியை எதிர்த்து இந்திய மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். நாடுகளின் இறையாண்மையை மதிக்கவும், அநீதியான போர்களை எதிர்க்கவும் முன்வர வேண்டும் என இந்திய அரசுக்கு மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும். மதம், கட்சி, பொருளாதார மேலாதிக்கம் ஆகியவற்றைப் புறந்தள்ளி, சமத்துவமான புதிய அயலுறவுக் கொள்கை இந்தியாவில் அமைய அனைவரும் பாடாற்ற வேண்டும்.

♦♦♦

தோழர் தியாகு பேட்டி

கண. குறிஞ்சி

(தோழர் தியாகு (சனவரி 30/1950) அவர்கள் தமிழ்ச் சமூகத்தின் தவிர்க்கமுடியாத ஆளுமை ஆவார். பேச்சு, எழுத்து, போராட்டம், சிறைவாழ்வு, சித்திரவதை என்பதாக அவரது வாழ்வு நீள்கிறது. ஏற்கெனவே அவரது பேட்டிகள் காட்சி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள் ஆகியவற்றில் வந்துள்ளன. குறிப்பாக கீற்று இணைய தளத்தில் மூன்று பகுதிகளாக அவரது நேர்காணல் விரிவாக வந்துள்ளது. எனவே அவற்றில் இடம்பெற்றுள்ள கேள்விகளை இயன்ற அளவு தவிர்த்து, இந்தப் பேட்டி தொடர்கிறது.)

● **கண.குறிஞ்சி: முதலில் காங்கிரஸ் கட்சியில் இருந்துதான் உங்கள் அரசியல் பயணம் தொடங்கி உள்ளது. அந்தப் பின்னணியில் கண்ணதாசன், ஜெயகாந்தன் மற்றும் ஈவெகி சம்பத் ஆகியோருடனான உங்கள் அரசியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இயலுமா?**

☆ **தோழர். தியாகு:** 1960களின் தொடக்கத்தில் எங்கள் குடும்பம் திருவாரூரில் இருந்தது. திருவாரூர் கீழவீதியில் அவ்வப்போது நடக்கும் அரசியல் பொதுக்கூட்டங்களில்தான் என் அரசியல்

கல்வி தொடங்கியது. பெரியார், குன்றக்குடி அடிகளார், அண்ணா, நாவலர், கலைஞர், ஜீவானந்தம் ஆகிய தலைவர்களின் உரையை அப்பாவின் தோளிலோ மிதிவண்டிப் பின்னிருக்கை யிலோ அமர்ந்தபடி கேட்டு வளர்ந்தேன். எனக்கு வாய்த்த ஆசிரியர்கள் தொடக்கப்பள்ளியில் ('சின்னக்குத்தூசி'யாக நாமறிந்துள்ள) தியாகராஜன், உயர்நிலைப்பள்ளியில் பி.சி. கணேசன், எப்போதும் எனக்கு வழிக்காவலும் முடிந்த வரை வகுப்பாசிரியருமான என் தகப்பனார்! ஏதோ ஒரு வகையில் என் அரசியல் அறிவுக் கூடையை இவர்கள் நிரப்பிக் கொண்டே இருந்தார்கள்.

1962 இந்திய-சீன எல்லைப் போரின் போது திருவாரூர் கீழவீதியில் அண்ணா ஆற்றிய உரையின் தாக்கத்தால்தான் மறுநாள் பள்ளியில் நடந்த கூட்டத்தில் பேசினேன். அதுவே என் முதல் மேடைப் பேச்சு!

திமுக-விலிருந்து பிரிந்து சென்ற ஈவெகி சம்பத், கண்ணதாசன் போன்ற தலைவர்கள் 1961இல் தமிழ்த் தேசியக் கட்சி தொடங்கினார்கள். தமிழ்நாட்டிலேயே திருவாரூரில் மட்டும்தான் இந்தக் கட்சி ஓரளவுக்கு வலுப்பெற்றுத் திமுகவுக்குப் போட்டியாக விளங்கியது போல் எனக்குத் தோன்றியது. திமுக படிப்பகம் என்றால் பக்கத்திலேயே ததேக படிப்பகமும் இருக்கும். தமிழ்த் தேசியக் கட்சியின் முதல் மாநில மாநாடு திருவாரூரில் நடந்தது. அதை முன்னிட்டு எங்கள் வீட்டருகே வலிவலம் தேசிகர் மாளிகையில்தான் சம்பத் முதலான தலைவர்கள் தங்கி யிருந்தார்கள். தலைமை ஆசிரியர் பி.சி. கணேசன், நூலகர் வைத்திலிங்கம் ஆகியோரின் நட்புக்காக அப்பாவும் அந்த மாநாட்டுக்கான விருந்தோம்பலில் துணைசெய்தார்கள். சம்பத், கண்ணதாசன் போன்ற தலைவர்களை அருகிலிருந்து பார்க்க அதுவே எனக்கு முதல் வாய்ப்பாயிற்று.

மாநாட்டு மேடையில் சம்பத், கண்ணதாசன் அமர்ந்திருக்க பாரதிதாசன் பேசினார் என்பது எனக்கு நினைவுள்ளது. பாவேந்தரை நான் பார்த்த முதலும் கடைசியுமான தருணம் அது.

1962 பொதுத் தேர்தலில் திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரசுக் கட்சியின் சார்பில் கோட்டூர் அம்பிகாபதியும் திமுக ஆதரவோடு சுதந்திரா கட்சியின் இளஞ்சிங்கமும்

போட்டியிட்டார்கள். அம்பிகாபதியை ஆதரித்து நடக்கிற ஊர்வலங்களில் மற்றச் சிறுவர்களோடு நானும் கலந்து கொண்டு முழக்கம் போடுவேன்.

ஒருநாள் நான் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அது ஒரு மிதிவண்டி ஊர்வலம். சாரை சாரையாக நீண்டு நீண்டு சென்றது. பெரிய பெரிய செங்கொடிகள், அரிவாள் கதிர் விளம்பரப் பதாகைகள்! அதிரும் முழக்கங்கள்! எனக்கு வியப்போ வியப்பு! அப்பாவிடம் கேட்டேன். ஆமாம், ஆமாம். இதுதான் கம்யூனிஸ்டுக் கட்சி! இவ்வளவு பேர் எங்கிருந்து வந்தார்கள்? ஊரில் இவர்களை நான் பார்த்ததில்லையே! அப்பா சொன்னார்: சுத்து பட்ட கிராமங்கள்ல பள்ளு பறையெல்லாம் இந்தக் கட்சிலதாண்டா பெரிய தம்பி இருக்காங்க!

என் 12 வயதில் கம்யூனிஸ்டுக் கட்சி பற்றி ஒரு நல்வித்து மனத்தில் விழுந்த தருணம் அதுதான்! பள்ளு பறைக்கான கட்சி என்ற பெருமை! தீண்டாமை எனக்குத் தெரியும் என்பதால்! தேர்தல் முடிவு வந்த போது அம்பிகாபதி வென்றார், இளஞ்சிங்கம் படுதோல்வி அடைந்தார்! இளஞ்சிங்கத்தைக் காட்டுக்குத் துரத்திய அம்பிகாபதி என்று வெற்றி ஊர்வலத்தில் முழக்கம் கொடுத்தேன். ஆனால் என் கவலை கம்யூனிஸ்டு வேட்பாளர் வடிவேல் என்ன ஆனார் என்பதாகவே இருந்தது. அவர் 2 அல்லது 3 ஆயிரம் வாக்கு வேறுபாட்டில்தான் தோற்றுப் போயிருந்தார்.

இந்த இடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்த ஊர்வலத்தைப் பார்ப்பதற்கு முன்பே கீழவீதிப் பொதுக்கூட்டத்தில் ஜீவா உரை கேட்டுள்ளேன். 1962 தேர்தலுக்குப் பின் பாலதண்டாயுதம் பேசியும் கேட்டுள்ளேன். ஆனால் அந்த உரைகள் ஏன் என்னிடம் கம்யூனிஸ்டுக் கட்சி மீது மதிப்புண்டாக்க வில்லை என்று எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் சிறப்பு பற்றிப் பேசுவதை விடவும் காங்கிரசின் பண்டித நேருவின் - புகழ்பாடுவதிலேயே குறியாக இருந்தார்கள். இரண்டாவதாக திமுகவைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவார்கள். காங்கிரசு எதிர்ப்பு தேவையாக இருந்த நேரத்தில் திமுக எதிர்ப்பை முதன்மைப்படுத்தியது என்ற பெரும்பிழையும் கம்யூனிஸ்டுக் கட்சி வளராமல் தேய்ந்து போனமைக்கு ஒரு காரணம் எனலாம்.

போகட்டும். 1964இல் உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்து வயது போதாமையால் கல்லூரியில் சேர முடியாத நிலையில்... வலங்கைமானுக்கு மாறி வந்து... தட்டச்சு பயிலப் போன இடத்தில் **என் அறிவுத்தந்தையாக அமீர் ஜான்** கிடைத்தார். என் வினாக்களுக்கெல்லாம் விடை, ஐயங்களுக்கெல்லாம் தெளிவு 'ஜான் சார்'தான் எனக் கண்டேன். **அவரால் நாத்திகன் ஆனேன், சாதி சமய மறுப்பாளன் ஆனேன், பொதுமைவிரும்பி ஆனேன்**. சிபிஎம் மீது ஒரு மரியாதை இருந்தது. ஆனால் 1967 பொதுத் தேர்தலில் சுதந்திராக் கட்சியோடு கூட்டுச் சேர்ந்ததில் கசந்து போய் விட்டது. ராஜாஜி மீது வெறுப்பு, காமராசரைப் பற்றிப் பெரிய மரியாதை இருந்தது. கல்விக் கண் திறந்தவர்! தந்தை பெரியார் இந்த மதிப்பைப் பெரிதும் வளர்த்து விட்டவர்.

1967 தேர்தல் காலம் குடந்தை கல்லூரியில் பட்டப்படிப்பு முதலாண்டு. அரசியல் ஆர்வம் படிப்பார்வத்தைப் பின்னுக்குத் தள்ளி விட்டது. குடந்தையில் காங்கிரசு-திராவிடர் கழக மாணவர்களுடன் சேர்ந்து தேர்தல் பரப்புரைக்குப் போக ஆரம்பித்தேன். ஒரு நாள் மாலை வலங்கைமானில் காங்கிரஸ் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் திடீரென்று என்னைப் பேசச் சொல்லி விட்டார்கள். மறுக்க முடியாத ஆசையுடன் பேசி விட்டேன். அதிலிருந்து தினமும் வரிசையாகக் கூட்டங்கள் பெரும்புள்ளிகள் அறிமுகம் வீட்டில் அப்பாவின் எதிர்ப்பு!

இப்படிப் பணக்காரப் பிற்போக்குக் கட்சியான காங்கிரசை ஆதரிப்பது சரிதானா? என்ற ஐயுறவு மட்டும் இருந்தது. அமீர் ஜானைக் கேட்டேன். அவர் விளக்கினார்: இதில் ஒன்றும் தவறில்லை, இன்றைக்கு கம்யூனிஸ்டுத் தலைவர்களாய் இருப்பவர்கள் எல்லாம் காங்கிரசில் இருந்தவர்கள்தாம். கிருஷ்ண மேனன் போன்றவர்கள் கதர் சுமந்து விற்றவர்கள். காங்கிரசு வெறும் கட்சியல்ல. அது பேரியக்கம். அதில் இருந்த படி நம் கொள்கைகளுக்காக நாம் போராடலாம்.

காமராசர், பெரியார் போன்றவர்களின் வழிகாட்டுதல் என்ற ஆறுதல் இருந்தது. என்ன தவறு இருந்தாலும் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்பினேன். அவர்களை எதிர்க்கிற கட்சி என்பதால் திமுக மீது வெறுப்பு இருந்தது.

ஒரு முறை பெரியார் முன்னிலையிலேயே பேசச் சொன்னார்கள். ஆனால் அறிமுகம் ஆகவில்லை. காமராசர் ஏறத்தாழ வழிபாட்டுக்குரியவராக முன்னிறுத்தப்பட்டார். அவர்

அப்போதெல்லாம் நெருங்க முடியாத தொலைவில் மிகுந்த உயரத்தில் இருந்தார். அவரோடு அறிமுகமாவது, பழகுவது என்ற நினைப்புக்கே இடமில்லை. அவர் அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர். நானோ ஒரு மாணவன், கட்சியில் ஒரு 'பிரசங்கி'! ஈவெகி சம்பத், கண்ணதாசன் எல்லாரும் தேர்தல் பரப்புரைக்கு வந்தார்கள். ஆனால் அது வரை அறிமுகம் இல்லை.

தேர்தல் முடிந்து திமுக ஆட்சி அமைந்த பிறகு என் அரசியல் ஈடுபாடு தீவிரமாயிற்று. காமராசர் புகழ் பாடுவதற்கு சொல்லின் செல்வர் ஈவெகி சம்பத் "ஆரோக்கிய அரசியல்" விளக்கங்கள் தருவார். தமிழக அரசியல் என்பது இருதுருவ அரசியலாகி விட்டது என்பார். "ஒரு பக்கம் காமராஜ், மறு பக்கம் இராஜாஜி என்று புரிந்து கொள்ள வேண்டும். புத்தகங்களில் புழுக்களாக நுழைந்து விளையாடும் கம்யூனிஸ்டுகளுக்கு இது விளங்கவில்லையே" என்பார். கண்ணதாசன் எழுதிக் குவித்த கட்டுரைகளிலும் மடல்களிலும் பாக்களிலும் காமராசர் காவிய நாயகனாகப் போற்றப்பட்டார் - சிவகாமியின் புதல்வர், காலா காந்தி, கருப்பு வைரம், களத்திலே தருமர், சோசலிசக் கருமவீரர், கலைமகளின் தலைமகன், ஏழைப் பங்காளர், எளியோரின் தெய்வம்... சொல்லி மாளாது.

திமுகவுக்குப் போட்டியாக மாணவர்களைத் திரட்ட காமராசர் விரும்பினார். அதற்குத் தமிழ்ப் பற்றைக் கையிலெடுக்கத் திட்டமிட்டார். சென்னை சட்டக் கல்லூரி மாணவராக இருந்த தஞ்சை அ. இராமமூர்த்தியை அமைப்பாளராகக் கொண்டு தேசிய மாணவர் தமிழ் வளர்ச்சிக் குழு என்ற அமைப்பை நிறுவச் செய்தார். இடதுசாரிகளாக அறியப்பட்ட வாழப்பாடி கூ. இராமமூர்த்தி, பசுபதி தனராஜ், தண்டாயுதபாணி, திருமாறன் போன்றவர்களும் துணைநின்றார்கள். இந்த அமைப்பின் முதல் மாநில மாநாடு சென்னை தேனாம்பேட்டை காங்கிரசு திடலில் நடைபெற்றது. அதற்காகவே நான் முதன்முதலாகச் சென்னை வந்து, சத்தியமூர்த்தி பவனில் சில நாள் தங்கினேன். அரசியலில் முனைப்பாக இருந்த இடது சிந்தனை கொண்ட மாணவர்களோடு உரையாட முடிந்தது. ஏற்கெனவே அமீர் ஜான் தமிழ்வழிக் கல்வி பற்றி எனக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தியிருந்தார். அது பற்றி எவரோடும் விவாதிப்பேன். ஆட்சி மொழியைப்

பொறுத்த வரை மும்மொழிக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தேன். மாநாட்டில் மாலை கூட்டம் நிரம்பி வழிந்த நேரத்தில் நான் பேசினேன். மேடையில் காமராசர், சம்பத், கண்ணதாசன், தமிழ்வாணன், ஜெயகாந்தன், பாலதண்டாயுதம் அனைவரும் இருந்தனர். 'யார் இந்தப் பையன்? என்பது போல் பார்த்துக் கொண்டிருந்தனர். தமிழ்வழிக் கல்வியையும் மொழிக் கொள்கையில் இந்தியத் தேசியப் பார்வையையும் வலியுறுத்திப் பேசினேன். மேடையில் தமிழ்த் தாய் சிலை வைக்கப்பட்டிருந்தது. நான் பகுத்தறிவுக்கு முரணான மொழி வழிபாட்டை எதிர்த்துப் பேசினேன். நான் பேசப் பேச கூட்டத்தில் ஒரு கனத்த அமைதி கவிந்தது. பேசி முடித்து வெளியே வந்து கொண்டிருந்த போது பாலதண்டாயுதம் கைகுலுக்கினார். ‘‘துணிச்சலான பேச்சு’’ என்றார். ’’நன்றி! துணிச்சல் இருக்கட்டும். சரியா? சொல்லுங்கள்’’ என்றேன்.

இந்த மேடைதான் ஒருங்கே எல்லாத் தலைவர்களுக்கும் என்னை அறியத் தந்தது. அதன் பிறகு மாவட்டம் தோறும் நடந்த மாணவர் மாநாடுகளில் என்னை விரும்பியழைத்துப் பேசச் செய்தனர். சேலம் மாநாட்டில் பிற்பகலில் அப்போதைய தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடமிருந்து வந்த அழைப்புக்காக அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் காமராசர் உடனே சென்னை புறப்பட வேண்டியிருந்தது. அப்போது அவர் என்னை மட்டும் அழைத்துப் பேசச் சொல்லி, ’’நண்பர் தியாகு கேட்டதையே திமுக ஆட்சியைப் பார்த்து நானும் கேட்க விரும்புகிறேன்’’ என்று பேசி விட்டுப் புறப்பட்டார்.

சிதம்பரம் மாநாட்டின் போது உணவு இடைவேளையில் என்னோடு பேச நேரிட்ட போது காமராசர் சிரித்துக் கொண்டே ‘‘சாஸ்திரி’’ என்றழைத்தார். நான் திகைத்துப் போய்ப் பார்த்த போது அவர் ‘‘வலங்கைமான்தானேங்கறேன், சீனிவாச சாஸ்திரி ஊராச்சே?’’ என்று சொல்லிச் சிரித்தார்.

பழ. நெடுமாறன் முன்னின்று ஒழுங்கு செய்த மதுரை மாநாட்டில் மொழித் திணிப்புக்கும் இந்தியப் பெருமுதலியத்தின் சந்தைத் தேவைக்குமான தொடர்பு பற்றிப் பேசினேன். நான் பேசி முடித்த போது கண்ணதாசன் எழுந்து வந்து ‘‘உங்கள் பேச்சைப் பெரியவர் (காமராஜர்) ரசித்துக் கேட்டார்’’ என்றார்.

அந்த மாநாட்டில் ஜெயகாந்தனும் பேசினார் மதுரை முத்துவுக்கு 'சவால்' விடும் முரட்டுப் பேச்சு!

ஜெயகாந்தன் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தேன். ஆனால் நெருங்கிப் பழகவில்லை. நோக்கமா? வழிமுறையா? போன்ற தத்துவக் கேள்விகள் இருந்தால் அவரிடம் கேட்பேன். நறுக்கென்று விடை சொல்வார். ஜெயபேரிகை ஏட்டில் அவர் எழுதுவதையெல்லாம் விடாமல் படித்து விடுவேன். கண்ணதாசன் என்ற இலக்கிய மாத இதழில் ஜெயகாந்தன் சினிமாவுக்குப் போன சித்தாளு என்ற பெயரில் கதை எழுதினார். இந்த இதழில் கண்ணதாசன் எழுதிய சில கவிதை வரிகளை இப்போதும் நினைவுகூர்வதுண்டு:

“ஆலை அரசுகள் சோலை மிராசுகள்
பாலில் மிதந்தது போதும் - இங்கு
வேலை இழந்தவர் வீதி முனைகளில்
கூழுக்கலைவதைப் பாரும் அவர்
கூட்டத்தை ஓரணி சேரும்.”

அது ஒரு நீண்ட கவிதை. அதன் தலைப்பு: நான் ஒரு நக்சலைட்டு. கேரளத்தில் புல்பள்ளி காவல் நிலையம் தாக்கப்பட்டு அஜிதா கைது செய்யப்பட்ட நேரம். அது பற்றியும் அஜிதாவைப் போற்றிக் கண்ணதாசன் எழுதினார்.

மதுரை முத்து இல்லத் திருமணத்துக்கு வந்த நாவலருக்கும் கலைஞருக்கும் எதிராக நெடுமாறன் தலைமையில் இளைஞர் காங்கிரசு சார்பில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் நெடுமாறனும் மற்றவர்களும் தளைப்படுத்தப்பட்டார்கள். கைதின் போது காங்கிரசு இளைஞர்கள் கழற்றி வைத்த மைனர் செயின் முதலானவற்றின் மதிப்பை நவசக்தி நாளேடு பெருமையுடன் வெளியிட்டது.

நெடுமாறன் பிணையில் வர மறுத்து விட்டார். தம்மைச் சிறையிலடைத்த நீதிபதியைக் கண்டித்துக் கூட்டம் நடத்தும் படி சொல்லியனுப்பினார். ஆனால் அப்போது மாநில இளைஞர் காங்கிரசு அமைப்பாளராக இருந்த குமரி அனந்தன் தயக்கம் காட்டினார். நாங்கள் மாணவர் காங்கிரசு சார்பில் நெடுமாறன் சொன்னபடி பொதுக்கூட்டம் நடத்தினோம். கூ.ரா. (வாழப்பாடி இரமமூர்த்தி) பேசினார். மறுநாள் தங்கம் திரையரங்கில்

பொதுக்கூட்டத்துக்கு கண்ணதாசன் வந்து விட்டார். நான் அவரை காலேஜ் அவுஸ் அறையில் பார்த்து அது வரை நடந்திருப்பதை விளக்கினேன். அரங்கக் கூட்டத்தில் குமரி அனந்தனும் பேசினார். அவரை மறைமுகமாகக் குறை சொல்வது போல் நான் பேசினேன். கண்ணதாசன் இறுதியாகப் பேசினார். அப்படி ஒரு சொற்பெருக்கை அதுவரை நான் கேட்டதில்லை. காவல் துறை, நீதித் துறை எதையும் விட்டு வைக்கமல் சாடித் தீர்த்தார். எப்போதுமே காவல்துறையைக் கிழிப்பதென்றால் எனக்கு மகிழ்ச்சிதான்!

1969 காங்கிரஸ் பிளவுக்கு முன்னந்திப் போது. காமராசருக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்த பொள்ளாச்சி மகாலிங்கம் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சத்தியமூர்த்தி பவன் வாசலில் ஆர்ப்பாட்டம் நடத்த மாணவர்கள் கூடியிருந்தோம். கண்ணதாசனும் எங்களோடு சேர்ந்து கொண்டார். உள்ளே செயற்குழு கூடியிருந்த போது வெளியே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். வைரக் கடுக்கண், உச்சிக் குடுமி… இப்படிப்பட்ட ஆட்களைத் தலைமையில் வைத்துக் கொண்டா சோசலிசம் கொண்டுவரப் போகிறார் நம் தலைவர்? என்று கேட்டு கண்ணதாசன் உரையாடலைத் தொடங்கினார்.

அடுத்து நடக்கவிருந்த பரிதாபாத் காங்கிரசு பற்றிய பேச்சு வந்தது. கண்ணதாசன் அப்போது அனைத்திந்தியக் காங்கிரசு கமிட்டி உறுப்பினர். இந்திரா காந்தியின் பத்து அம்சத் திட்டம் பற்றிச் சொன்னவர் காங்கிரசும் கம்யூனிஸ்டுகளும் அணிசேர வேண்டும் என்று பரிதாபாத் கூட்டத்தில் தீர்மானம் கொண்டுவரப் போகிறேன் என்றார். அவர்கள் இதை ஏற்க வேண்டுமே? என்றேன். ஏற்கவில்லை என்றால் அவர்கள் anti-national என்று தெரிந்து விடும் என்றார். Anti-congress என்பதும் anti-national என்பதும் ஒன்றா? எனக் கேட்டேன். இல்லை, போகிற போக்கைப் பார்த்தால் anti-congressதான் pro-nationalஉம் pro-congressதான் anti-nationalஉம் ஆகி விடும் போல் உள்ளது என்று சொல்லிச் சிரித்தார்.

கண்ணதாசன் இப்படிச் சிந்தனையைத் தாறுமாறாகக் கிளறி விட்டுக் கொண்டிருக்க, என்னைப் போன்றவர்களை அலைக்கழித்த முரண்பட்ட போக்குகளுக்கு நடுவில் சம்பத் நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தார். அவரைத் தமிழ்நாடு

காங்கிரசுத் தலைவராக்க வேண்டும் என்பது எங்கள் வேணவா. கருப்பையா மூப்பனாரோ ''என்னைத் தலைவராக்க ஆதரவு தருவீர்களா?'' என்று சம்பத்திடமே கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தார்.

திருவரங்கம் அம்மாத் தோப்பில் ஒரு வார காலம் மாணவர்களுக்கான சோசலிசப் பயிற்சி முகாம் நடந்தது. செவிக்கும் சிந்தைக்கும் வயிற்றுக்கும் தடபுடல் விருந்து! காமராசர் முன்னிலை வகித்தார். பெரும்பாலான நிகழ்வுகளில் சம்பத் உடனிருந்தார். இளந்துருக்கர் சந்திரசேகர், விகே கிருஷ்ண மேனன், மோகன் தாரியா, விகேஆர்வி ராவு உள்ளிட்ட பெரிய பெரிய ஆட்கள் ஒவ்வொரு நாளும் வந்து சோசலிசம் பற்றி உரையாற்றினார்கள். அசோக மேத்தா திண்டில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு இந்தியத் தாயின் கருப்பையை அமெரிக்க முதலீட்டுக்குத் திறந்து விட வேண்டும் என்று பேசிய போது வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்தோம். அசோக மேத்தா ''கப்பிடலிசம் காலாவதியாகி விட்டது'' என்று கூறியதோடு நில்லாமல் சோசலிசமும் காலாவதியாகி விட்டது என்ற போது மீண்டும் கொதித்தோம். அப்போது சம்பத் குறுக்கிட்டு ''கப்பிடலிசத்தை அடைந்து விட்டோம், அது காலாவதியாகி விட்டது, ஆனால் நாம் இன்னும் சோசலிசத்தை அடையவே இல்லை என்பதால் அது காலாவதியானதாகச் சொல்ல முடியாது'' என்று விளக்கமளித்து எங்களை ஆற்றுப்படுத்தினார்.

சோசலிசப் பயிற்சி முகாமில் சந்திரசேகரோடு நீண்ட நேரம் உரையாடினேன். நிறையக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஏகபோகங்கள் பற்றிய மகலனோபிஸ் குழு அறிக்கையில் இடம்பெற்ற தரவுகள் அவரிடமிருந்து எனக்குக் கிடைத்தன. இந்திய ஏகபோக முதலாளிகளின் சொத்து விவரம், முன்னாள் மன்னர்களுக்குக் கிடைத்து வரும் சலுகைகள், (ராஜ மானியங்கள்) குறித்தெல்லாம் அவர் தந்த ஆவணங்களைப் படித்துதான் **"பத்து அம்சத் திட்டம்" என்ற குறுநூல் எழுதி வெளியிட்டேன். அதுதான் நான் எழுதிய முதல் நூல்.** எழுதுவதற்கு குடந்தை சிபிஎம் தோழர்கள் அறிவுரைகள் தந்துதவினார்கள். தாராசுரம் சோமு செட்டியார் அச்சிட்டுக் கொடுத்தார். தஞ்சை சோசலிசக் கருத்தரங்கில் டாக்டர் கோபி வெளியிட தஞ்சை அ. இராமமூர்த்தி பெற்றுக் கொண்டார். இந்த

வெளியீடு கட்சிக்குள் பெரிய சலசலப்பை ஏற்படுத்தி விட்டது. பெரியவர் (காமராசர்) தலையிட்டு “நண்பர் தியாகு சொல்வதில் தவறில்லை” என்று முடித்து விட்டார். ஆனால் அப்போதே எனக்கு ’நக்சலைட்’ பட்டம் வந்து விட்டது.

தஞ்சை சோசலிசக் கருத்தரங்கில் சி. சுப்ரமணியம் முன்மொழிந்த ’’பசுமைப் புரட்சி’’ ஆய்வுரை மீது இடதுசாரி மாணவர்கள் முடிவெடுத்த படி நான் கேள்விகள் எழுப்பி, நில உச்சவரம்புச் சட்டங்களை நிலக்கிழார்கள் ஏய்த்துக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அவர் மீதே குற்றஞ்சுமத்தப் போய், அது அவருக்கும் மாணவர்களுக்கும் இடையே சூடான வாக்குவாதமாக மாறிய போது சி.சு. கோபித்துக் கொண்டு வெளியேறினார். சம்பத் அவரைச் சமாதானப்படுத்த முயன்ற போது “நீங்கள் என்னைத் திட்டமிட்டே அவமதிக்கின்றீர்கள்” என்று கத்தி விட்டுப் போய் விட்டார்.

சம்பத் முதன்மைப் பேச்சாளராகவும் நான், என் மாணவ நண்பர் (வேறு) சம்பத், ஹக்கீம் ஆகியோரில் ஒருவர் அல்லது இருவர் துணைப் பேச்சாளராகவும் கலந்து கொண்டு பேசிய கூட்டங்கள் பல. ஒரு முறை அரியலூர் ஒற்றுமைத் திடலில் உள்ளூர் திமுகவினரின் கடுமையான வன்மிரட்டலை மீறி நடந்த பொதுக் கூட்டத்தில் நாங்கள் பேசி முடித்து இரவு விருந்துக்கு அமர்ந்த போது நான் மரக் கறி உணவு கேட்டேன். யார் அந்த வீரசைவர்? என்று சம்பத் கேட்டார். அமீர் ஜான் வழியில் நான் புலால் மறுப்பைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த காலம். பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு இந்தக் கொள்கை சரிப்படாது என்பதைப் பல முறை எனக்கு எடுத்துக் கூறி நான் மாறுவதற்குத் தூண்டுதலாக இருந்தவர் சம்பத். நான் காங்கிரசு மீது அறவே நம்பிக்கை இழந்த பின் கடைசியாக சாலியமங்கலம் அம்மாப்பேட்டையில் சம்பத்துடன் ஒரு பொதுக் கூட்டம் பேசினேன். அதன் பிறகு அவருடன் எவ்விதத் தொடர்பும் இல்லை.

சிறையில் 1972-73 வாக்கில் தோழர் ஏஜிகே (அ.கோ. கஸ்தூரிரெங்கன்) தூக்குக் கொட்டடியில் இருந்த போது அவரைத் தூக்கிலிடுவதற்கு எதிராகப் பெரியார் அறிக்கை வெளியிட்டார். ஈவெகி சம்பத்தும் அறிக்கை வெளியிட்டார். எம் கல்யாணசுந்தரம் உட்படப் பலரும் முயற்சி எடுத்தனர். எதற்கும் அன்றைய மாநில அரசு செவிசாய்க்கவில்லை.

காங்கிரசைக் கைகழுவி விட்டு செவ்வியக்கத்துக்கு வந்த பின் கண்ணதாசனை மறந்தே போனேன். சிறைப்பட்ட பின் நீதிமன்றப் புறக்கணிப்பின் போது கூண்டில் நின்று பாடுவதற்காகத் திரை யிசையில் பாடல்கள் எழுதலானேன். அப்போது கண்ணதாசனின் பாடல்களே பெரிதும் கைகொடுத்தன. ஒவ்வொரு விசாரணை நாளிலும் முதலில் ‘‘கோர்ட்டு என்ன கோர்ட்டு’’ பாடுவோம் ‘‘மெட்ராஸ் நல்ல மெட்ராஸ்’’ பாட்டின் இசைக்கு எழுதிய பாடல் அது. தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதியர் குப்பண்ணன் அதற்கு ’பிரேயர்’ என்று பெயர் கொடுத்திருந்தார். இப்படிப் பல பாடல்கள். வாலி எழுதிய ‘‘காதுகொடுத்துக் கேட்டேன் ஆகா குவா குவா சத்தம்’’ என்ற இசைக்கு நான் எழுதிய ‘‘வோட்டுக் கேட்டு ஜெயித்தேன் அது போட்டவர்கள் குற்றம்’’ என்ற பாட்டு வெளியிலும் பரவி மேடைகளில் பாடப்பட்டதாக அறிந்தோம்.

சிறை வாழ்க்கையில் கண்ணதாசனைப் பார்க்கும் வாய்ப்பு ஒரே ஒரு முறை வந்தது. 1980-81இல் நான் சென்னை மத்தியச் சிறையில் தனித் தொகுதியில் இருந்தேன். சிறைக்கைதிகள் அனைவருக்கும் சிறப்பு உணவு வழங்குவதற்காகக் கவிஞர் வரப்போவதாகச் சொன்னார்கள். எங்கள் பகுதிக்கு வரும் போது பார்க்கலாம் என்றிருந்தேன். ஆனால் சிறை நிர்வாகம் எப்படியோ அவர் என்னைப் பார்க்க விடாமல் செய்து விட்டது. நானும் அது பற்றிக் கவலைப்படவில்லை. அடுத்த சில மாதங்களில் அமெரிக்கா சென்ற கவிஞர் உயிருடன் திரும்பவே இல்லை.

சிறையிலிருந்து விடுதலை ஆகி வந்த பின் சில நிகழ்ச்சிகளில் ஜெயகாந்தனைப் பார்த்தேன். தஞ்சாவூரில் குன்றக்குடி அடிகளார் தலைமையிலான ஒரு கருத்தரங்க மேடையில் கருத்து மோதல் ஏற்பட்டதும் உண்டு. ஆனால் பழைய பழக்கத்தை இருவருமே நினைவுபடுத்திக் கொள்ளவில்லை.

சம்பத், கண்ணதாசன், ஜெயகாந்தன்... இவர்கள் பேச்சிலும் எழுத்திலும் பேராளுமைகள் என்பதில் மறுப்புக்கு இடமில்லை. ஆனால் இவர்களிடமிருந்து நான் கற்றதாகச் சொல்வதற்குப் பெரிதாக எதுவும் இல்லை. ஒருசிலவற்றில் இவர்களை எதிர்நிறை ஆசான்களாகவே கருத வேண்டும். இறுதி நோக்கில்... இவர்களிடம் நிலையான, உறுதியான கொள்கை இல்லை; அரசியலில் தங்களைத் தாங்களே மையப்படுத்திக் கொண்டு விளம்பர மயக்கத்தில் மனம்போன போக்கில் இயங்கியவர்களை

வெறும் திறமைகளுக்காக இளைஞர்களுக்குப் பரிந்துரை செய்யலாகாது என்றுதான் கருதுகிறேன்.

● தொடர்ந்து சாரு மசூம்தாரின் அழித்தொழிப்புக் கோட்பாட்டில் ஈர்க்கப்பட்டு அதில் செயல்படத் தொடங்கி உள்ளீர்கள். சாரு மசூம்தாரை நீங்கள் நேரில் சந்தித்தீர்களா? விவாதித்தீர்களா? அது குறித்த செய்திகளைப் பதிவிடவும்.

☆ "இந்திய நாட்டின் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும்" என்ற தலைப்பில் லிபரேசன் ஏட்டில் வெளிவந்த சாரு மசூம்தாரின் எழுச்சியுரையால் ஈர்க்கப்பட்டு, இல்லமும் கல்வியும் துறந்து இயக்கத்துக்கு வந்த முதல் தமிழ்நாட்டு மாணவன் நான். 1969 செப்டெம்பரில் வீட்டுச் சிறையிலிருந்து தப்பி, இயக்கப் பணிக்காக பெரும்பண்ணையூர் சேரி வந்து சேர்ந்த சில நாளில் திருச்சிராப்பள்ளியில் பெல் குடியிருப்புக்கு ஒரு தோழரைப் பார்க்கவென்று என்னை அனுப்பி வைத்தனர். அந்தத் தோழர்தான் சாரு மசூம்தார் என்று அங்கு போன பிறகுதான் தெரிந்தது. மெலிந்து சிவந்த தோற்றம், கூரிய நாசி, பரபரப்பாகக் காணப்பட்டார். அகவை 50 இருக்கலாம்.

அவரிடம் என்னைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். அருகில் உட்கார வைத்து முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். இந்தியாவெங்கும், குறிப்பாக வங்காளத்திலும் ஆந்திரத்தில் சிறிகாகுளத்திலும் கொழுந்து விட்டெரியும் ஆய்தப் போராட்டம் பற்றிப் பெருமையாக எடுத்துச் சொன்னார். வசந்தத்தின் இடி முழக்கம், வங்கக் கடல் அலைகளில் பற்றியெரியும் தீ, சிறிகாகுளம் மலைகளில் மோதி எதிரொலிக்கும் வேட்டோசை, பீர்பூம் சமவெளிகளில் அணிவகுக்கும் செஞ்சேனை... என்றெல்லாம் அவரது பேச்சிலும் எழுத்திலும் மிளிர்ந்த அணிநயத்தால் ஈர்க்கப்பட்டவன் ஆயிற்றே! இதோ நேரில் அவர் பேசப்பேச இமைகொட்டாமல் வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

அன்றைய தினமணி நாளிதழில் இடம்பெற்ற முதன்மைச் செய்திகளைப் படித்து ஆங்கிலத்தில் சொல்லச் சொல்லி ஆர்வமாகக் கேட்டறிந்தார் சாரு. இடையிலேயே வெள்ளைத் தாளில் புகையிலைத் தூளை வைத்து மெல்லச் சுருட்டிப் புகைத்துக் கொண்டார். இதோ ஒரு நல்ல செய்தி என்று,

விசாகபட்டினம் மத்திய சிறையிலிருந்து 11 நக்சல் கைதிகள் தப்பிச் சென்ற செய்தியை நான் படித்துக் காட்டிய போது துள்ளி எழுந்து என் தொடையில் தட்டி மகிழ்ந்தார். என்ன நடந்திருக்கும் என்பதை எனக்கு விளக்கிச் சொன்னார்.-

விசாகபட்டினம் சிறையில் ஏராளமான சிறிகாகுளம் தோழர்களை அடைத்து வைத்திருந்தனர். அவர்களில் முக்கியமானவர்களை ஏதாவது சாக்கிட்டு வெளியே அழைத்துப் போய் மலைக் காட்டில் 'மோதல்-கொலை' செய்வதைக் காவல் படை வழக்கமாகக் கொண்டிருந்தது. அடுத்த நாளுக்குரிய பட்டியலில் இருந்த 11 தோழர்களையும் காவலர்களே தப்பச் செய்திருக்க வேண்டும். சிறிகாகுளம் மாவட்டத்துக்குள் நுழையா விட்டால் அவர்களைப் பிடித்து விடுவோம் என்று ஆந்திரக் காவல்துறைத் தலைமை அதிகாரி (ஐஜி) சொல்லி யிருந்தார். அப்படியானால் சிறிகாகுளம் செந்தளமாகி விட்டதா? எப்படியானாலும் அவர்களைப் பிடிக்க முடியாது என்று சாரு நம்பிக்கையோடு சொன்னார். ஆந்திரத் தோழர்களின் போராட்டத்துக்குத் துணைநிற்க வேண்டும் என்றார்.

அன்று மாலை வரை நான் சாருவுடன் இருந்தேன். தலைவர் சாருவை நான் பார்த்த ஒரே தருணம் அதுதான். ஆனால் தமிழ்நாட்டில் சாரு வந்து போன செய்தியைப் பல இடங்களிலும் சொல்லக் கேட்டுள்ளேன். நான் சந்தித்த மறுநாள் அவர் சென்னையிலிருந்தார். விசாகப்பட்டினம் சிறையிலிருந்து தப்பிய தோழர்கள் சென்னையில் அவரை சந்தித்து விட்டுச் சென்னை சென்ட்ரல் தொடர்வண்டி நிலையம் சென்று ஆந்திரத்துக்கு வண்டியேறினார்களாம்.

வர்க்கப் பகைவரை அழித்தொழிப்பது மட்டுமே போராட்ட வடிவம் என்ற கருத்தில் சாரு மசூம்தார் எவ்வளவு உறுதியாக இருந்தார் என்பது பற்றித் தோழர்கள் சொல்லக் கேட்டுள்ளேன். ''பகைவனின் குருதியில் கைநனைப்பவனே உண்மையான கம்யூனிஸ்டு'' என்பது அவரது முழக்கங்களில் ஒன்று. தலைஞா யிறு பகுதியில் சிபிஐ, சிபிஎம், திமுக போன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மொத்தமாக விலகி வந்து தீவிர கம்யூனிஸ்ட் என்ற பெயரில் இயக்கம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு தோழர் ஏஎம்கே வழிகாட்டிக் கொண்டிருந்தார். அறுவடையைக் கைப்பற்றும் இயக்கமும் பெரிய அளவில் நடத்தப்பட்டது. ''தென்னிந்தியாவின் நக்சல்பாரி'' என்று இந்து

ஏடு செய்திக் கட்டுரை வெளியிட்டது. முக்கியத் தலைவர்கள் தளைப்படுத்தப்பட்டு வழக்கு தொடரப்பட்டது.

சாரு மசூம்தார் நேரில் வந்தார். தலைவர்கள் வழக்கு நடத்தாமல் தலைமறைவாகி அழித்தொழிப்புப் போராட்டம் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினாராம். அவர்கள் யாரும் அதை ஏற்கவில்லை. சாரு அழித்தொழிப்புச் செயல் செய்ய அணியமான ஒரு குழுவைக் கூட்டச் சொன்னாராம். அவர்களிடம் அழித்தொழிக்கப்பட வேண்டிய பகைவர்களைப் பட்டியலிடச் சொல்லி, அவர்களில் ஆக மோசமான பகைவரை உடனடியாக (''நான் இரயிலேறுவதற்குள்'') அழித்தொழிக்க அறிவுறுத்தி விட்டுப் புறப்பட்டாராம். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

அந்தக் குழுவினரைத் தொடர்ந்து இயக்கி அழித்தொழிப்புக்குக் கொண்டுசெல்லும் பொறுப்பைத் தலைமை என்னிடம் ஒப்படைத்தது. அந்தப் பகுதிக்குப் பல முறை சென்று வந்தேன். அந்தத் தோழர்களைத் தேடிச்சென்று பார்த்தேன். ஆனால் யாரையும் அந்தச் செயலுக்கு அணியமாக்க முடியவில்லை. ''தலைபோகிற காரியம் என்பார்கள், இது தலை எடுக்கிற காரியமாயிற்றே'' என்று தோழர் ஏஎம்கே ஆறுதல் சொன்னார். வேறோர் அழித்தொழிப்பை முடித்து விட்டு மீண்டும் அந்தப் பகுதிக்குச் செல்லத் திட்டமிட்டேன். அது நடவாமலே போய் விட்டது.

1972-73இல் சிறையில் தூக்குக் கொட்டடியில் எங்களுக்குள் தீவிரமான அரசியல், கருத்தியல் விவாதம் நடைபெற்ற போது மீண்டும் ஒரு முறை சாரு மசூம்தாரின் தலை உருண்டது எனலாம். சாரு தலைமறைவாக இருந்தபடி ஒரு பேட்டி கொடுத்திருந்தார். அதில் சீனப் புரட்சியின் வழியில் இந்தியப் புரட்சி எனும் கருத்தை வலியுறுத்தியிருந்தார். “சீனத்தில் நடந்தது போல் இந்தியாவிலும் நீண்ட பயணம் நடக்குமா?” என்ற வினாவிற்கு “நடக்கும், சிறிகாகுளத்திலிருந்து பீர்பூம் வரை நடக்கும்” என்று விடையளித்திருந்தார். நடக்காது என்று நான் அழுத்தமாகச் சொன்ன போது தோழர்கள் அதிர்ந்து போனார்கள். என்ன, சாரு சொல்வது தவறா?

சீன நிலைமைக்கும் இந்திய நிலைமைக்குமான ஒரு முக்கிய வேறுபாட்டைச் சுட்டிக்காட்டினேன். **சீனம் முழுவதும்**

மிகப் பெரும்பாலும் ஒரே மொழி பேசும் ஒரே 'ஹான்' இன மக்கள். தெற்கே காண்டன் தொடங்கி வடக்கே யேனான் வரை படைப் பயணம் செல்வதில் மொழி தடையாகாது. ஆனால் சிறிகாகுளத்தில் புறப்படுகிற பயணம் வரங்கல் வரைதான் செல்ல முடியும். அது வரை தெலுங்கு பேசும் மக்கள். தாண்டினால் வேறு மொழிக்காரர்கள். மொழிபெயர்ப்பாளர்களை உடனழைத்துப் போய் இயக்கம் நடத்த முடியாது. இந்தியாவின் பன்மொழி, பல்தேசிய இன இயைபைக் கணக்கில் கொள்ளாமல் சீனப் பாதையில் புரட்சி செய்வது எப்படி?

சாரு மசூம்தாரின் பிழைகளுக்கு ஒரு முக்கியக் காரணம் சீனப் புரட்சியைப் பார்த்தொழுகும் ஆசைதான் என்று பிற்காலத்தில் நான் முடிவுக்கு வந்தேன். இந்தியச் சமூகப் பகுப்பாய்வு, இந்தியப் பெருமுதலாளர்களின் தன்மை, இந்திய அரசின் குணம், இந்தியப் புரட்சியின் கட்டம்... என்று ஒவ்வொன்றிலுமே சாருவின் பார்வை இப்படித்தான் இருந்தது.

முடிவாக, தோழர் சாரு மசூம்தார் ஒரு கலகக்காரர். இந்தியப் பிற்போக்குக்கு எதிராக மட்டுமன்று, திருத்தல்வாதத்துக்கும் எதிராகக் கலகம் செய்தவர். ஆனால் எல்லாக் கலகங்களும் புரட்சி ஆவதில்லை. நக்சல் இயக்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு எழுதிய கட்டுரைக்கு "புரட்சியாக மலரத் தவறிய கலகம்" என்று தலைப்புக் கொடுத்திருந்தேன். சாரு பற்றிய ஒரு கட்டுரைக்கு "அழித்தொழிக்க முடியாத நினைவுகள்" என்று தலைப்பிட்டேன். அழித்தொழிப்பு என்ற ஒற்றைப் போராட்ட வடிவத்தில் அவருக்கிருந்த பிடிவாதமான பிடிப்பால் இயக்கத்துக்கு ஏற்பட்ட பெருஞ்சேதம் பற்றிய நினைவுகளும் அழித்தொழிக்க முடியாதவையே.

● **மார்க்சிய - இலெனினிய இயக்கத்தில் தமிழகத்தில் முக்கிய ஆளுமையாக விளங்கியவர்கள் யார் யார்? குறிப்பாக ஏ..எம். கோதண்டராமன் அவர்களைப் பற்றிய உங்களது அனுபவங்களைக் குறிப்பிடவும்.**

☆ நான் இயக்கத்துக்கு வந்த 1969 பிற்பகுதியில் ஐம்பெரும் தலைவர்கள் இருந்தார்கள்: தோழர்கள் **(1) எல். அப்பு; (2) ஏ.எம். கோதண்டராமன்; (3) புலவர் கலியபெருமாள்; (4) பி.வி. சீனிவாசன்; (5) ஆர். மாணிக்கம்.** இவர்களைக் கொண்டதுதான் மாநிலக் குழு. அப்பு, ஏஎம்கே இருவரும்தான்

எங்களுக்கு வழிகாட்டிகள். **நான் ஏஎம்கே அவர்களுடன் சேர்ந்துதான் வேலை செய்தேன். அறிவு, உழைப்பு, ஈகம், கட்டுப்பாடு ஒவ்வொன்றிலும் அவருக்கு நிகர் சொல்ல முடியாது.** என்னிடம் அடிக்கடி initiative (முன்முயற்சி) வேண்டும் என்று வலியுறுத்துவார். அவரே அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. எங்கே தூக்கி வீசினாலும் பத்துப் பேரைச் சேர்த்து அமைப்பைக் கட்டிக் கொண்டு வந்து விடுவார். இத்தனைக்கும் அவர் யாரென்று தெரியாமலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டு விடுவார்கள். பெரியவர் என்று அன்புடனும் மதிப்புடனும் குறிப்பிடுவார்கள். இளைஞராகச் சென்னையில் தொழிற்சங்க இயக்கம் கட்டியதில் அவரது அமைப்புத் திறமும் தலைமைப் பண்பும் மிளிர்ந்தன. அந்த இயக்கத்தை அப்படியே விட்டுவிட்டுப் புரட்சி செய்யக் கிராமத்துக்கு வந்து விட்டார். திரும்பிப் பார்க்கும் போது அது சரியான முடிவன்று என்பதே என் பார்வை. புறநிலையில் முதிர்ச்சியடையாத ஒரு புரட்சியை அகநிலை முடிவுகள் சார்ந்து எப்படியேனும் வரவழைக்கும் முயற்சி ஏஎம்கே போன்ற ஒருவருக்கே பாறையில் தலையை முட்டிக் கொள்வதாகத்தான் அமைந்தது.

சிறை வாழ்க்கையில் அநீதிக்கும் கொடுமைக்கும் எதிரான போராட்டத்தில் உதிரிப் பாட்டாளிகள் என்று சொல்லும்படியான கைதிகளைத் திரட்டிப் போராடியதில் அவர் முத்திரை பதித்தார். கடலூர், சென்னை சிறைகளில் சிறைப்படுத்தப்பட்டோரைத் திரட்டிப் போராடியதில் அவர் வகித்த பங்கு குறித்து முன்பே எழுதியுள்ளேன்.

திருச்சி சிறையில் ஏஎம்கே அவர்களுடன் நானும் தோழர் இலெனினும் சில நாட்கள் இருக்க வாய்ப்புக் கிடைத்து. கருத்தியல் வேறுபாடுகள் குறித்து விவாதிக்க முயன்றோம். வெகுதொலைவு விலகிப்போய் விட்டோம் என்று புரிந்தது. சிறை வாழ்க்கையில் செய்ய வேண்டிய பணிகள் பற்றிப் பேசினோம், நாங்கள் பழகத் தொடங்கிய காலமுதலே “இதை நீங்கள்தான் செய்ய முடியும்” என்று எனக்கு ஊக்கமளிப்பார். அப்போது நான் மூலதனம் தமிழாக்கம் செய்து கொண்டிருந்தேன். தொடர்ந்து செய்யுங்கள், உங்களால்தான் செய்ய முடியும் என்றார்.

ஏஎம்கே சிறையிலிருந்து விடுதலையான பின் அழித்தொழிப்பு போன்ற வடிவங்களைக் கூர்மையாக எதிர்த்து நின்றார். தர்மபுரி மாவட்டம் போன்ற பகுதிகளில் மக்கள் பெருந்திரள்

அமைப்புகளை உருவாக்க முயன்றார். தோழர் பாலன் இந்த முயற்சிக்கிடையேதான் 'மோதல்-கொலை' செய்யப்பட்டார். தலைமறைவாக இருந்தபடி காவல்துறை அராசகத்தை எதிர்த்து மனிதவுரிமை இயக்கம் நடத்த வழிகாட்டினார்.

நானும் விடுதலையாகி வந்து தமிழ்த் தேசியம் சார்ந்து இயங்கத் தொடங்கிய பின் எங்களுக்கிடையே நெருக்கம் வந்தாலும் அவர் தலைமறைவாக இருந்தபடியால் அடிக்கடி சந்திக்க இயலவில்லை. சிறை பற்றி எழுதுவதற்காக ஒரு முறை சந்தித்தேன். அரசியல் விவாதத்துக்காக சந்திக்க விரும்பி உடல் நலிவுற்ற நிலையிலும் வீடு தேடி வந்தார். அதுவே இறுதிச் சந்திப்பாயிற்று. அப்போதும் இயக்க வரலாறு பற்றிப் பேசும் போது "நீங்கள்தான் செய்ய வேண்டும்" என்றார்.

● அழித்தொழிப்பு நிகழ்வில் உங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட பின், அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டதன் பின்னணி யாது?

☆ நானும் தோழர்களும் நீதிமன்றப் புறக்கணிப்பில் ஈடுபட்டோம். தஞ்சாவூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கின் முடிவில் நீதியர் குப்பண்ணன் எங்கள் நால்வரில் இருவருக்கு (ரெங்கசாமி லெனின், குருமூர்த்தி) தூக்குத் தண்டனை விதித்தார். எனக்கும் கனேசனுக்கும் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. நாங்கள் மேல்முறையீடு செய்ய மறுத்த போதிலும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் பார்வை வழக்காக உயர்நீதிமன்றம் விசாரித்தாக வேண்டும். பார்வை வழக்கில் தாமாக முன்வந்து வழக்கறிஞர் என்.டி. வானமாமலை வாதிட்டார். இவ்வளவு முக்கியமான குற்றச்சாட்டுகள் இருக்கும் வழக்கில் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யாமல் தீர்ப்பு வழங்கியிருக்கக் கூடாது. எதிரிகளே மறுத்தாலும் வழக்கறிஞர் அமர்த்திக் கொடுத்திருக்க வேண்டும், இல்லையென்றாலும் நீதியரே குறுக்கு விசாரணை செய்திருக்க வேண்டும் என்ற வாதுரையை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. எனவே செய்நுட்பக் காரணங்களால் மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பு நீக்கம் செய்யப்பட்டது. வழக்கை நாகை நீதிமன்றத்தில் வேறு நீதியரைக் கொண்டு மீள் உசாவல் செய்ய ஆணையிடப்பட்டது.

நாகப்பட்டினத்திலும் நாங்கள் வழக்குப் புறக்கணிப்புச் செய்தோம். ஆனால் நீதியரே ஒவ்வொருவருக்கும் வழக்கறிஞர்

வைத்து வாதிடச் செய்தார். முடிவில் எனக்கும் சேர்த்து மூவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஒருவருக்கு மட்டும் ஆயுள் தண்டனை.

இப்போதும் நாங்கள் மேல்முறையீடு செய்யாமலே உயர் நீதிமன்றத்துக்கு வழக்கு சென்றது. உயர்நீதிமன்றம் 'அசலே உறுதி' என்று சொல்லி விட்டது. நாங்கள் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கைப் புறக்கணித்ததாகவும், ஆனால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதும் அஞ்சிப் போய் மேல்முறையீடு செய்திருப்பதாகவும் உயர்நீதிமன்றம் சொல்லியிருப்பதாக நாளேடுகளில் பொய்ச் செய்தி வெளியிடப்பட்டது. இதற்கு கியூ பிரிவுக் காவல்துறையே காரணம் என்று ஐயுற்றோம். இது ஒரு பட்டினிப் போராட்டம் தொடங்கி கொடிய தடியடி வரை சென்றது. சுவருக்குள் சித்திரங்களில் இது பற்றி விரிவாக எழுதியுள்ளேன்.

இதற்கிடையில் சிறைக்குள் தீவிரமான கருத்துப் போராட்டம் நடந்து, எம்-எல் கட்சியிலிருந்து விலகும் முடிவுக்குச் சென்றோம். அதே சிறையில் ஆயுள் கைதியாக இருந்த தோழர் ஏ.ஜி. கஸ்தூரி ரெங்கன் எங்களுக்கு வழங்கிய அறிவுரையின் படி குடியரசுத் தலைவருக்கும் ஆளுநருக்கும் தண்டனைக் குறைப்புக் கோரி விண்ணப்பம் கொடுக்கத் தீர்மானித்தோம். அது கருணை மனுவாக இருப்பினும், மன்னிப்புக் கோராமல் ஒரு மேல்முறையீட்டின் தன்மையில் இருக்கும்படி அவரே வரைந்து கொடுத்தார். 1974 ஏப்ரல் மாதம் அப்போதைய முதலமைச்சர் பரிந்துரைத்தவாறு ஆளுநர் ஆணைப்படி தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டு நாங்கள் ஆயுள் தண்டனைக் கைதிகளானோம். இந்தத் தண்டனைக் குறைப்புக்குக் கலைஞர் உரிமை கொண்டாடியதன் பின்னணி இதுதான்.

● மொத்தம் எத்தனை ஆண்டுகள், நீங்கள் சிறையில் இருந்தீர்கள்? பல்வேறு சிறைகளில் இருந்த பொழுது, நிகழ்ந்த மிக முக்கியமான ஓரிரு சம்பவங்களை நினைவு கூரவும்.

☆ **15 ஆண்டுகள் சிறையிலிருந்தேன்.** 1970 அக்டோபரில் பட்டுக்கோட்டை கிளைச் சிறையில் தொடங்கிய என் சிறைவாழ்க்கை 1985 நவம்பரில் சென்னை மத்திய சிறையில் முடிந்தது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 8 மத்திய சிறைகளில் வேலூர், பாளையங்கோட்டை தவிர எல்லாச் சிறைகளிலும் இருந்து விட்டேன். ஒப்பளவில் கூடுதலான காலம் கழித்தது திருச்சிராப்பள்ளியில்தான். சிறைப்படுத்தப்பட்டோர் நலவுரிமைச்

சங்கம் அமைத்ததும், 1974 மேநாளில் தொடங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெருந்திரள் போராட்டம் நடத்தியதும், அடுத்து வந்த அடக்குமுறைக்கு ஆளானதும், 1983 யூலைப் படுகொலைக்கு எதிராகச் சிறைக்குள் ஊர்வலம் நடத்தியதும், கைதிகளை 1984 மாநிலந்தழுவிய சிறைப் போராட்டத்துக்கு மையம் அமைத்ததும், உரிமைக் குரல், சுதந்திர தாகம், பாட்டாளித் தத்துவம் என்று இரகசியக் கையேடுகள் நடத்தியதும்... எல்லாமே திருச்சி சிறை யில்தான்.

1964இல் திருவாரூரை விட்டு வலங்கைமான் புறப்பட்ட போது அப்பாவின் நெருங்கிய நண்பர் ஜெயராஜ் எனக்கு எழுதிக் கொடுத்த அறிவுரை: Live a dangerous life! சிறை வாழ்க்கை முழுக்க இந்த அறிவுரையைக் கடைப்பிடித்தேன் என்று சொல்லலாம். சிறை வாழ்க்கையில் ஒவ்வொரு நாளுமே விறுவிறுப்புதான்! சலிப்புக்கே இடமில்லை. **நானும் இலெனினும் விடுதலைக்கு அவசரப்பட்டதே இல்லை என்னும் அளவுக்கு நாங்கள் சிறையில் வாழ்ந்தவர்கள்.** கடல் போல் அலையடிக்கும் நினைவுகளிலிருந்து ஓரிரு நிகழ்வுகளை எடுத்துக்காட்டுவது எளிதன்று. சுவருக்குள் சித்திரங்கள், கம்பிக்குள் வெளிச்சங்கள், விலங்கிற்குள் மனிதர்கள் என்ற தொடர்களில் ஒருசிலவற்றைப் பதிந்துள்ளேன். எஞ்சியவற்றை வயதும் நலிவும் பிறவும் மறக்கடிக்குமுன் எழுத்தாக்கி விடத்தான் நினைக்கிறேன். அவ்வளவு தேவை எனக் கருதினால், பிழைத்தும் கிடந்தால்... பார்க்கலாம்.

● **சிறையிலிருந்த பொழுது காரல் மார்க்ஸ் அவர்களின் மூலதனம் நூலின் மூன்று பாகங்களையும் மொழியாக்கம் செய்தீர்கள். அந்த அனுபவம் மிகவும் முக்கியமானது அது குறித்த உங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.**

☆ எங்கள் சிறை வாழ்க்கையில் முதன் முதலாகப் புத்தகங்கள் வாங்கி வந்து கொடுத்தவர் சிபிஐ தலைவர் எம். கல்யானசுந்தரம் அவர்களே. அவர் வாங்கி வந்தவை Lenin Selected Works - 3 volumes. ஆனால் அவை உடனே எங்களிடம் தரப்படவில்லை. கியூ பிரிவு காவல்துறை அனுமதித்தால் தணிக்கை செய்து கொடுப்பதாகச் சொல்லி விட்டனர். அப்போது நான், இலெனின், குருமூர்த்தி மூவரும் சிபி கண்டத்தில் தூக்குக் கைதிகளாக இருந்தோம். கணேசன் ஆயுள்கைதியாக

எங்களுடன் இருந்தார். கல்யாணசுந்தரம் கொடுத்துச் சென்ற புத்தகங்களைத் தரக் கோரியும் அத்துடன் கழிப்பறை வசதி போன்ற கோரிக்கைகளுக்காகவும் நாங்கள் நால்வரும் தட்டைக் கவிழ்த்தோம் கோரிக்கைகள் ஏற்கப்படும் வரை பட்டினிப் போராட்டம்! மூன்று நாள் போராட்டத்துக்குப் பின் சிறை நிர்வாகம் எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. புத்தகங்கள் வந்து சேர்ந்தன. அதே கண்டத்தில் தோழர் ஏஜிகே அவர்களும் அப்போது அந்தணப்பேட்டை முக்கொலை வழக்கில் தூக்குக் கைதியாக இருந்தார். லெனின் தேர்வு நூல்கள் கிடைத்து விட்டது தெரிந்தவுடன் மகிழ்ச்சியுடன் வந்து எடுத்துப்போய் படித்துக் குறிப்பெடுக்க ஆரம்பித்து விட்டார். அவர் முடித்துக் கொடுத்த பின் நானும் கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கத் தொடங்கினேன்.

நேர்காணலில் புத்தகம் பெற்றுக் கொள்ளும் உரிமை கிடைத்து விட்டதால் எல்லாத் தோழர்களும் எங்களைப் பார்க்க வருவோரிடம் சொல்லி நூல்கள் சேகரித்துப் படிக்கத் தொடங்கினோம். புத்தகப் படிப்பு காலப்போக்கில் எங்களுக்குள் பெரிய அறிவுவிழிப்புக்கும் ஆய்வுக்கும் விவாதத்துக்கும் இட்டுச் சென்றது.

என் தாயார் பிறந்த ஊர் இளங்காடு. காவிரித் தீரத்தில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்துப் புகழ்மேவிய பெரும் சிற்றூர். நம்மாழ்வாரும் அதே ஊர்தான். என் தாய் மாமா திரு இராமநாதன் சென்னையில் இருந்தார். தமிழ்ப் பற்றும் திராவிட இயக்க ஆர்வமும் புரட்சித் தலைவர் இலெனின் மீது உயர்மதிப்பும் கொண்டவர். படிப்பாளர், பாட்டுக்காரர். அவர் என் அக்காள் காந்தியிடம் CAPITAL ஆங்கிலப் பதிப்பு மூன்று பாகங்களும் மலிவு விலையில் வாங்கிக் கொடுத்தனுப்பினார்.

ஆ, மார்க்ஸ்! ஆ, கப்பிடல்! மூலதனம்! மகிழ்ச்சி கலந்த வியப்பாக இருந்தது. பக்கங்களைப் பிரித்துப் படிக்க முயன்றேன். எளிதில்லை என்று தோன்றியது. இங்கிலீஷ்தானே? படி என்றார் பக்கத்திலிருந்த இலெனின். படிக்கப் படிக்க... இது தமிழில் இல்லையா? என்ற கேள்வி எழுந்தது. வெளியிலும் விசாரிக்கச் சொன்னோம். இல்லை என்று விடை கிடைத்தது. இலங்கையில் கூடவா? அங்கேயும் இல்லை என்றனர். நான் சொல்லி இலெனின் எழுதுவது வழக்கம். அப்போது நாங்கள் தூக்குக் கைதிகள். சாவதற்குள் இதைச் சாதிக்க வேண்டும் என்று அவர் தூண்டிக் கொண்டே இருந்தார். ஆனால் எதையும் புரியாமல்

மொழிபெயர்க்க முடியாதே! முதலில் படிக்க வேண்டும், திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். ஒத்திப்போட்டு விட்டு வேறு வேலை பார்க்கலானேன். இதற்கிடையில் உட்கட்சிப் போராட்டம் வந்து விட்டது. அழித்தொழிப்பு, ஆய்தப் போராட்டம் ஒவ்வொன்றைப் பற்றியும் கடுமையான கருத்து மோதல்! தூக்குக் கைதிகளாக இருந்த எங்களைத் தவிர வெவ்வேறு வழக்குகளில் நீண்ட சிறைத்தண்டனை பெற்ற பத்துக்கு மேற்பட்ட தோழர்களும் இருந்தார்கள். மா இலெனின் உரைத் தொகுப்பு 'புரட்சிகர வாய்ச்சொல்' என்பதைப் படித்து நான் தெரிந்து கொண்டவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டேன். புரட்சி பற்றி எங்களுக்கிருந்த மயக்கங்களைக் கலைத்துப் போடுவது போன்ற பலவும் இலெனின் உரைகளிலிருந்து கிடைத்தன.

இவ்வளவு பரபரப்பான சூழலில் Capitalஐ ஓரமாக வைத்து விட்டேன். இப்படியே சில ஆண்டுகள் கரைந்து விட்டன. இடையில் நிறையப் படித்தேன், நிறைய எழுதினேன், தமிழ் படிக்கத் தெரியாத கேரளத் தோழர்களுக்காக ஆங்கிலத்திலும் எழுதினேன். எங்களுக்குள் நீண்ட கடிதப் பரிமாற்றங்கள் நடந்தன. மார்க்சியப் படிப்பில் எனக்கொரு நம்பிக்கை வளர்ந்தது. கருத்துப் போராட்டம் ஒருபுறமிருக்க, சிறையுரிமைகளுக்கான போராட்டத்திலும் முனைப்புடன் பங்காற்றினோம். எல்லா முனையிலும் தோழர் ஏஜிகே சேய்மையில் இருந்தபடி எங்களைச் செழுமை செய்தார்.

கொலைத் தண்டனை குறைந்து வாழ்நாள் சிறைத் தண்டனை ஆகி 1974 மே போராட்டம், அடக்குமுறை, இரண்டாம் போராட்டமும் பழிவாங்கலும், செப்டெம்பரில் பாலகிருஷ்ணன் தூக்கு... எல்லாம் கழிந்து, என்னையும் இலெனினையும் பழைய கண்டம் என்னும் ஆறறைக் கூடத்தில் மறைப்புக்குள் தனிமைப்படுத்தி வைக்க, **1975 சனவரி முதல் நாள் மார்க்சைத் தமிழாக்கத் தொடங்கினேன்**. இடையில் நெருக்கடிநிலை அறிவிப்பு வந்தது. ஆனால் 1976 சனவரி 30 வரை பாதிப்பில்லை. இடைக்காலத்தில் தோழர் ஏ. பாலசுப்ரமணியமும் அனந்த நம்பியாரும் நேர்காண வந்தார்கள். மூலதனம் மொழிபெயர்ப்புக்குத் தேவையான அகராதி போன்ற உதவிகள் அனுப்புவதாகச் சொன்னார்கள். எழுதுவதற்கு மேசை - நாற்காலி வசதிகள் கேட்டுப் பெற்றுக் கொள்ளச் சொன்னார்கள்.

1976 சனவரி இறுதியில் திமுக ஆட்சி கலைக்கப்பட்ட பின் தமிழ்நாட்டிலும் நெருக்கடிநிலையின் தாக்கம் தொடங்கிற்று. மிசா கைதிகள் வந்து சேர்ந்தார்கள். சிறைக்குள்ளேயும் நிறைய மாற்றங்கள்! எங்களையும் இடமாற்றம் செய்தார்கள். அனைத்துக்கும் இடையே மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தோம். **மொத்தத்தில் ஒன்றரை ஆண்டுக் காலத்தில் முதல் பாகம் முடிந்தது.** குறிப்பேடுகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு, திருத்திப் புதிதாக எடுத்தெழுத வேண்டியிருந்தது.

சிறைபட்டோருக்காக விண்ணப்பங்கள் எழுதிக் கொடுப்பது, குறிப்பாகத் தூக்குக் கைதிகளுக்காக மேல்முறையீடும் கருணை மனுவும் எழுதிக் கொடுப்பது... இந்தப் பணிகளை ஏஜிகே செய்து கொடுப்பார். காலப் போக்கில் இந்தப் பணிகளைக் கற்றுக் கொண்டு நான் செய்யலானேன். இந்தப் பணிகளில் எனக்குதவ படித்த ஆயுள்கைதியான ஒருவரைப் பழக்கிக் கொண்டேன். திருத்திச் செம்மை செய்த மூலதனம் தமிழாக்கத்தைப் படியெடுக்கும் வேலையை அவரும் எனக்குச் செய்து கொடுத்தார். **தூக்கிலிடப்பட்ட வீரையன் என்ற கைதி தூக்கு மேடை ஏறுவதற்குக் காத்திருந்த கடைசிப் பத்து நாளும் மூலதனம் நூலைப் படியெடுக்கும் வேலையைச் செய்து கொடுத்தார்.**

இருபதறைத் தொகுதி எனப்படும் மெயின் கண்டத்தில் எங்களோடு அடைக்கப்பட்டிருந்த மெய்வழிச் சாலை வரதராச அனந்தர் கூட நான் உடனுக்குடன் மொழிபெயர்ப்பதில் வியந்து போய் மூலதனம் மொழிபெயர்ப்பு பற்றி விசாரித்தறிந்தார். என் மொழிபெயர்ப்புக் குறிப்பேடு ஒன்றை வாங்கிப் படித்து நல்ல அறிவுரைகள் சொன்னார்.

சிறைக்குள் என்றாலும் சிறை விட்டுச் சிறை என்றாலும் போகுமிடமெல்லாம் இந்தக் குறிப்பேடுகளையும் மற்றப் புத்தகங்களையும் தூக்கிச் செல்ல வேண்டும். வேலை முடிந்த குறிப்பேடுகளை வெளியே அனுப்பிப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கலாமே? எங்கே அனுப்பிப் பாதுகாப்பது? அக்காவிடம்? நம்பிக்கைக்குரிய காவலர்களிடம்? நம்மிடம் இருப்பதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்தோம். அதற்கு இன்னொரு முக்கியக் காரணமும் இருந்தது: நான் அது வரை செய்த தமிழாக்கத்தை இறுதியாகக் கருதவில்லை. திரும்பத்

திரும்பப் படித்துத் திருத்திச் செழுமை செய்ய வேண்டும் என நினைத்தேன். கைச்சுவடிகள் அனைத்தும் கையிலிருந்தால்தான் அப்படிச் செய்ய முடியும்.

இரண்டாவதாகக் கலைச் சொற்களின் தமிழாக்கம் பற்றிய சிக்கல் இன்னும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. ஒருசில கலைச்சொற்கள் இரவு பகல் என் மனத்தைக் குடைந்து கொண்டே இருந்தன. அது வரை வந்திருக்கக்க் கூடிய மார்க்சியப் பொருளியல் நூல்கள் எதுவும் இவ்வகையில் எனக்கு நிறைவளிக்கவில்லை. ஒரு சிறிய ஆங்கில ஆங்கில அகராதி மட்டுமே வைத்திருந்தேன். அதுவும் பக்கம் பக்கமாய் நைந்து கிடந்தது. ஒரு கலைச்சொல் குறித்துத் தீர்வு கிடைத்து விட்டதாக நான் நினைத்தால் அத்தனைக் கைச்சுவடிகளையும் பக்கம் பக்கமாகப் புரட்டித் திருத்தம் போட்டாக வேண்டும். தனியாக ஒரு குறிப்பேட்டில் அட்டவணை இட்டு தமிழாக்கச் சிக்கல்கள் ஆங்கில மூலத்தில் பக்கம், தமிழில் கைச்சுவடியில் பக்கம் என்று எழுதி வைத்துக் கொள்வேன். காட்டாக, manufacture, circulation, realization, currency, cooperation போன்ற சொற்களை மொழிபெயர்ப்பது எளிது போல் தோன்றும். ஆனால் இது போன்ற ஒரு சொல் அன்றாடப் புழக்கத்தில் குறிப்பதிலிருந்து மாறுபட்ட பொருளை அறிவியலில் குறிப்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதற்கும் மேலே மார்க்ஸ் என்ன பொருளில் அச்சொல்லை ஆள்கிறார் என்று ஆழ்ந்து நோக்கித் தமிழ் செய்ய வேண்டும். அறிவியல் கண்டிப்புடன் கலைச்சொல் ஒரே சீர்மையுடன் ஆளப்பட வேண்டும். எளிமையின் பெயரால் இடத்துக்கு இடம் மாற்றி ஆள முடியாது.

இந்தப் பணிக்கிடையே நான் மதுரைக்கும் தோழர் இலெனின் கோவைக்கும் மற்றப்பட்டோம். 1977 செப்டெம்பரில் மதுரையில் என் தலைமையில் ஒரு போராட்டம், கோவையில் இலெனின் தலைமையில் ஒரு போராட்டம் நடந்து அவர் மதுரைக்கு மாற்றப்பட, என்னை சேலத்துக்கு மாற்றினார்கள். சேலத்திலிருந்து சென்னைக்கு நேர்காணலுக்கான மாற்றல் கேட்டுக்கொண்டு சென்றேன். அங்கிருந்த போது மூலதனம் முதல் பாகத்தின் கைச்சுவடிகளை இறுதி வடிவாக்கி அக்கா காந்தியிடம் கொடுத்தனுப்பி விட்டேன். அவை சிபிஎம் தோழர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, தோழர் ஏபி தோழர் பாலவிநாயகத்திடம் கொடுத்தனுப்பிக் கருத்துக் கேட்டிருப்பதாக எனக்கு அறியத்தந்தனர்.

முதல் பாகத்தின் தமிழாக்கம் அச்சேறத் தக்கதாய் இருந்தால் அடுத்தடுத்த பாகங்களை எடுத்துக் கொள்ளலாம், இல்லையேல் இத்தோடு விட்டு விடலாம் என்று நினைத்திருந்தேன். 1979இல் கோவை சிறையிலிருந்த போது தோழர் ஏபி சார்பில் தோழர் அப்துல் வகாப் என்னை நேர்கண்டார். **மூலதனம் தமிழாக்கத்தை மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளி யிடத் தீர்மானித்திருப்பதாகவும், அவர்கள் இரண்டாம், மூன்றாம் பாகத்தையும் மொழிபெயர்த்துக் கொடுக்குமாறு கேட்பதாகவும் தெரிவித்தார்.** நான் உடனே அந்த வேலையைத் தொடங்க நினைத்தேன். ஆனால் நான் சொல்லச் சொல்ல எழுதுவதற்கு இப்போது இலெனினைப் போல் யாருமில்லை. மேலும் இடைக் காலத்தில் தோழர் பி.சுந்தரையாவின் தெலங்கானா பற்றிய வரலாற்று நூலைத் தோழர் கோபாலைக் கொண்டு மொழிபெயர்க்கச் செய்து திருத்திச் செம்மை செய்து கொண்டிருந்தேன். தோழர் தமிழரசன், வள்ளுவன், குமார் உட்பட 9-10 தோழர்கள் பத்தாம் தொகுதியில் இருந்தோம். சிறை நிலைமைகள் தொடர்பான பட்டினிப் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. அதே நேரம் தோழர் ஏஎம்கே சமரன் ஏட்டில் தேர்தல் தொடர்பாக எழுதிக் கொண்டிருந்ததை மறுத்து நான் அவருக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தேன். பிறகு அதே கடிதங்களை கட்டுரை வடிவில் ’நக்சலைட்டுகளுக்கு ஒரு சிறைப்பறவையின் வேண்டுகோள்’ என்ற தலைப்பில் சிபிஎம் வெளியிட்டது.

1979 கடைசியில் நானும், தோழர் தமிழரசனும், தோழர் கந்தசாமியும் சிறைக் கோரிக்கைகள் தொடர்பான ஒரு வழக்கிற்காகக் கோவையிலிருந்து சென்னை சிறைக்கு மாற்றப்பட்டோம். **1980 சனவரி முதல் நாள் மூலதனம் இரண்டாம் பாகத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினேன்.**

சென்னைச் சிறையில் வழக்கறிஞர் தோழர் சந்துரு என்னை நேர்காணலில் பார்த்தவுடனே மூலதனம் மொழிபெயர்ப்பு பற்றிக் கேட்டார். சென்னை பல்கலைக் கழகம் வெளியிட்ட அகராதி வைத்துள்ளீர்களா? என்று கேட்டார். இல்லை என்றேன். மறுமுறை வரும் போது வாங்கி வந்தார். கையில் வந்ததும் சில சொற்களைப் புரட்டிப் பார்த்தேன். முதலில் circulation வழக்கமாகப் புழக்கம் எனப்படும். Money circulation பணப் புழக்கம். Blood cirvulation

இரத்த ஓட்டம். ஆனால் commodity circulation என்பது சரக்குச் சுற்றோட்டம். நான் இந்தச் சொல்லைக் கொடுத்திருந்தேன். அகராதியிலும் அதே சொல்லைக் கண்ட போது மகிழ்ந்தேன். ஏனென்றால் சரக்கு - பணம் - சரக்கு என்பது ஒரு சுற்று. பணம் - சரக்கு - பணம் என்பதும் ஒரு சுற்றுதான். சந்தையில் சரக்கு அல்லது பணம் சுற்றுகளாக ஓடுகிறது. சுற்றிச் சுற்றி ஓடுகிறது. சுற்றோட்டம் என்பது சுற்றுகளால் ஆனது. Ciruculation is made of circuits.

நான் மூலதனம் மொழிபெயர்க்கக் காலம் குறித்து வேலை செய்வதாகச் சொன்ன போது சந்துரு மகிழ்ந்து எனக்குப் புதிய உயர்தரக் குறிப்பேடுகள், பேனா எல்லாம் வாங்கித் தந்து உதவினார். உடனிருந்த தோழர் தமிழரசன் எனது பணியில் மிகுந்த ஆர்வம் காட்டுவார். மணிக்கணக்காக உட்கார்ந்து எழுதுவதால் இடையில் செய்தித்தாள் படிக்கும் போதாவது நில்லுங்கள் என்பார். புலவர் கலியபெருமாளின் ஒன்று விட்ட உடன்பிறப்புகள் பொய் வழக்கில் தண்டிக்கப்பட்ட ராஜமாணிக்கமும் ஆறுமுகமும் எங்களோடிருந்தனர். “நீ பேசாமல் எழுதிக் கொண்டே இரு, உனக்கு என்ன வேண்டுமோ நாங்கள் செய்து தருகிறோம்” என்பார்கள்.

ஏப்ரல் 22ஆம் நாள் (லெனின் பிறந்த நாள்) இரண்டாம் பாகம் மொழிபெயர்ப்பை முடித்தேன். மே நாளில் மூன்றாம் பாகம் தொடங்கத் திட்டம். அந்த இடைப்பட்ட நாட்களில் ஒரு துயரச் செய்தி வந்தது: அக்காள் காந்தி மறைந்தார். கம்பிகளுக்குப் பின்னால் இருப்பவர்கள் எல்லாம் என் தம்பிகள் என்று வாழ்ந்து கொண்டிருந்தவர் மறைந்த செய்தியைச் சிறைத் தோழர்களுக்கேல்லம் தெரிவித்து விட்டு, மீண்டும் மார்க்சிடம் போய் விட்டேன்.

நவம்பர் புரட்சி நாளில் மூன்றாம் பாகமும் திட்டமிட்டவாறு முடித்து எழுந்தேன். இன்னும் ஒரு முறை திருத்த வாய்ப்புக் கிடைத்தால் திருத்த வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இன்றும் ஆசைப்படுகிறேன். அதற்காக மீண்டும் சிறைக்குப் போகலாமா?

(தொடரும்)

ஔவைக்கு இணை ஔவையே!

ஔவைக்கு ஒப்பாரும் இல்லை
மிக்காரும் இல்லவே இல்லை

தாயம்மாள் அறவாணன்

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகு அளவு

What we have learnt is like a handful of Earth

What we have yet to learn is like the whole world - Avvaiyar

மேற்கண்டவை அமெரிக்கன் மிக்சிகன் பகுதியில் உள்ள வானியல் துறையின் ஔவையின் குறிக்கோள் வாசகம் ஆகும். பொருள் ஆழம் பொதிந்த இந்த வாசகத்தை அமெரிக்காவில் உள்ள அறிவியல் மையம் அனைவர் கண்ணிலும் படும்படியாக மாடி ஏறும் இடத்தில் ஆங்கிலப்படுத்தி எழுதி வைத்திருக்கிறது. இன்றும் பார்க்க வியப்பாக இருக்கிறதே! நம் ஔவையார் கடல்கடந்து கண்டங்கள் கடந்து அமெரிக்காவில் உயர்வாகப் போற்றப் பெறுகிறாரே! பெண்ணினத்திற்குப் பெருமை அல்லவா! அப்படி அவர் செய்த சாதனைகள்தான் என்ன?

அவ்வை என்ற சொல் வயதில் மூத்தவள், தாய், தமக்கை, பெண் துறவி என இவர்களைக் குறிக்க வழங்கும்.

ஔவையார் ஒருவர் அல்லர் பலர். எட்டுக்கும் மேற்பட்டவர்கள் இருந்திருக்கிறார்கள். ஔவையார் பலர் ஆனது ஏன்? அவர் வரலாற்றில் பல்வேறு காலப் பெயர் வைப்பு ஏன் நிகழ்ந்தது? சங்க காலத்தில் வள்ளல் அதியமானிடம் நெல்லிக்கனி பெற்றும் தொண்டைமானிடம் தூது சென்றும் பெரும் புகழ் பெற்ற ஔவையை அறிவோம். 15ஆம் நூற்றாண்டில் ‘அறம் செய விரும்பு’, ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்று அறம் உணர ஔவையை அறிவோம். இவ்வாறு **காலந்தோறும் எட்டுக்கும் மேல் ஔவையார்கள் வாழ்ந்து பதினெட்டுக்கும் மேல் நூல்கள் படைத்திருக்கிறார்கள்** என்று அறியும்போது வியப்பு மேலிடுகிறது? தமக்கு முன் வாழ்ந்த பெருமைக்கு உரியோர் பெயரைப் பின் வந்தோர் சூட்டிக்கொள்ள விழைந்தமையால் ஔவையார் பெயர் பெருகி இருத்தல் வேண்டும். தம் பெயரில் பாப்புனையாமல் முந்தைய புகழ் பெற்றோர் பெயரில் பரப்புனைந்திருக்கலாம். அவ்வாறு **ஔவைமார்கள் புனைந்த பாக்கள் 1211, ஔவை பெயரில் வெளிவந்த நூல்கள் 18.**

அவ்வையார் பலர்

அவ்வையார் - I	ஏறக்குறைய கி.பி. 2 ஆம் நூற்றாண்டு	சங்கப்பாடல்கள் அகம், புறம், அதியமான், பொருட்டெழினி, நாஞ்சில் வள்ளுவன் முதலானோர்
அவ்வையார் - II	ஏறக்குறைய கி.பி. 10 முதல் 13ஆம் நூற்றாண்டு வரை	மூவேந்தர், பாரி மகளிர், கம்பர், சேரமான் பெருமாள் முதலியோர் பற்றிய தனிப்பாடல்கள்.
அவ்வையார் - III	ஏறக்குறைய கி.பி. 12 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை	ஆத்திசூடி, கொன்றை, வேந்தன், மூதுரை, நல்வழி
அவ்வையார் - IV	ஏறக்குறைய கி.பி. 15 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை	விநாயகர் அகவல், ஔவை குறள்.
அவ்வையார் - V	ஏறக்குறைய கி.பி. 16ஆம் நூற்றாண்டு	அவ்வை நிகண்டு, பிடக நிகண்டு (கிடைக்கப் பெறவில்லை.)

அவ்வையார் - VI	ஏறக்குறைய கி.பி. 17ஆம் நூற்றாண்டு	அசதிக்கோவை, பந்தன் அந்தாதி, பெட்டகம்.
அவ்வையார் - VII	ஏறக்குறைய கி.பி. 18ஆம் நூற்றாண்டு	கல்வி, ஒழுக்கம், கணபதி ஆசிரிய விருத்தம், வேழமுகம்.
அவ்வையார் - VIII	கி.பி. 18ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு	நீதி ஒழுக்கம், தரிசனப் பத்து
அவ்வையார் - VIV	கி.பி.18ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு	ஔடதம்

ஔவையின் கிடைக்கப் பெறாத ஏட்டுச் சுவடிகள் (1.) பிடக நிகண்டு, (2.) நவமணிமாலை, (3.) அருந்தமிழ் மாலை (4.) நன்னூற் கோவை,

அச்சாகியும் கிடைக்கப்பெறாத நூல்கள் (1.) உயர்ஞானசர நூல், (2.) ஈச்சுரன் மாலை.

சங்கப் பாடல்கள்

மொத்தம் சங்கப் பாக்களைப் பாடிய புலவர்கள் 473. அவர்களுள் பெண் புலவர்கள் 45. ஆக 10%க்கும் குறைவான பெண் புலவர்கள் உள்ளனர். ஔவையார் ஒருவரே புறப்பொருள் பாடல்களையும் (மொத்தம் 33) அகப்பொருள் பாடல்களையும் (மொத்தம் 26) பாடிய பெருமைக்கு (59 பாடல்கள்) உடையவர். கொங்கு நாட்டுத் தகடூர் என்ற தருமபுரி ‘அதியமானுக்காக வாழ்ந்தவர் ஔவை. அதியன், சேர அரசன் பெருஞ்சேரல் இரும்பொறையுடன் நடந்த போரில் அம்பு பட்டு இறந்து படுகிறான். அப்போது ஔவை பாடிய இரங்கற்பா அனைவர் மனத்தையும் அழவைத்தது, நெஞ்சை உருக வைத்தது.

சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறு சோற் றானு நனிபல கலத்தல் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயும்
மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாந் தானிற்கு
மன்னே
நரந்தம் நாறும் தன் கையாற்

புலவுநாறும் என்தலை தைவரு மன்னே
... ...
... ...
ஆசு ஆகுளந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லைப் பாடுநர்க்கு ஒன்று
ஈகுநரும் இல்லை

... புறம் 235

மேற்கண்டவாறு கையறுநிலைப் பாடல்கள் பல பாடி நெஞ்சை நெகிழச் செய்தவர் ஔவையார். அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடுவதிலே தம் வாழ்க்கையைச் செலவு செய்தவர். சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தரும் சண்டையின்றி ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று எண்ணி புறம் 367இல் வாழ்த்திய ஒரே புலவர் இவரே. (1) போரை விரும்பாதவர். 2. சமாதானமே நல்வழி என உணர்ந்தவர் (3) தன் அரசனின் பெருமையைப் பகைவனிடம் கூறுதல் (4) தன் நாட்டு வீரர்களின் வீரத்தைப் புகழ்தலால் பகை அரசரை அஞ்ச வைத்துப் பணியச் செய்யும் உத்தி உடையவர். (5) அரசியல் ஞானம் வீர உணர்வு செறிந்த தன்மையர் எனப் பல ஆற்றல்கள் கைவரப் பெற்றவர். மூவேந்தர்களை வானத்துத் தோன்றும் "விண்மீன்களினும், மழைத்துளியினும் மிக்கு மேம்பட்டு நும்முடைய வாழ்நாள் விளங்கட்டும்" என்று வாழ்த்தி ஒற்றுமையை நிலைநாட்டிய ஒப்பற்ற புலவர் ஔவை ஒருவரே. இம் மூவேந்தர் இணைப்பு முப்பந்தல், மும்முடி, முப்புளி என்ற அடைமொழிகளில் எதிரொலிக்கிறது.

அகப்பாடல்கள்

ஔவை பாடிய அகப் பாடல்கள் 26. காதல் செறிந்தவை. தலைவி கூற்றுப் பாடல்கள் பெரும்பாலும் மிகுதி. காமத்தால் தலைவி பாடவதாக ஒரு பாடலில் 'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல், ஆசு ஒல்லென கூவுவேன் கொல்' (குறுந்தொகை 28) என்றும் 'மெய் புகுவன்ன கை கவர் முயக்கம் (அகம் 11) என்றும் ஔவை பாடியமையால் அவர் பெண் துறவி என்று கொள்ளுதற்கு இடமே இல்லை. அதனால் அவர் இளம் குமரி என்று பொருள் ஆகாது. புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் அறிவு முதிர்ச்சி அரசியல் முதிர்ச்சி ஔவையாரை அகவை முதிர்ந்தவராகவே அறிவுறுத்துகின்றன. அதியன் மகன்

பொகுட்டெழினியைப் பாடும் நிலையில் ஔவையின் தாய்மை முதிர்ச்சி முழுமையாகப் புலப்படும். அதியமானை மகனாகக் கண்டிக்கும் பாசமிகு தாயின் உரிமைக் குரல் பாடல்தோறும் கேட்கிறது. (எ.டு) ‘நீ களம் புகினே’ ‘பெரும நீயே’, இவை சான்றுகள்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடல்கள்

ஆத்திசூடி 109 ஓரடிச் செய்யுள்களையும், கொன்றை வேந்தன் 91 ஒரடிச் செய்யுள்களையும் உடையன. இரண்டும் குழந்தை இலக்கியம், கொள்கை இலக்கியம், சமுதாய இலக்கியம், சமயப் பொதுமை இலக்கியம். இவை தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பொருந்தும் பொதுமை உணர்வுகள் உடையவை.

எண் எழுத்து இகழேல் (ஆ சு 7)
ஓதுவது ஒழியேல் (" 11)
இளமையில் கல் (" 29)
கேள்வி முயல் (" 39)
நூல் பல கல் (" 71)
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் (கொ.வே. 1)
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் (" 7)
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை (" 27)
தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை (" 38)
மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம் (" 75)

ஆக ஆத்திசூடி தொடக்க நிலையிலும் கொன்றை வேந்தன் அடுத்த நிலையிலும் வாக்குண்டாம் சிறுவர் நிலையிலும் கற்பிக்கும் முகமாக எழுதப் பெற்றிருக்கலாம்.

ஆத்திசூடியின் கருத்து, அமைப்பு, அறவுரை அப்படியே கொன்றை வேந்தனில் இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது இரண்டும் வேறு வேறு அவ்வையார்களால் படைக்கப் பெற்றதோ என்று கருத வேண்டி உள்ளது.

ஔவையின் தனிப் பாடல்கள்

ஐயமான சில பாடல்கள் நீங்கலாகத் தொண்ணூற்று ஐந்து தனிப் பாடல்கள் ஔவையார் பெயரில் கிடைத்துள்ளன. சேர,

சோழ, பாண்டியனைப் பாடிய பாடல்கள் பாரியின் மக்கள் அங்கவை சங்கவை என்றும் அவருக்கு மணம் முடிக்கப் பெரும் முயற்சி எடுத்தக் கொண்டவர் என்றும், கம்பரைக் கவிதையால் வென்றவர் என்றும் கோரைக்கால் ஆழ்வானின் கொடையைப் போற்றியவர் என்றும், புலி வேளூர்ப் பூதன் வரகுச் சோறு விருந்திட்டதையும், ஒட்டக்கூத்தர் வெட்கும்படியாகப் பாடியதையும் முருகன் கொடியது, இனியது, பெரியது, அரியது எது என்று கேட்பதற்கு அருமையாக விடையிறுத்ததையும் பல பாடல்கள் தனித்தனியாக ஔவையால் பாடப் பெற்றுள்ளன.

சங்ககாலப் பாரியின் மக்கள் இருவர் பாரி இறந்தபின் பாரியின் தோழர் கபிலர் பாதுகாப்பாக வைத்திருந்துவிட்டு வடக்கிருந்து உயிர் நீத்தார் என்று புறநானூறு பேசும். தந்தை பாரி இல்லாத நிலையையும் பறம்பு இல்லாது வறுமை நிலையையும் சுட்டிய பாடல்

‘அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்’
எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர் கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென் றெறி முரசின் வேந்தர் எம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையும் இலமே!” (புறம் 112)

என்ற பாடல் படிப்போர் நெஞ்சைப் பிழிவது. பெண்கள் இருவர்க்கும் திருமணம் முடிக்கும் முன்பே தந்தை பாரி கொல்லப்படுகின்றான். தந்தையின் தோழர் கபிலர் அப்பெண்களுக்குப் பாடுபட்டுத் திருமணம் முடித்து வைக்கிறார். இவ்வரலாறு ஔவையாரோடு தொடர்புபடுத்தப் பெற்றுத் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்றுள்ளது.

கம்பரும் ஔவையும் ஒரே பாட்டைப் பாடி முடித்ததாகக் கதை

தண்ணீரும் காவிரியே தாகவேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே - பெண்ணாவாள்
அம்பொன் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

முதல் இரண்டடியைக் கம்பர் பாட ஏனைய இரண்டடியை ஔவை நிறைவு செய்து சூழ் பெற்றார் என்பது வாய்மொழிக் கதை, ஔவை வாழும் நெறியை மக்களுக்கு உணர்த்தியவர்.

(1) ஒன்று பட்டிருங்கள்
(2) பகை நீக்கு; நட்பு ஆக்கு
(3) சுயநலம் அகற்று, பொதுநலம் பேணு
(4) நல்லவராக வாழ்
(5) இல்லறத்தைப் போற்று
(6) இளமையில்கல்
(7) பேசுவதைக் குறை
(8) திருந்தச் செய்
(9) குற்றம் பார்க்காதே
(10) பேராசையைத் தவிர்க்க
(11) சாதியைத் தவிர்
(12) உன்னை அறி

என்று பல்வேறு சமூக நீதிகளை எடுத்துரைத்தவர் ஔவை.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று (மூதுரை)

இப்பாடலை யாவரும் மனத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

பெண்டிர்க்கு அறிவுரை வழங்கியவர் ஔவை

ஐரோப்பியர் காலத்திற்கு முன்பு பெண்கள் படிப்பறிவும், எழுத்தறிவும் இல்லாதவராக இருந்தனர். பெற்றோர், கணவன், பின் பிள்ளைகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தப் பெற்றனர். திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றவராகப் பெண்கள் இல்லை. வாய்ப்பு அளிக்கப்படவும் இல்லை. ‘பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம்’ என்றும், ‘தையல் சொல் கேளேல்’ என்றும், ‘பேதையர்க்கு அழகு நாண் துறவாமை’’ என்றும் சொல்லி வைக்கப்பட்டன. வெள்ளைக்காரக் கிறித்தவ அறிஞர்கள் சிறுவர் கல்விப் புதையல் என்ற நூலைச் சிறுவர்க்காக அச்சாக்கினர் அந்நூலில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடல்களை ஒரு சிலவற்றை மாற்றினார். ஒரு சில சான்றுகள் வருமாறு !

திருமாலுக் கடிமை செய் - (ஆத்திசூடி)
(மாற்றம்) திருவருட் கடிமை செய் - (நீதிச்சொல்)
பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் (கொன்றை வேந்தன்)
(மாற்றம்:) பேதைமை யன்று மாதர்க்கு அணிகலம்
- (நீதிச்சொல்.)

மதம் மாறிய தமிழ்க் கிறித்தவர்க்காக ஆத்திசூடி, கொன்றை வேந்தன் பாடல்கள் சில மாற்றம் செய்து அச்சாக்கப் பெற்றன. இம்மாற்றம் சில இடங்களில் மட்டுமே. அதுவும் சமூக இணக்கத்திறக்காகச் செய்யப்பட்டது. ஆத்திசூடி கொன்றை வேந்தனைப் படித்தபாரதி, பாரதிதாசன் புதிய ஆத்திசூடிகளை உருவாக்கினர். ‘தையல் சொல் கேளேல்’ என்று ஔவை கூறியதை மாற்றி இக்காலச் சமுதாயத்திற்காகப் புதிய ஆத்தி சூடிகளை உருவாக்கினார். தையலை உயர்வு செய் என்று பாரதி பாடினார். முனை முகத்து நில்லேல் என்று ஔவை வாக்கை மாற்றிப் “போர்த் தொழில் பழகு“ என்று பாரதி மக்களை எழுச்சி பெறச் செய்ததாக இருபத்தேழுக்கும் மேற்பட்ட ஆத்திசூடி நூல்கள் தற்போது நம் தமிழ் மக்களால் எழுதப் பெற்றுள்ளன என்பது ஔவையின் ஆத்திசூடிக்குக் கிடைத்த பெருமை ஆகும்.

உரைத்தவை

ஔவை, பெண்களக்குத் தனியாக அறிவுரை கூறியவர். கணவனோடு சண்டை இடாமல் வாழ்தலும் அவ்வாறு சண்டையிட்டுச் சொல்எதிர் ஆடி, பதிலுக்குப் பதில் வார்த்தை பேசி வாயாடியாக வாழும் பெண் இருக்கும் வீடு, புலிகிடந்த காடாக மாறி விடும் என்கிறார். பழிக்கு அஞ்சாத கற்பில்லாத மனைவியோடு கூடிய இல்வாழ்வைவிடச் சன்னியாசம் மேல் என்பது ஔவை கருத்து

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல்
புலிகிடந்த தூறாய் விடும் - மூதுரை

ஆக ஔவை பெண்டிர்க்கு அறிவுறுத்தும் பாடல்களால் சில கருத்துகள் இக்காலத்தில் வாழும் பெண்டிர் மனத்தில் தோன்றுவது இயல்பு.

(1) மனைவி கணவனுக்கு எதிர் பேசாது இருத்தல் வேண்டும். அவன் என்ன பேசினாலும் பரவாயில்லை; பெண் மட்டும் வாயைத் திறந்து பேசக்கூடாது' என்று சுட்டப்படுதல்.

(2) பெண்கள் ஆண்களுக்கு அடங்கியவராகவே சுட்டப்படுதல்.

(3) பெண் கற்பு வற்புறுத்தப்பட்ட அளவுக்கு ஆண் கற்பு வற்புறுத்தப்படாமை.

(4) ஆண் இப்படி இருக்க வேண்டும் என்று எதையும் வற்புறுத்தாமை.

(5) பெண் அடங்கி ஒதுக்கி இருக்க வேண்டும் எனல்.

(6) திருமணத்தால்தான் ஒரு பெண்ணின் வாழ்வு முழுமை அடையும் எனல்.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன் நூல்களைப் போல் மூதுரை நல்வழி நூல்களிலும் ஔவையின் அறவுரைகள் சுட்டப் பெறுகின்றன. சான்றுக்கு ஒரு பாடல்

பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்; கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு, யாரோ அனுபவிப்பார்
பாவிகள்! அந்தப் பணம்

- நல்வழி 22

ஆக ஔவை பணத்தைப் பலருக்கு பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற பொது உடைமைச் சித்தாந்தத்தை எடுத்து உணர்த்தும் சமூகச் சிந்தனையாளர் எனக் கொள்ளல் நேரிது.

ஔவை எழுதிய பெட்டகம்

1887 இல் பதிப்பிக்கப் பெற்ற பெட்டகம் 79 பாடல்களைக் கொண்டது. பெட்டகம் என்ற பெட்டியினுள் மூடப்பட்டிருக்கும் ஓர் ஆணைப் பார்த்துப் பாடல் பாடியதாக அமைந்திருக்கிறது. இல்லறத்தில் ஒழுகும் ஒரு பெண் தன் கணவன் வேலைக்குச் சென்றபின் (மனைவி) வேறு ஓர் ஆடவனோடு சோரம் போகிறாள். முதலை அடைந்திருக்கும் குழி மண்ணும், வேங்கை அடைந்திருக்கும் புதர் மண்ணும் கொண்டு வந்து நெற்றியில் பத்துப் போட்டால் அவளின் தலைவலி தீரும் என்று

கூறி அவனைச் சாகடிக்கத் தீய வழி கூறுகிறாள். மனைவியின் தந்திரத்தை அறிந்து கணவனைப் பெட்டகத்துள் மூடிவிட்டு மனைவியின் வாசலில் வைத்து, சோர நாயகன் வரும்போது பெட்டகத்தை ஔவை திறந்து விட மனைவியின் தந்திரத்தை உண்மைக் கணவனுக்கு உணர்த்தி விடுகிறார். இது பெட்டகச் செய்தி. உத்தமி பற்றியும் நல்ல பெண்கள் அல்லாதவர் பற்றியும் 79 செய்யுள்களில் ஔவை பாடியுள்ளார்.

அவ்வை நிகண்டு, உரைத்தவரும் ஔவையே, விநாயகர் அகவல், அவ்வை குறள், தரிசனப் பந்து, வேழ முகம், கணபதி ஆசிரிய விருத்தம் முதலாய ஆன்மிக நூல்களைக் கடவுள் பக்தி மக்களுக்காக எழுதியவரும் ஔவைமார்களே. அவ்வை குறள் 310 பாக்களை உடையது. திருவள்ளுவரின் குறள் போன்ற யாப்பமைதி கொண்டது. வீட்டு நெறிப்பால், திருவருட்பால், தன்பால் என்ற அமைப்பினது. திருமூலரின் திருமந்திரத்தின் கருத்துகளையும் உள் வாங்கிய நூல்சரியை, கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கனுன் யோகம் என்ற சமார்க்கத்தை உணர்த்துகிறது.

விநாயகர் 8ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே வட இந்தியப்போர் முடிவில் தமிழ்நாட்டுக்கு வந்த கடவுள். அவர் பெயரால் விநாயகர் அகவலும் வேழமுகமும் ஔவை எழுதியதாகச் சுட்டப் பெறுகிறது.

முருகனைச் சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா? என்று ஔவையிடம் கேட்டதாக நாட்டுப்புறக் கதை வழக்கத்தில் உள்ளது.அந்த முருகன் மீது பக்தி கொண்டு தரிசனப் பத்து என்ற பாடல்கள் நிறைந்த நூலை ஔவை பாடியதாகச் சுட்டுவர். அம்முருகப் பாடல்களாம் தரிசனப்பத்து நூலும் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை. இந்நூலுள் சிவன், திருமால், உமையாள், இலக்குமி, விநாயகன் போற்றி ஏற்றப் பெறுகிறார்கள். முருகன் பல வினாக்கள் கேட்க விடை யிறுக்கும் ஔவையாக வாய்மொழிக் கதைகள் வழங்குவதையும் இங்கே இணைத்துப் பார்க்க வேண்டும். பெரியது எது என்பதற்கு அழகான விடையை ஔவை பகர்கிறார்.

கோவையையும், அந்தாதியையும் ஔவை பாடியுள்ளார். அசதிக் கோவை, பந்தன் அந்தாதி ஆகிய இரு சிற்றிலக்கியங்களையும் ஔவை படைத்துள்ளார்.

ஐவேலி என்ற கொங்கு மண்டலத்திற்கு உட்பட்ட ஊரில் அசதி என்றவள்ளல் இருந்தான் என்று உரைக்கிறது அசதிக்கோவை அதேபோல பூம்புகார் எனும் ஊரில் 18-19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகார் வணிகன் பந்தன் பாடப் பெறுகிறான். ஔவைக்கு இளமை மாறாது போர்த்தப்பெற்ற படாம் ஆகிய போர்வையை வழங்கியவன் பந்தன். அவனைப் பற்றி எழுதியுள்ளார் ஔவை என்ற பெயருடைய ஒரு ஔவை.

கல்வி ஒழுக்கம்

18ஆம் நூற்றாண்டு வாக்கில் ஔவை பெயரில் கல்வி ஒழுக்கம் என்ற நூல் வெளி வந்துளது. இந்நூல் வேதக் கல்வியை வற்புறுத்துகிறது. ஆரியம், வேதவித்தை, சாத்திரம், சூத்திரம், சாத்திரதாரி, சூத்திரதாரி, சைவாச்சாரியன் முதலாய வடசொற்கள் இந்நூலுள் பயின்று வந்துள்ளன. இதனால் இது பிற்காலத்தது என்பது தெளிவு. ‘ஐந்துவயதில் ஆதியை ஓது! என்ற செய்யுள் அடி “ஐந்து வயதில் ஆரியம் ஓது” என்று பாடவேதமாக உள்ளது.

நீதி ஒழுக்கம்

நீதி ஒழுக்கம் என்ற நூல் குடும்பம், சமூகம் நோக்கிய அறவுரைகளை விளக்குகிறது. ஓலைச் சுவடியிலிருந்து அறிஞர் இராசு அவர்களால் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. கொங்கு வட்டார மொழிகள் இந்நூலுள் பதிவாகி உள்ளன.

ஔடதம்

ஔவை பெயரில் ஔடதம் என்ற நூலும் வெளிவந்துள்ளது. தினமணி இதழ் ஏப்ரல் 30, 2021 இல் ஆ.வி. என்பவர் கிருஷ்ணதாஸ் கட்செவி அஞ்சல் தொகுப்பிலிருந்து ஔடதம் பாடல்களைத் தந்திருப்பது மகிழ்வைத் தருகிறது. எளிய பாடல் வரிகள் அறுபதைக் கொண்ட நூல் ஔடதம். சான்றுக்குச் சில

பாராத பயிரும் கெடும்
பாசத்தினால் பிள்ளை கெடும்
கேளாத கடனும் கெடும்
கேட்கும் போது உறவு கெடும்

இலக்கில்லா பயணம் கெடும்
இச்சையினால் உள்ளம் கெடும்

என்று அறுபது பாடல் வரிகளைக் கொண்ட நூல் இது. 'கெடும்' என்ற சொல்லில் முடியும். ஆக 60 கெடும் என்ற சொல் முடிவில் வருவதை அறியலாம். ஆக நல்வழி உரைக்கும் நல்ல நூல் என உணர்ந்து போற்றலாம்.

முடிவுரை

இக்கட்டுரையால் அறிவன

(1) ஔவையார் பெயரில் ஒன்பது பேர் வாழ்ந்து நூல்கள் படைத்திருக்கலாம்.

(2) ஔவையார் பெயரில் பதினெட்டு நூல்கள் உள்ளன.

(3) பதினெட்டு நூல்களிலும் 1215 பாடல்கள் கிடைத்துள்ளன.

(4) **ஔவை கொங்கு நாட்டுப் பெண்மணி**. தகடூர் என்ற தருமபுரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எனவே ஔவை கொங்குப் பெண்மணியே.

(5) ஔவையார் பெயரில் பத்துஇடங்களில் கோயில்கள்.

(6) ஔவையே பெண் புலவர்களின் தலை சிறந்தவர் அவரே 59 பாடல்களைச் சங்க காலத்தில் பாடியவர்.

(7) 18க்கும் மேல் நாடுகளையும் ஊர்களையும் சுற்றிப் பார்த்துக் கவி பாடியவர்.

(8) 15க்கும் மேல் அரசர்களையும், தலைவர்களையும் பாடியவர்.

(9) ஔவைக்கு மட்டுமே கொங்குநாட்டில் கல்வெட்டு உளது

(10) **திருக்குறளுக்கு அடுத்துக் குறள் எழுதிப் புகழ் படைத்தவர்.**

(11) ஔவை பாடிய தகடூர், கொங்கு வட்டார மொழிகள் நிறைந்த நீதி ஒழுக்கம் ஐவேலி, ஔவை கல்வெட்டு, ஆதிநூல் - கொங்கு மண்டலத் தொடர்பு உடையவை.

ஔவையார் பாடல்களால் அறியும் சில அரிய செய்திகள்

(1) அரசர்கள், தலைவர்கள்: அதியமான் நெடுமான் அஞ்சி, பொருட்டெழினி, பாரி, கிள்ளி வளவன், திருமுடிக்காரி, நாஞ்சில் வள்ளுவன், பழையனூர்க்காரி, பொறையக்கோசர்,

சேரமான் மாரி வெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி, மலையமான், பந்தன், முதலானோர்.

(2) அறிந்த புலவர்கள்: வெள்ளி வீதியார், பரணன்

(3) அறிந்த நாடுகளும் ஊர்களும்: கொல்லிமலை, கோவலூர், சேர நாடு, மலை நாடு, சோழ நாடு, பூம்புகார், திருக்குடந்தை, நன்னிலம், பாண்டி நாடு, தென்னாடு, கொற்கை, தொண்டை நாடு, நாஞ்சில்நாடு, பழையனூர், பறம்பு, வஞ்சி, வெண்ணி.

(4) ஔவையார் கோயில்கள்: தமிழகம் எங்கும் ஔவைக்குக் கோயில்கள் உள்ளன.

(1) ஆத்தூர் (சேலம் மாவட்டம்)

(2) ஆத்தூர் வட சென்னி மலை

(3) தஞ்சை துளசியாப் பட்டினக் கோயில்

(4) குற்றாலம் செண்பக அருவி அருகில்

(5) குமரி மாவட்ட முப்பந்தல்

(6) குமரி மாவட்ட தாழக்குடி

(7) குமரி மாவட்ட குறத்தியறை

(8) கல்வராயன் மலை மேல் ஔவை கோயிலும் கல்வெட்டும்

(9) சேலம் உத்தம சோழபுரம்

(10) ஆலஞ்சேரி ஔவை கோயில்

ஔவையாருக்குக் கல்வெட்டு

கல்வராயன் மலை மீது கராங்காடு என்ற பகுதி உளது. அங்கே ஔவையாரைச் சாமியாக வழிபட்டு வருகின்றனர். கோயில் பக்கத்தில் பாறையில் கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. வேறு எந்தப் புலவருக்கும் கல்வெட்டு இல்ல ஔவைக்கு மட்டுமே கல்வெட்டு.

முனைவர். தாயம்மாள் அறவாணன்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்

♦♦♦

மகளிரின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட தமிழன்பனின் சிந்தனைகள்

பவளசங்கரி

> **“பொய்மையை அறிய உண்மையாக இரு”**
> **மகாகவி ஈரோடு தமிழன்பன்**

மறுமலர்ச்சி என்பது மத்திய காலத்தின் முடிவிற்கும், நவீன காலத்தின் தொடக்கத்திற்கும் இடையில் ஐரோப்பாவில் கலை, அறிவியல், இலக்கியம், அரசியல் துறைகள் என அனைத்திலும் ஏற்பட்ட ஒரு கலாச்சார மாற்றம். ஆனால் இறையாண்மை நாடான நம் இந்தியாவைப் பொருத்தவரை இந்த மறுமலர்ச்சிக்கான காலம் மேலும் சில நூற்றாண்டுகளைக் கடந்துவிட்டன. பெண்களுக்கு எதிரான சதி எனும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடைசெய்யும் சட்டத்தை, 1829-ல் வங்காள ஆளுநராக இருந்த ஆங்கிலேயர் பென்ட்டிங் பிரபு கொண்டுவந்தார். இந்தச் சட்டத்துக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டாலும், இலண்டனில் இயங்கிய உயர் ஆலோசனைக் குழுவான ப்ரிவி கவுன்சில், 1832-ல் இந்தத் தடைச்சட்டத்தை உறுதிசெய்தது. இந்தியாவின் பிற பகுதிகளிலும் இந்தத் தடைச்சட்டம் அமல்படுத்தப்பட்டது. எனினும், ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தவிர, சுதேச அரசுகள் நடைபெற்ற பகுதிகளிலும், சுதந்திரத்துக்குப் பின்னரும் இந்தப் பழக்கம் சில இடங்களில் கடைபிடிக்கப்பட்டது. பாரதி தொடங்கி பின்னர் வந்த பாரதிதாசன், தமிழன்பன் போன்று பல புரட்சிக் கவிஞர்கள் மகளிரின் மறுமலர்ச்சிக்காக குரல் எழுப்பினர்.

பாரதிதாசனுடைய வாரிசாக, மகாகவி என்று போற்றப்படும் கவிஞர் ஈரோடு தமிழன்பன். அவரிடமிருந்து கற்றுக்கொண்டவை என்றால் சுயமரியாதை, பகுத்தறிவு, சமய மறுப்பு போன்றவை. அவர்தம் கவிதைகள் மரபையும், புதுமையையும் ஏற்றுக்கொண்டு கம்பீரமும், படைப்பாக்க ஆளுமையுடன், சமரசமற்ற கொள்கையும், மனத்திண்மையும், தமிழ்மீது அளப்பரிய காதலும் கொண்டு அதற்கான எதிர்வினைகளுடன் உயர்ந்து நிற்கின்றன. மகளிருக்கு எதிரான அநீதிகளுக்கும், அக்கிரமங்களுக்கும் எதிராக இவருடைய உணர்வுகள் சிலிர்த்தெழுந்து போர்க்கொடியை உயர்த்துகின்றன.

“பாரதி வழியிலும், பாரதிதாச நெறியிலும் வளர்ந்து, அகவை பல கடந்து வந்த நிலையில் நான் உள்ளம் கொதித்தும், உணர்வு நெகிழ்ந்தும் உச்சரித்த கவிதைகள்” என்று முழக்கமிடும் தமிழன்பனின் சிந்தனைகள் மகளிரின் மறுமலர்ச்சிக்கு வித்திடுவதிலும் ஆச்சரியமில்லையே!

கையில்
மரப்பாச்சி வைத்து
விளையாடும் பழைய
மரபை மாற்றுங்கள்

என்று பாசத்தோடு மகளிரிடம் வாஞ்சையுடன் உரைப்பவர்தான் அவர்தம் பொட்டில் அறைந்தாற்போன்று,

பூக்களை மட்டும் சூடும்
பூவையர் அல்லர் - நீங்கள்
ஆட்சி மகுடத்திற்கும்
உங்கள்
தலையால் தகுதி தருபவர்கள்

என்று புதுமைப் பெண்ணாக புத்தாக்கம் பெறும் பூவையராக மலர வேண்டும் என்று பரிதவிக்கிறார்! 1960களில் தொடங்கிய பெண்கள் விடுதலை இயக்கம் போன்ற பெண்ணிய இயக்கங்கள், உலகெங்கிலும் பெண்களின் அரசியல், அறிவுசார் மற்றும் கலாச்சார நிலையை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டன. இதன் பாதிப்பு, பெரியாரின் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்ட தமிழன்பனிடம் பெருமளவில் உள்ளதை அவர்தம் படைப்புகளின் வழி காணமுடிகின்றது.

பாரதிதாசனின் கனிவு மிக்க சொற்களை எண்ணத்தில் ஏற்றி அதன் வண்ணத்தையே பண்ணிசையாய் மாற்றிய இந்தக் கவியரசரின் சொற்கள் இவை ..

“காதல் பெண்கள் கண்ணாடிக்
கன்னங்களை முத்தமிடுவதைவிடக்
காயங்களின் ஆழத்தில் விழுந்தவர்கள்
கண்ணீர் துடைப்பதையே
அவர் கவிதைகள் அதிகமாய் விரும்பின”

என்று புதுநெறி காட்டிய புரட்சிக் கவிஞர் பற்றி பரிந்துரைப்பவர்தான்,

“கண்ணகிச் சிலம்பு
உடைக்கப்பட்ட மறுநொடியில்
பரல்கள்
புரட்சிக் கவியில் அமுதவல்லியின்
உதடுகளில் வார்த்தைகளாயின..
மன்னன் மகுட மணிகள்
தெருவெங்கும் தெறித்து விழுந்தன”

என்று அநீதி கண்டு பொங்கும் கண்ணகியின் கோபாவேசத்தால் மன்னனின் மணி மகுட மணிகள் தெறித்து விழுந்ததையும் சிந்திக்கச் செய்கிறார். சிலப்பதிகாரக் கண்ணகியையும் துணைக்கழைத்து, வேலியே பயிரை மேயும் அவலத்தை அணுஅணுவாய்ப் பிளந்து நம்மையும் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்கிறார். அந்த வகையில் ஆழமானதொரு கருத்தியலுக்கு அவருடைய கவிதை எப்போதும் ஒரு கேடயமாகவே இருந்திருக்கிறது என்பதற்கு மற்றுமொரு ஆதாரமாக,

கத்தியோடு விளையாடும்
புதிய மரபு
உதயமாகட்டும்!
விழிகளில் விரல்களில்
தீட்ட மை தேடாமல்
விடுதலைப் பிரகடனம்
தீட்டுவதற்காகத்
தேடுங்கள்.

ஒவ்வொரு நாளும்
கூந்தலில் சிக்கெடுத்து
முடிந்ததும்
கால்விரல் இடுக்கிலிருந்து
எடுத்து எறிவது
பொய்மைப் புராண ஏடுகளின்
பக்கங்களாகட்டும்

என்று பழைமையில் மூழ்கித் திணறும், பாச அடிமைகளாய் பரிதவிக்கும் பாவையரின் எண்ணத்தில் புரட்சித்தீ மூட்ட முயல்கிறார்.

தங்கசம் மனோரமா தேவி

தொலைநோக்கு பார்வையுடன் தன்னை அன்றாடம் புதுப்பித்துக்கொண்டே இருப்பவர்களே சிறந்த கவிஞர்கள். தமிழன்பன் கலாச்சாரம் என்பது, மறு உற்பத்தி சார்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் பேசுகின்ற தத்துவார்த்த மொழியை உடைத்தெறிந்துவிட்டு, எளிமையான மொழியின் வழி நுண் அரசியலைப் புரிய வைத்திருப்பவர்.

மணிப்பூரைச் சேர்ந்த தங்கசம் மனோரமா 10 சூலை 2004 அன்று இந்திய துணைப்படைப் பிரிவான 17வது அசாம் ரைபிள் வீரர்களால் கைது செய்யப்பட்ட மறுநாளே, அவரது வீட்டினருகில், பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு பலமுறை தோட்டாக்களால் துளைக்கப்பட்ட இவரது உடல் கிடந்தது. குற்றவாளிகள் தண்டிக்கப்படாததால் பரவலாக நடந்த போராட்டங்களில் நடுத்தர வயதுப் பெண்கள் சிலர் "எங்களையும் பாலியல் வல்லுறவு செய் இந்திய இராணுவமே... நாங்கள் அனைவரும் மனோரமாவின் தாய்மார்கள்." என்ற பதாகையுடன் நிர்வாணமாக நடந்து சென்றனர். பல ஆண்டுகள் தொடர்ந்த இப்போராட்டத்தில், அநீதி கண்டு பொங்கும் தமிழன்பனின் கொதித்த உள்ளம்,

தங்கசம் மனோரமா தேவியை
அங்குலம் அங்குலமாய் அவமானப்படுத்தி
ஆயுதப்படையினர்
மேய்ந்து தீர்த்தனர்.

......

படைத் தலைமையக வாசலில்
போராடும் நிருவாணப் பெண்களை
மறைத்து
முன் வரிசையில்
இந்திய மொழிகளிலெல்லாம் எழுதப்படாத
கவிதைகள்.
அச்சம் நாணம் மடம் பயிர்ப்புகளை
அவிழ்த்தெறிந்துவிட்ட
சீதை
சந்தேக இராமர்கள் சங்கக் கட்டடத்திற்குத்
தீவைத்த கையோடு
மணிப்புரி வாசலில் வந்துநின்றாள்
காலத்தின் கண் இமைகள் கருகி
உதிர்ந்தன.

மணிப்புரிப் பெண்களை மற்றவர் தொடாமல் பார்த்துக் கொள்ளப் படை. அந்தப்படை தொடாமல் பார்த்துக் கொள்ள யார்? மணிப்புரியின் பாரக் நதியின் பால்சுரக்கும் மார்புகளைக் கடித்துக் குதறலாம் என்றும்

இந்தக் கொடுமைகளை எதிர்த்துக்
கொடி பிடித்த
இரோன் சர்மிளா
பட்டினிகிடக்கிறாள் பதினான்கு ஆண்டுகளாக
ஒருநாள் சாவின் செய்தி
மறுநாள் வாழ்வின் செய்தி
சர்மிளா
மணிப்புரியின் ஒட்டுமொத்த உடலாகிவிட்டாள்
ஆனால்
தேசத்தின் கண்களுக்குத் தெரியவில்லையே!
சட்டத்தின் பார்வையில் படவில்லையே!
தொண்டையில்

புற்றுநோய் கண்ட நீதிநியாயங்களால்
முனகக்கூட முடியவில்லையே!

இந்தக் கவிஞனின் கோபாவேசக் கனல்கள் எப்படியோ எங்கேயோ சென்று இப்படிப்பட்ட அநீதியை சுட்டெரித்துச் சாம்பலாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை!

மரணமே நீ அழு, மரணத்தின் துலாக்கோல் சட்டமே நீ அழு! என்றும் சீற்றத்தோடு பொங்கிப்பேசுகிறார் கவிஞர்.

2012-ம் ஆண்டின் முற்பகுதியில், பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஆ.ப.சி.அ.சட்டம் குறித்து ஆராய நீதியரசர் வர்மாவின் குழு அமைக்கப்பட்டது. மனோரமா சம்பந்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களே அரசின் இந்த நடவடிக்கைக்கு குறிப்பிடத்தக்க காரணமாக அமைந்தது. Prevention of Atrocities Act, 1989 - "வன்கொடுமைகளுக்கு எதிரான பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சட்டம் 1989". சமூகத்தில் சமத்துவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான ஒரு முக்கியமான சட்டமான இது இந்திய அரசியலமைப்பின் 17வது பிரிவு தீண்டாமையை ஒழித்துள்ள நிலையில், இந்தச் சட்டம் அதனை மேலும் வலுப்படுத்துகிறது.

கைகூப்பாதே! கண்ணீர் விடாதே!
உனக்கானதை
நீயே
நிறைவேற்று! பிரகடனம் செய்!
நடைமுறைப்படுத்து!

என்று மகளிர் நிலை கண்டு பரிதவித்துப் போகிறவர் அதனைப் புரிய வைக்கவும் மகளிர்தம் எண்ணத்தில் விடுதலை எனும் புரட்சிக்கனலை வித்திடவும் இறுதிவரை முனைந்து போராடிக்கொண்டே இருந்தார்.

வாழ்க்கைத் துணைவி
என்று
வள்ளுவன் சொன்னதை மாற்றி
வாழ்க்கை முதல்விகள்
ஆகுங்கள்!

என்று ஆதங்கப்படுகிறார்! பெண்கள் தங்கள் பிரச்சனைகளை பிரச்சனைகளாகவே பார்க்காமல் அவற்றை ஒரு வாழ்க்கை முறையாகவே பார்க்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்தே இருக்கிறார் இக்கவிஞர் பெருமகனார்.

இசைப்பிரியாவும் தேவயானியும்

மறைந்து கிடக்கும் அநீதிகளையும், வன்மங்களையும், கிழிசல்களையும், இசைப்பிரியாவும், தேவயானியும் என்ற தலைப்பில் வாதம் வைக்கிறார். ஒரு தமிழனாய்க் கொந்தளிக்கும் இக்கவிஞனின் உள்ளக்கிடக்கைகள் இனப்படுகொலை வரலாற்றையும் குருதிக்கோலால் வரைந்துவிட்டுச் சென்றிருக்கின்றன.

கொடுமனக் கழுகின் கூரிய அலகிலிருந்து
குஞ்சைக் காப்பாற்றும் கோழியாகப்
பாரதம்
தேவயானியைப் பாதுகாக்கப்
பதற்றப்பட்டதும் பாய்ந்ததும்
சரிதான்
மவுனகுருவான
நம் மன்மோகனின் வெண்தாடி
சினத்தால் பழுத்துச் சிவந்தது
இதுசரிதான்

தனது வீட்டுப் பணிப்பெண்ணுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை தர மறுத்தது, அதிக நேரம் வேலை செய்யக் கட்டாயப்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இந்திய துணைத் தூதர் தேவயானி கோப்ர கடேவை அமெரிக்கக் காவல்துறை கைது செய்து பின்னர் ஜாமீனில் விடுவித்தது. இதற்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்தது. இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளின் சலுகைகளும் பறிக்கப்பட்டன. பணிப்பெண்களுக்கான அமெரிக்கச் சட்டப்பாதுகாப்பு விதிமுறைகளை மீறிவிட்ட அவரைக் கைது செய்தபோது கண்ணியக் குறைவாக நடத்தப்பட்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு தவறானது என்று அமெரிக்க அரசுத்தரப்பு வழக்கறிஞர் பிரீத் பராரா கூறினார்.

இசைப்பிரியா

விடுதலைப்புலிகள் அமைப்பின் ஊடகப்பிரிவில் பணியாற்றியவரும், செய்தி வாசிப்பாளருமான இசைப்பிரியா பிரபாகரனின் மகள் என்ற தவறான புரிதலுடன், சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகி கொல்லப்பட்டு, அரை நிர்வாணமாக சகதியில் பிணமாகக் கிடந்தார்.

கவிஞரின் உள்ளமோ இப்படி கூக்குரலிடுகிறது ..

ஆனால்
எங்கள் இசைப் பிரியாவைக்
காமுகச் சிங்களம் கசக்கி எறிந்ததே
அப்போது
கடித்துக் குதறி அவள் உடலை
அணுஅணுவாய்ச் சிதைத்து
வெறியாட்டம் போட்டதே
அப்போது
அவள் மானத்தை மரியாதையை
உரித்தெறிந்து
நிர்வாணப்படுத்தியதே
அப்போது
என்ன செய்தது இந்திய அரசு?
.....

ஒருசெடிக்கு அமுத நதியும்
ஒரு செடிக்கு அமில நதியும்
உற்பத்தி செய்பவளா பூமித்தாய்?
தேவயானிக்குக்
கனியான இந்திய இதயம்
இசைப் பிரியாவுக்குக் கல்லானது எப்படி?
நேர்மையின் முகவரியில்
இந்தியா இருந்திருந்தால் ஈழத்தமிழர்
காப்பாற்றப்பட்டிருப்பர்
இசைப்பிரியாவும் மாண்டிருக்கமாட்டாள்
....

யார் முகவரியில் இருக்கிறது இந்தியா?

என்று அநீதி கண்டு பொங்கும் துணிவின் விளிம்பில் நின்று கொந்தளிக்கும் பாரபட்சமில்லாத தூய உள்ளம் கொண்ட இக்கவிஞர் நச்சென்று தலையில் குட்டுவதுபோன்று கீதை உரைத்திருக்கிறார் கலியுகக் கண்ணனாக.

‘அல்கல’ச் செல்வி மலாலா

ஒரு இளம் பெண், உலகே அஞ்சி ஒதுங்கும் தாலிபான் தீவிரவாதிகளை எப்படியாவது சந்தித்துவிட்டால் அவர்களிடமே பெண்கள் கல்வி குறித்துப்பேசி புரிய வைத்துவிட்டால் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு வந்துவிடும். தன் சொந்தநாட்டுக்குச் செல்ல இயலாத நிலையிலும், உலகநாடுகள் அனைத்துக்கும் சென்று, கிடைக்கும் அத்தனை மேடைகளையும் பெண்கல்வி குறித்துப் பேசுவதற்கான சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகிறாள். போராளியாகிவிட்டால் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் உதவிட முடியுமே என்ற முடிவுக்கு வந்தவள், தன் நாட்டின் எல்லைக்குள்கூட கால் வைக்க முடியாத நிலையிலும் அந்நாட்டின் பிரதமராக வேண்டும் என்பதே தன்னுடைய விருப்பம் என்று சொல்லும் அவள் மலாலா எனும் துணிவாடை போர்த்தியவள்தான். ஒற்றைப் பெண்ணல்ல, அவள் ஓர் இயக்கம். உலகில் பெண்கல்வி எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்த்திட வந்த ஒரு பேராயுதம் இவள். அமைதிக்கான பரிசை முதன்முதலாகப் பெற்ற பாகிஸ்தான் நாட்டுக்காரர் இவர்தான்.

நம் கவிக்கோவின் அல்கலச் செல்வியின் தீச்சுடர்களைத் தரிசியுங்கள்..

மலாலா
பத்துச் சூரியர்கள் கண்ட கனவாகப்
பாகிஸ்தானில் பிறந்தவள்
‘அல்கலத்தின்’ செல்லமகள்
வயது பதினைந்து.
அவளுக்குள் இருந்தன பதினாறு
பள்ளிக் கூடங்கள் -

இருட்டு மண்டையர்களுக்கு
அஞ்சாமல்
பெண்களைப் பள்ளிக்கு அனுப்புங்கள்
தெருவில்
போராட்ட ஞானத்
தீப்பந்தம் ஏந்தினாள்
மலாலா.
...

பாகிஸ்தான் அதிபர்
பத்துமில்லியன் டாலர் பணத்தை
ஒதுக்கியுள்ளார் மகளிர் கல்விக்கு.

அவள் படிப்பது அவசியம்.
அவள் படிப்பதைவிட அவளைப்படிப்பது
அவசியம் என்று
திருந்தாத நெஞ்சங்களுக்குத்
தெரியுமா?

என்று நொந்த உள்ளத்துடன் அண்டை நாடு, எதிரி நாடானால் என்ன. அவர்களும் மனிதர்கள்தானே? அந்தப் பெண்களுக்கும் வலியும், வேதனையும் ஒன்றுதானே என்று இக்கவியின் சிந்தனை புனிதமடைகிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பரந்த உள்ளத்தின் சொந்தக்காரர் இவர் போலும்!

அல்கலச் செல்வி - அல்கலம் என்றால் எழுதும் கருவி என்பது பொருள். இன்று உலகம் பேனாவின் வலிமையை நன்கு உணர்ந்துவிட்டது. துப்பாக்கி முனையைவிட பேனாமுனை சக்தி வாய்ந்தது என்பதை உலகம் அறிந்துகொண்டது.

குழந்தைகளை அதிகமாகவேக் கொண்டாடும் இக்கவிஞரின் கருத்தில், மரணமே கண்ணீர் வடிக்கிறதாம்.

மரணம் கண்ணீர் வடித்துப் பார்த்திருக்கிறீர்களா?
குழந்தைகளின்
பால்உறுப்புகளை வல்லூறுகளின் காமக்

கூடுகளில் நிரப்பச்
சட்டம் செய்தவர் யார்?
வன்புணர்ச்சி
இந்நாட்டின் வீடுகளில், விடுதிகளில்.
பள்ளிகளில், பயண வண்டிகளில்
காம நெருப்பைக்
கொளுத்திப் போடுகிறது.
குழந்தைச் சவங்களைத் தொட்டுக்
கண்ணீர் வடிக்கிறது மரணம்...

நாமும் அன்றாடம் எத்தனையோ விதமான காட்சிகளைக் கடந்து வந்துகொண்டுதான் இருக்கிறோம். அதன் ஊடே மறைந்திருக்கும் வன்மங்கள் பல நேரங்களில் நம் ஊனக்கண்களுக்குத் தெரியாமலே போய்விடுகின்றன. அதற்கெல்லாம் சவுக்கடி கொடுப்பது போன்றே கவிஞர் கண்ட காட்சிகளால் விழிப்புணர்வு ஏற்ற வினாக்கள் எழுப்புகிறார்! இவர்தம் படைப்புகள் அனைத்தும் அப்போதைய சூழல்களுக்கு உகந்ததாக, உலகின் அனைத்துக் கோடியில் உள்ள மாந்தருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இதமாக அமைந்துவிடுவதாலேயே நம்மால் அவற்றை கடந்து போய்விட முடிவதில்லை.

களம் தேடிவந்த
வாள்
உறை கேட்டுக்கெஞ்சாது
பெண்ணே!
நியாபகம் வை
சலுகை வரங்களுக்காகச்
சூறாவளிகள்
தவம் செய்ததாகக் காவியப்
படலங்கள்
எழுதப்பட்டதில்லை.
(தன்னைப் பருகும் தாகம்)

பெண்களுக்குத் தேவை ஆளும் உரிமையா? வாழும் உரிமையா? என்றெல்லாம் புலம்பித் திரியாமல் வாழும் உரிமையை முழுமையாகப் பெற வேண்டுமானால், பெண்களுக்கும் ஆளும்

உரிமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் அவருடைய கவிச்சொற்கள் அனைத்தும் வரிசைகட்டி நின்று வடம் பிடிக்கின்றன.

பாகிஸ்தானிய இனப்படுகொலையின் ஆரம்பக்கட்டத்தில் வங்காளப் பெண்கள் குழுமப் பாலுறவு வன்கொடுமைக்கும், கொலைக்கும் உட்படுத்தப்பட்டனர். இந்த இனப்படுகொலையில் ஈடுபட்டவர் எவரும் நீதிக்கு முன் நிறுத்தப்படவில்லை. எல்லோரும் பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் சுதந்திரமாகவே இருக்கிறார்கள். இவர்களை நீதிக்கு முன் நிறுத்த பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரசியல் இராணுவ ஆட்சிக்கவிழ்ப்புகள் வங்கதேசத்தின் சுதந்திரத்துக்குப் பின்னர் நின்று போகவில்லை. எல்லாத்தரப்பாலும் கொட்டப்பட்ட இரத்தம், பலப்பல ஆண்டுகளுக்கு வங்கதேசத்தின் அரசியலைப் பாதித்து வந்தது.

தமிழன்பன் எனும் மனிதாபிமானம் மிக்க இக்கவிஞரின் மனம் படும்பாடு நம்மையும் கலங்கத்தான் செய்கின்றன.

அந்தச்
சோனார் பங்களாவில்
சுதந்திர வானம்பாடியின்
கதை
யாகியாகானின்
காமக்கழுகுகளால்
கண்ணீரில் முடிந்துவிட்டது

(நூல்: தோணி வருகிறது)

பாகிஸ்தான் நாட்டு இராணுவத்தினரின் வெறியாட்டத்தில் சிக்கிச் சின்னாபின்னமான வங்கதேசத்தின் ஒரு நயனதாராவை மட்டும் எண்ணியா இப்படி மனமுருகிப் போகிறார் இக்கவிஞர்?

- யுகஅடிமை
- சரிகிறது உன் நொடி அசைவில்!
- இழிவைக் கவிழ்க்கும்
- போரழகே உன் பேரழகு!
- வளையல் தேடியும்
- கடை கடையாய் ஏறி
- இறங்கியவளே!

- போதும்! போதும்! நிறுத்து!
- ஆயுதக்கிடங்கின்
- கதவை மோதித் தகர்த்து
- உனக்கானதைத் தெரிவு செய்!

பெண்களின் மறுமலர்ச்சிக்கு கல்வி, சமூக விழிப்புணர்வு, சட்டச்சீர்திருத்தங்கள், தன்னார்வ அமைப்புகளின் பணி, பெண்ணிய இயக்கங்களின் எழுச்சி ஆகியவை முக்கியக் காரணங்கள் என்பதை தெளிவாகவே வெளிப்படுத்துகின்றன இவர்தம் படைப்புகள். கல்வி அறிவு இல்லாததால் பெண்கள் ஒடுக்கப்பட்டிருந்த நிலை மாறி, கல்வியின் அவசியம் உணரப்பட்டதும், பெண்களுக்கு வாக்குரிமை போன்ற அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டதும், சமூகத்தில் அவர்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற சிந்தனைகள் வலுப்பெற்றதும் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தன என்பதையும் விளங்கச் செய்கிறார். பெண்களுக்கு கல்வி அவசியம் என்று உணர்ந்த இக்கவிஞர் தமிழன்பன் போன்ற சான்றோர்களின் பங்களிப்பால், பெண் கல்விக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது அவர்களின் சிந்தனைத் திறனை வளர்த்து, சமூகம் மற்றும் அரசியல் விவகாரங்களில் பங்கெடுக்க உதவியது. பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளும் உரிமைகள் மறுக்கப்படுவதும் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்திச் சமூக மாற்றத்திற்கான தேவையை உருவாக்கியுள்ளது.

மரணச் சான்றிதழைக் கைவசம்
வைத்துக் கொண்டு
மலர்கள் பிறப்பதில்லை!

அனுபவங்களின் அமுத சாரமே ஈரோடு தமிழன்பனின் கவிதைகள். மனிதர்களின் எல்லையற்ற கவலைகள், நோய்கள், தேடல்கள், தவிப்புகள் போன்ற அனைத்தையுமே சமநோக்கோடு பார்ப்பதன் விளைவாக உருவாகும் ஞானசூரியனாம் இக்கவிஞரின் அற்புதமான சொற்களே இவர்தம் படைப்புகள்.

♦♦♦

கட்டுரையாளர்
எழுத்தாளர்
“தமிழியக்கம்” அமைப்பின் செயற்பாட்டாளர்

இந்தியால் உடையும் இந்தியா?

குமணராசன்

இன்று இந்தியா என்றழைக்கப்படும் நிலப் பகுதியானது 1600களிலிருந்து 1947வரை ஆங்கிலேய நாடாளுமன்ற வழிகாட்டுதலின்படி கிழக்கிந்தியக் கம்பெனி என்ற அமைப்பின் மூலம் அதன் அரசு நிகராளிகள் (Viceroys) தலைமை ஆளுநர்கள் (Governor Generals) ஆகியோரின் மேலாண்மைக்குட்பட்டு இயங்கி வந்த ஒன்றாகும்.

1934ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியத் தேர்தல் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட இந்திய நாட்டு வரைபடம் இன்றைய மியன்மார், பாகிஸ்தான், வங்காள தேசம், பலுசிஸ்த்தான் மற்றும் மன்னராட்சிக்கு உட்பட்ட பல தேசங்கள் அடங்கிய ஒன்றாகும். அதற்கு முந்திய 1916 ஆண்டு வரைபடங்களில் ஆப்கானிஸ்தான், ஏமன் உள்ளிட்ட நாடுகளும் அடங்கியிருந்தது. இந்திய நாடு என்ற அழைக்கப் பட்ட நிலப்பகுதியின் எல்லைகள் காலந்தோரும் மாற்றங்களுக்குட்பட்ட ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு பொதுவான இனம்; பொதுவானப் பண்பாடு; பொதுவான கலாச்சாரம்; பொதுவான உணவு அல்லது பொதுவான மொழி என்ற தன்மை எப்போதும் இருந்ததில்லை.

இப்பகுதியின் வரலாற்றை நோக்கும் பொழுது, அரப்பா, சிந்து சமவெளிப் பகுதியில் திராவிட நாகரிகம் நிலைபெற்றிருந்த நிலையில், ஆரியர்கள் இந்தியாவிற்குள் புகுந்து முதன் முதலில் சிந்து ஆற்றங்கரையில் தங்கியதன் விளைவாக அந்நிலப் பகுதி

சிந்து எனப் பெயர் பெற்றது. பாரசீகர்கள் அதை ஹிண்டு (Hind) என வழங்கினர்; பிற்காலத்தில் கிரேக்கர்கள் அதை ஹிந்தோசு (Indos) எனத் திரித்தனர். இலத்தீனில் அது ஆற்றைக் குறித்து (Indus) என்றும் நாட்டைக் குறித்து இந்தியா (India) என்றும் திரிந்தது என மொழி ஞாயிறு பாவாணர் விளக்குவார்.

வரலாற்றுக் காலந்தொட்டு இந்திய நிலப் பகுதி பல்வேறு மன்னராட்சிக்குட்பட்டிருந்தாலும் இன்றைய நிலை போல மொழி ஆதிக்க உணர்வு அல்லது சிக்கல்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை

இந்தி என்பது ஒரு தனிமொழியல்ல

அரேபியரும், பாரசீகர்களும், துருக்கியரும், ஆப்கானிஸ்தருமான முகம்மதியர் 8ஆம் நூற்றாண்டு அளவிலேயே இந்தியா மீது படையெடுத்தாலும் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுவரை சிந்து, பஞ்சாப் பகுதிகளுக்குள்ளாகவே அவர்கள் ஆட்சி அமைந்தது. முகம்மது துக்ளக் காலத்தில் (1325-1351) முகம்மதியர் ஆட்சி தக்காணம் வரை நீட்சி பெற்றது. வலிமை மிக்க அவுரங்கசீபு காலத்தில் (1658-1707) முகம்மதிய ஆட்சி கருநாடகம், தமிழ்நாடு உள்ளிட்டத் தென்னிந்திய பகுதிகளிலும் பரவியது. தில்லி முகம்மதிய அரசின் தலைநகராகிய பின் இந்தி மொழி பேசிய மக்களொடு பழகியதன் விளைவாக அம்மொழிகளுடன் பாரசீகம், அரபிச் சொற்கள் கலந்து உருது என்னும் ஒரு கலவை மொழி தோன்றியது. **இந்தியென்பது ஓர் ஒழுங்குபட்டத் தனி மொழியன்று. பஞ்சாப், சிந்து, வங்கம், நேபாளம், குஜராத் உட்பட்ட வட மாநிலங்களில் பேசப் படும் பல உட்பிரிவுகளைக் கொண்ட ஒரு பல்கிளை மொழியே இந்தி ஆகும்.**

அதாவது மேல்நாட்டு இந்தி என்பது பச்சானி, ப்ரஜாபாஷா, கன்னோசி, பந்தேலி, உருது ஆகியவையும், கீழ்நாட்டு இந்தியாக அவதி, பகேலி, சத்தீசுகடி, மைதிலி, போஜ்புரி, மசுகி எனவும், இராஜஸ்தான் நிலப்பரப்பில் மால்வி, மார்வாடி, மேவதி, சைபுரி எனவும் அறியப்பட்டதாக சென்னைப் பல்கலைக் கழகத் தலைவராகயிருந்த் முனைவர் சங்கரராச நாயுடு தன்னுடைய இந்தி நடைமொழிகள்- ஓர் உடனுறவுப் படுத்தம் (Hindi dialects - A correlation) என்ற நூலில் விளக்கியிருப்பார்.

இந்திய நாட்டு வட்டார மொழிகளுடன் அராபி மொழியும், பாரசீக மொழியும் கலந்தமையால் உருது என்ற மொழியும், அதைப்போல சமற்கிருதம் கலந்தமையால் இந்தி மொழியும் தோன்றின. அந்த இந்தியும் உருதும் கலந்த மொழி இந்துஸ்தானி எனவும் அழைக்கப் படுகிறது. இந்த மொழியையே மகாத்மா காந்தியும் முன்னெடுத்தார். இந்தக் கலப்பும் உருவாக்கமும் கடந்த 200 ஆண்டுகளில் உருவான ஒன்று. எனவே தென் இந்திய மக்களுக்கு இந்தி, இந்துஸ்தானி, சமற்கிருதமும் அயல் மொழிகளே! ஆங்கிலமும் இதே காலவரையரைக்கு உட்பட்ட ஒன்றாகும்.

இந்தி நடை மொழிகளைப் பாகுபடுத்திக் கூறுவதும், இந்தி பேசுவோர் தொகையைக் குறிப்பதும், அதையே இந்தியைப் பொது மொழியாகக் கருதி சான்று காட்டுவதும் மிக மிகத் தவறாகும். எனவே இந்தி என்றொரு திருந்தா மொழி இன்ன காலத்தில் தோன்றியது என்று திட்டவட்டமாகக் கூற முடியாது. அதன் இலக்கிய வடிவம் 500 ஆண்டுகளுக்கு உட்பட்டதேயாகும். தமிழுக்குச் சிறந்த பாவலர்களாக நாம் தொல்காப்பியரையும், திருவள்ளுவரையும் காட்டுவதைப் போல இந்தியின் தலைசிறந்த பாவலர் துளசிதாசர் ஆவார். இவர் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

இன்று நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் ஒன்றிய அரசின் துறைகளில் பயன்படுத்தப்படும் இந்தி என்பது பேச்சு வழக்கிற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு வடிவம் ஆகும். இந்த இந்தி முக்கால் பகுதி சமற்கிருதமேயாகும். இந்தி என்ற பெயரில் இன்று கையாளப் படும் மொழி என்பது வட இந்திய வட்டார மொழிகளிலிருந்து பெரிதும் மாறுபட்ட ஒன்றாகும்

ஆங்கிலேயர் விரும்பிய மாநிலங்களின் தன்னாட்சி

இந்திய நாட்டின் மொழிக் கொள்கையென்பது நாட்டின் விடுதலைக்கு முன்பு இருந்ததைவிட, தற்போது அதிக சிக்கல் நிறைந்த ஒன்றாகவும் இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

பிரிட்டிஷார் இந்திய நிலப்பகுதியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள விரும்பியிருந்த நிலையில் 1946 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தேர்தல் நேரத்தில் மக்களுடைய மனநிலையை நேரிடையாக அறிந்து கொள்வதற்காக ஆங்கிலேய

நாடாளுமன்ற அமைச்சரவைக் குழு இந்தியாவைப் பார்வையிட வந்தது. இந்த தூதுக் குழுவின் நோக்கம் இந்தியாவிற்கு ஒரு அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதேயாகும். மேலும் அதை இந்திய மக்களே தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் எண்ணினர். பின்னர் அந்த அமைச்சரவைக் குழு தன்னுடைய பரிந்துரையாக இந்தியாவின் அரசமைப்புச் சட்டம் சில முகாமையான அடிப்படை வடிவத்தில் இருக்க வேண்டும் என்று அறிவித்தனர்.

அதன் படி,

(1) பிரிட்டிஷ் இந்தியாவையும், மாநிலங்களையும் உள்ளடக்கிய ஒரு மைய அரசு இருக்க வேண்டும். அதன் கீழ் வெளியுறவு, பாதுகாப்பு, நாணயம் மற்றும் போக்குவரத்து ஆகியவை வைத்திருக்க வேண்டும்.

(2) பிரிட்டிஷ் இந்தியா மற்றும் மாநிலங்களின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு நிருவாகத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(3) மாநிலங்கள் முழுமையானத் தன்னாட்சி அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

(4) மாநிலங்கள் தனியான குழுக்களாகச் செயல்பட அதிகாரம் பெற்றிருப்பதுடன் நிருவாகம் மற்றும் சட்டமன்றங்களயும் வைத்துக் கொள்ள வசதி செய்யப் பட வேண்டும்.

(5) மேலும் இந்துக்கள், இசுலாமியர்கள், சீக்கியர்கள் ஆகியோர்களின் பெரும்பான்மையைக் கணக்கில் கொண்டு இந்திய மாகாணங்கள் ‘‘ஏ’’, ‘‘பி" ‘‘சி" என வகைப் படுத்தப்பட்டன. இதன் மூலம் அனைத்து மக்களுக்கும் தன் அரசியல் பங்கீட்டை உறுதி செய்தது. அரசமைப்புச் சட்டமன்றத்திற்கான இந்த தேர்தலில் காங்கிரசுக் கட்சி 205 இடங்களையும் முஸ்லீம் லீக் 73 இடங்களையும் சீக்கியர்கள் 4 இடங்களையும் பெற்றனர்.

ஆட்சி மொழி விவாதங்கள்

டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்த அரசமைப்பு மன்றத்தில் மொழி பற்றிய விவாதங்களில் பங்கேற்றவர்கள் 78 பேர் ஆகும்.

இதில் அரசமைப்பு வரைவில் (சரத்து-301) பரிந்துரைக்கப் பட்ட ஆட்சி மொழி பற்றிய விவாதம் 1949 செப்டம்பர் 12,13,-14 ஆகிய நாட்களில் நடைபெற்றது. ஆங்கிலேயர் ஆதிக்கத் திலிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்ற உற்சாகத்தில் ஒரு கொடி, ஒரு மத்திய அரசு, ஓர் இராணுவம் என்பதைப் போல ஒரு தேசிய மொழியும் தேவை என்ற கருத்தில் இந்தி, சமசுகிருதம், உருது, இந்துஸ்தானி என வட இந்தியப் பகுதில் பேசப்படும் மொழிகள் முன்னிறுத்தப்பட்டன என்பதுடன் இந்தியாவிலிருந்து ஆங்கிலம் அகற்றப் படவேண்டும் எனவும் பெருமளவில் விவாதிக்கப் பட்டது. ஆங்கிலத்தை அய்ந்து ஆண்டுகளில் அகற்றவா? அல்லது பதினைந்து ஆண்டுகள் காலவரையரை செய்வதா? என்பதோடு இல்லாமல் இந்தி மொழியா இந்துஸ்தானி மொழியா? என்பதைச் சுற்றியே விவாதங்கள் நடைபெற்றுள்ளன. பின்னர் ஒரு கட்டத்தில் இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் தேவநாகரி எழுத்துருவில் எழுதப்பட வேண்டும் எனவும் விவாதிக்கப் பட்டன. அதற்கும் ஒரு படி மேல் சென்று இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தியைப் பயன் படுத்துவதென்று தீர்மானிக்கப் பட்டதுடன், தேவநாகரி எண்களையே நாம் பயன்படுத்த வேண்டும் என்று வட இந்தியர்களால் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்துத் தான் அதிக நேரம் செலவிடப்பட்டுள்ளது. அதில் ஒரு சிலர் தேவநாகரி எண்களுடன் உருது எண்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என விவாதித்துள்ளனர்.. சமஸ்கிருத மொழியா அல்லது இந்தி மொழியா? எனச் சிலரும், இந்தி மொழியா அல்லது இந்துஸ்தானி மொழியா எனச் சிலரும், உருது மொழியும் வேண்டும் எனச் சிலரும், இந்தி மொழியுடன் தேவநாகரி எண்களும் பயன்படுத்தப்பட வேண்டும் எனச் சிலரும் வாதாடினார்களேயொழிய இந்திய நாட்டின் பன்முகத் தன்மை குறித்து யாரும் சிந்தித்தாகத் தெரியவில்லை. இவர்கள் யாரிடமும் ஒரு தொலை நோக்கான பார்வை இருந்ததில்லை.

அன்றைய மதாராஸ் மாகாணத்திலிருந்து பங்கேற்ற உறுப்பினர்கள் கூட இதற்கு மாற்றாக ஒரு முன்னெடுப்பை மேற்கொள்ளவில்லை மாறாக இந்தியை ஏற்றுக் கொள்கின்ற எங்கள் தியாகத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனப் பதிவு செய்துள்ளனர். காந்தியால் முன்வைக்கப் பட்ட இந்துஸ்தானி மொழிக்காக வாதாடியுள்ளனர். பெரும்பாலான

விவாதங்களில் என்.ஜி.ரங்கா, கோபாலசாமி அய்யங்கார், டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், டாக்டர் பி. சுப்பராயன், முகம்மது இஸ்மாயில் (காயிதே மில்லத்) டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் பங்கேற்றுத் தங்கள் கருத்துகளைத் தெரிவித்துள்ளனர்.

இதில் குறிப்பாக டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் எடுத்து வைத்தக் கருத்துகள் கவனிக்கத் தக்கவை.

“இந்தி தேசிய மொழி என்றச் சொல்லைப் பயன்படுத்தாதீர்கள். ஆங்கிலம் அல்லது வேறு எந்த மொழியை விட இந்தி எந்த அளவிற்குத் தேசியம் ஆகும். எங்களுக்கு எங்கள் மொழிகள் இருக்கின்றன. அவைகளும் தேசிய மொழிகள் தான். தெற்கு ஏமாற்றம் அடைந்திருக்கிறது என்று சொல்வேன். தன்னுரிமை, விடுதலை போன்றவை பெற்று விட்டதாக உணர்ச்சி இருந்தாலும் அதில் மிகச் சிறிதளவே தெற்கில் உணரப்படுகிறது. நாட்டின் வடகோடியில் உள்ள தலைநகருக்கு வந்து இந்த நாட்டில் தாங்கள் புதியவர்களாக உணருவதால் நாங்கள் இந்த நாட்டைச் சார்ந்தவராகவும், இந்த நாடு எங்களுடையதாகவும், இங்கிருப்பவையெல்லாம் எங்களுக்குச் சொந்தமானவை என்றும் எம்மால் உணர முடியவில்லை. தெற்கில் உள்ள மக்கள் இந்த நாட்டிற்குரியவர்கள் என்றும் இந்த நாட்டில் ஒற்றுமை இருக்கிறது என்றும் அவர்களுக்கு உணர்த்த நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் தெற்கிலுள்ளவர்கள் திருப்தி அடைய மாட்டார்கள் என எண்ணுகின்றேன். கசப்பான உணர்வுகளே மிதமாக இருக்கும். இது எதிலே போய் முடியும் என்பதை இப்பொழுது சொல்வது எளிதல்ல! அது மட்டுமல்ல; நிரந்தரமாகவே எங்களைக் கட்டிப்போடுகிறீர்கள்.”

மேலும் ஆட்சி மொழி குறித்த விவாதங்களில் பண்டித் லஷ்மி காந்த மைத்ரா அவர்களின் பேச்சும் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அவருடைய விவாதம் ஒரு மாநில மொழியை ஏன் தேசிய மொழியின் உயரத்துக்கு தூக்குகின்றீர்கள் என்றும் ஒரு மொழியைப் பேசுகின்ற அல்லது புரிந்து கொள்கின்றவர்களின் எண்ணிக்கையை வைத்து ஆட்சி மொழி ஆக்காதீர்கள். இது பிற்காலத்தில் மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என எச்சரித்தார். மொழி பற்றிய கேள்விகளுக்கு தீர்வு காணும் போது மக்களாட்சிக் கோட்பாடுகளைக் கவனிக்கக் கூடாது. ஒரு நாட்டில் அதிகமான நபர்களால் பேசப்பட்டால் அல்லது புரிந்து கொள்ளப்

பட்டால் அந்த மொழிதான் பெரும்பான்மையான மக்களுடைய மொழி என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர் பேசுகையில்.....

“மொழியைப் பொறுத்தவரையில், எந்த அளவிற்கு உணர்ச்சி கொந்தளிக்கும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூற விரும்புகிறேன். கிழக்குப் பாகிஸ்தானில் சென்ற ஆண்டு என்ன நடந்தது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வங்காளப் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானை நிறுவியவர் பாகிஸ்தான் முழுமைக்கும் உருதுதான் ஆட்சி மொழி என்று ஆணையிட்டார். இந்த ஆணைக்குக் கிழக்கு பாகிஸ்தானின் எதிர்ச் செயல் என்ன தெரியுமா? கிழக்குப் பாகிஸ்தானில் இருந்த வங்காள முஸ்லீம்கள் இந்தத் திணிப்பைக் கண்டு கொதிப்படைந்து ‘நீங்கள் எங்களுடைய வங்காள மொழியை அழிக்கப் பார்க்கின்றீர்களா?’ என்றார்கள். பாகிஸ்தான் என்ற இசுலாமிய நாட்டை உருவாக்குவதில் நாங்கள் முழுமனதுடன் ஒத்துழைத்தோம். எங்கள் மொழியை எந்த தைரியத்தில் தொடுகிறீர்கள்! கிழக்குப் பாகிஸ்தான் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப் பெற்று அதற்கு எதிராகக் கண்ணீர்ப் புகை, தடியடி போன்றவை நிகழ்த்தப்பட்டன. இந்தப் போராட்டங்களுக்கு இந்துக்களின் ஐந்தாம் படையே பொறுப்பு என பாகிஸ்தானின் அதிகார வர்க்கம் பயமுறுத்தியது. முஸ்லீம் அறிஞர்களும் கல்வியாளர்களும் “ரவீந்திரநாத் தாகூரின் மொழியை அழிக்கின்றீர்கள்; நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்” என்றனர். டாக்காவில் நடந்த மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூட்டத்தில் ஜின்னா அவர்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமிய நாட்டில் தங்களுடைய மொழியாக அராபிய எழுத்தில் உள்ள உருதுவை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறிய பொழுது “இல்லை; இல்லை” என்று குரல் எழுந்தது. கூச்சல் அதிகமானது. அமைதிப்படுத்த இயலவில்லை.அவர் தொடர்ந்து பேச இயலாமல் கராச்சிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.”

(இவர் இந்திக்குப் பதில் சமஸ்கிருதம் தேசிய மொழியாக வேண்டும் என்று வாதிட்டவர் என்பதும் இவண் நோக்கத் தக்கது)

எனினும் வங்காள மொழியுணர்வு பின்னர் 1952ல் பெரும் மாணவர் போராட்டமாக உருவெடுத்தது. அது முதல் நீறு பூத்த நெருப்பாக இருந்த உணர்வு 1972 ஆம் ஆண்டு கிழக்குப்

பாகிஸ்தான் வங்காள தேசம் என்ற ஒரு தனி நாடாக விடுதலை பெற்றது என்பது வரலாறு.

வட இந்தியர்களின் வல்லாண்மைப் போக்கு

பெரும்பாலான வட இந்திய மக்களும் ஒன்றிய அரசில் ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அடிக்கடி குறிப்பிடுகின்ற ஒன்று - பிற நாடுகள் தனக்கென ஒரு பொது மொழியைக் கொண்டிருக்கும் போது இந்தியா ஏன் தனக்கென ஒரு பொது மொழியை (இந்தி மொழியை) மேற்கொள்ளக் கூடாது? என்று துடிக்கின்றனர். இவ்வுணர்ச்சியை மேலோட்டமாகப் பார்க்கையில் இயல்பான. ஒன்றாகத் தோன்றினாலும் இது பகுத்தறிவுச் சிந்தனையடிப்படையில் எழுந்த ஒன்றாக இல்லை.

நம் நாட்டில் அரசியல் காரணங்களுக்காகவும் வட இந்திய வல்லாண்மையைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும் இந்தித் திணிப்பு தொடர்ந்து புகுத்தப் பட்டுவருகிறது. இதன் மறைமுகத் திட்டம் என்பது இந்தி பேசாத தென்மாநிலங்கள், வட மாநிலங்களைப் போல ஆங்கிலம் பயன் படுத்துவதை முற்றாகத் துறந்து விட்டால் இந்தியா முழுமைக்கும் இந்தியைப் புகுத்துவது அல்லது இந்தி என்ற பெயரில் சமற்கிருததைப் புகுத்துவது எளிதாகும் என்று கருதுகின்றனர். இதன் வெளிப்பாடுதான் செம்மொழிகளாக விளங்கும் வட்டார மொழிகளை மாற்றான் தாய் மனப்பான்மையில் அணுகுவதும், இந்தி மற்றும் சமசுகிருத மொழிகளுக்குக் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்வதும் ஆகும்.

பேச்சு வழக்கற்ற சமசுகிருத மொழியினை இந்தியாவின் ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டும் என இந்து மகாசபை மாநாட்டில் தீர்மானம் கொண்டு வந்தனர். எனினும் அவர்கள் கனவு இன்று வரை நிறைவேறாமல் தென் மாநிலங்கள் தடுத்து வருகின்றன.

1960களில் இந்திதான் இந்தியாவின் தேசிய மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று மிகத் தீவிரமாகப் போராடிய சேத் கோவிந்ததாஸ் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் 1965 ஆம் ஆண்டு தமிழ் நாட்டு மாணவர்கள் நடத்திய இந்தித் எதிர்ப்புப் போராட்டக் காலகட்டத்தில் இந்திய இராணுவத்தை அனுப்பியேனும் இந்தியைத் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளச்

செய்வோம் என கொக்கரித்தார். பின்னாளில் அதுவும் நடந்தேறியது, நூற்றுக் கணக்கான இந்தி எதிர்ப்பாளர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலியானர்கள்.

வட இந்தியாவின் ஒரு வட்டார மொழியான இந்தி மொழி போதிய வளமையோ, சொல்லாட்சியோ பெற்றிராத காரணத்தால் அரசின் அலுவல் மொழியாக ஆங்கில மொழி 15 ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று சொல்லப்பட்டு பின்பு அதன் தேவைக்கேற்ப திருத்துவதற்கு வழிகோலியது. அது கூட ஆட்சி மொழி விவாதிக்கப் பட்டபோது ஆங்கிலம் - இந்தி ஆகியவற்றிற்கு ஆதரவாக 77-77 வாக்குகள் என்ற சம நிலை உண்டானது. பிறகு குழுவின் தலைவர் வாக்கு இந்தி மொழிக்கு ஆதரவாக அளிக்கப் பட்டுப் பெரும்பான்மையென ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போது 75 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தி மொழியால் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க இயலவில்லை.

இந்திய அரசமைப்புச் சட்ட அலுவல் மொழி விதிகளைச் சுட்டிக் காட்டி இந்தி பேசாத மாநில அரசின் அலுவல்கள், கல்வி, வணிகம், நிருவாகம், செய்தித் தொடர்பு, வானொலி, தொலைக்காட்சி, தொடர்வண்டி, வங்கிகள் மற்றும் அஞ்சல்துறை என அனைத்திலும் இந்தியைத் திணிக்க முயலும் ஒன்றிய அரசின் போக்கு பகுத்தறிவின் பாற்பட்டதல்ல!

இன்று அந்த ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியாவின் ஒரு வட்டார மொழியான இந்தியே பயன்படுத்தப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசின் சார்பில் பெரும் அழுத்தம் தரப்படுகிறது. அதற்காக இந்திய ஒன்றிய அரசு கோடிக்கணக்கான மக்கள் வரிப் பணத்தையும் செலவிடுகிறது.

இந்த மொழி மாற்றச் சிந்தனைக்கு அவர்கள் விடுக்கும் காரணங்கள்:

(1) ஆங்கிலம் ஓர் அயல் மொழி

(2) இந்தியாவின் நிருவாகப் பயன்பாட்டுக்கு ஒரு தேசிய மொழி இன்றியமையாதது

(3) கிராம மக்களையும் அறிவாற்றல் மிக்கவர்களையும் அம்மொழி பிரிக்கிறது

(4) இந்திய அரசமைப்புச் சாசனத்தின் 343 வது பிரிவு இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக இந்தியை முதன்மைப் படுத்துகிறது.

இதில் நமது முதல் கேள்வி ஆங்கிலம் ஓர் அயல் மொழியா? மொழி என்பது கருத்தை வெளியிடும் ஒரு தொடர்புக் கருவி; மொழிக்கு இனம், மதம், பாலினம் என்ற தன்மை ஒன்று கிடையாது. இந்துக்கள் பல மொழிகள் பேசுகின்றனர்; ஒரே நாட்டைச் சார்ந்த மக்கள் பல மொழிகளைப் பேசுவது; பல நாடுகளைச் சார்ந்த மக்கள் ஒரே மொழி பேசுவது என்பவையெல்லாம் இன்று நாம் கண்கூடாகக் காணும் உண்மையாகும். எனவே ஒரு நாட்டின் பூகோள எல்லைக்குள் தோன்றியதால் அம்மொழியின் பிறப்பிடம் குறிப்பது ஒரு அளவையாயின் சமசுகிருதம், இந்தி, சிந்தி உட்பட வட இந்தியாவில் பேசப்படும் பெரும்பாலான மொழிகள் அனைத்தும் தென்னிந்திய மக்கள், வடகிழக்கு மக்கள் அனைவருக்கும் அயல் மொழிகளே. ஒரு நாட்டின் மொழித்தூய்மை அல்லது பிறப்பிட மூலம்தான் அளவு கோல் எனில், டாக்டர் அம்பேத்கர் சுட்டிக் காட்டியிருப்பது போல, தமிழ் மொழி ஒன்றுதான் இந்தியாவின் ஒரே மொழியாக எண்ணத் தக்கது என்பதை ஒப்புக் கொள்ள முன்வருவார்களா?

மொழிக் கொள்கையில் மேலை நாடுகளின் பார்வை

செருமனி, பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின், சீனம் போன்ற நாடு அல்ல இந்தியா. இந்தியா என்பது ஐரோப்பியக் கண்டத்தைப் போன்றது. சற்றொப்ப 8 கோடி மக்கள் தொகை கொண்ட அய்ரோப்பிய நாடுகளில் 287 மொழிகள் பேசப் பட்டாலும் அதில் ஆங்கிலம், ஜெர்மனி, இத்தாலி உட்பட **24 மொழிகள் அய்ரோப்பிய ஒன்றியத்தின் அலுவல் மொழிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன. அங்கு ஒரு பொது மொழி கிடையாது.** கிரேக்கம், ரஷ்யா நீங்கலாக எல்லா மொழிகளுக்கும் அங்கு பொது எழுத்து வடிவம் இருந்த போதிலும், அய்ரோப்பியக் கண்டம் முழுமைக்கும் ஒரு பொதுவான நாணயத்தை உருவாக்க முயன்று வெற்றி கண்டாலும், ஒரு பொது மொழி ஏற்படுத்த முயன்று அது தோல்வியைத் தழுவியது என்பது வரலாறு.

தென் அமெரிக்கக் கண்டத்திலுள்ள பொலிவியா என்ற நாட்டில் பெரும்பாலான மக்கள் ஸ்பானிஷ் மொழியைப் பேசினாலும் அங்கு 37 மொழிகள் அலுவல் மொழிகள் என அந்நாட்டின் அரசமைப்புச் சாசனம் வகுத்துள்ளது. காரணம் பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாட்டில் பொது மொழி சாத்தியமில்லை என்பதை இது உணர்த்துகிறது.

இந்திய அரசமைப்பு மற்றும் நிருவாக நடைமுறை மொழி

இந்திய நாடு பன்முகத் தன்மை கொண்ட மொழி வழி பண்பாடுகளயும் நாகரிகக் கூறுகளையும் கொண்டிருப்பதால் இந்திய நாட்டுக்கு அதன் அரசமைப்புச் சட்டப்படி தேசிய மொழி என்ற ஒன்று கிடையாது. எனினும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 343 ஆம் விதி இந்திய ஒன்றிய அரசின் அலுவல் மொழியாக தேவநாகரி எழுத்துருவில் எழுதப் படும் இந்தியும், அதனுடன் ஆங்கிலமும் பயன்படுத்தப் படுவதை உறுதி செய்கிறது.

இவை தவிர இந்திய நாட்டின் வட்டார மொழிகளாக அரசமைப்புச் சட்டத்தின் அட்டவணை 8 இல் 14 மொழிகள் வரிசைப் படுத்தப் பட்டிருந்தன. அதன் பின் இந்திய அரசமைப்புச் சட்டம் பல முறை திருத்தப் பட்டு தற்போது இந்தப் பட்டியலில் அஸ்ஸாமி, வங்காளம், போடோ, டோக்கிரி, குஜராத்தி, இந்தி, கன்னடம், காசுமீரி, கோங்கணி, மைதிலி,மலையாளம், மணிப்பூரி, நேபாளி, ஒடியா, பஞ்சாபி, சமற்கிருதம், சந்தாலி, சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 22 மொழிகள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பட்டியல் விரிந்து கொண்டு போகின்றது என்பதை இந்தி வெறியர்கள் சிந்திக்க மறுக்கின்றனர். மேலும் இந்த அட்டவணையில் ஆங்கிலத்துக்கு இடமளிக்கவில்லை.

நாட்டு மக்களிடையே ஒரு மொழி உருவாக்கும் ஏற்பிசைவு, எளிமை, நடைமுறைப் பயன்பாடு ஆகியவையே அம்மொழியின் செல்வாக்கை நிலை நிறுத்தும். **இன்று உலக மக்கள் தொகையில் ஆங்கிலம் பேசுவோர் அதிகம் உள்ள நாடு என்ற பட்டியலில் முதல் இடத்தைப் பிடிப்பது இந்தியாவாகும்.** இந்திய மக்கள் தொகை எண்ணிக்கையில் 25 விழுக்காடு ஆங்கிலப் புலமை பெற்றவர்கள் என்பதை உலகப் புள்ளி

விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே நிலவியல், தோற்றம், பயன்பாடு என எவ்விதமான காரணிகள் கொண்டு அளந்தாலும் ஆங்கிலம் இந்திய வட்டார மொழிகளுக்கு இணையாகவே உள்ளது.

1951 இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கையில் 750 வட்டார மொழிகள் இருப்பதாக குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் சில மொழிகள் மிகச்சிறிய எண்ணிக்கை மக்களால் பேசப்படும் மொழிகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக அவ்வறிக்கையில் 555 இந்திய மக்களே சமசுகிருதம் பேசுபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது மக்கள் தொகைப் பெருக்கத்துக்கொப்ப சில ஆயிரங்களாகப் பெருகி உள்ளது. தென்னிந்தியாவிலும் வட இந்தியப் பெரு நகரங்களிலும் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தப் புரிந்து கொள்ளும் தகுதி படைத்தவர்களாக உள்ளனர் என்பதையும் 1951 மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கைச் சுட்டிக் காட்டியது. எனினும் அரசமைப்புச் சட்டம் ஏற்படுத்தப் பட்டபோது அதில் அஸ்ஸாமி, பெங்காலி, இந்தி, சமற்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், உருது உட்பட 14 மொழிகள் மட்டுமே அட்டவணை 8-இல் இடம் பெற்றன. பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இன்று பல இலட்சக்கணக்கில் உள்ளனர். இன்று 8வது அட்டவணையில் 22 மொழிகள் உள்ளன. எனினும் ஆங்கிலம் இந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை. இந்த 22 மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியைப் பேசுபவர்களுக்கு மீதியுள்ள 21 மொழிகளும் அயல் மொழிகளே. எனவே ஆங்கிலம் ஓர் அயல் மொழி என்ற வாதம் ஏற்புடையது அல்ல.

மேலும் ஆங்கிலம் இயல்பாகவே இந்திய நாட்டின் தவிர்க்க இயலாத ஒரு மொழியாகி விட்டது. ஆங்கிலத்தின் மூலமே நாம் அரசியல் உணர்வு, விடுதலை உணர்வு பெற்றோம். செய்திதாள்கள், ஒன்றிய, மாநில சட்ட அவைகள், நாடு முழுவதும் நடைபெற்ற சொற்பொழிவுகள், எழுத்துகள் என அனைத்திலும் மகாத்மா காந்தியும் மற்ற தலைவர்களும் ஆங்கிலத்தையே கையாண்டனர். இந்திய நாட்டின் விடுதலைக்கு ஆங்கிலம் வழியாகத்தான் போரிட்டனர். இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆங்கிலமே துணை நிற்கிறது. அம்மொழியின் சொல் நுட்பமானது, தொழில், மருத்துவம், சட்டம், இலக்கியம்,

பொருளியல், வணிகம் ஆகியவற்றிற்கு ஏற்றதாக உள்ளது. இதன் காரணமாக உலகின் பல்வேறு நாடுகளில் அதுவே இணைப்பு மொழியாகவும் வணிக மொழியாகவும் பயன் படுத்தப் பெறுகிறது.

இந்தியாவில் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளாக பணித்துறை அலுவலகங்கள், சட்டம், மருத்துவம், உயர் கல்வி ஆகியவற்றில் அதுவே பயிற்று மொழியாகவும் இந்திய ஒன்றியம் மற்றும் மாநிலங்களுக்கிடையே ஓர் இணைப்பு மொழியாகவும் விளங்கி வருகிறது.

ஆங்கிலத்தை நீக்கி விடுவதால் நிருவாகம் செம்மையுறுமா? உண்மையில் ஆங்கில மொழியை ஒரு கருவியாகக் கொண்டே இந்திய நாட்டில் ஒரு நல்ல நிருவாக அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். ஆங்கிலேயர்கள் நம்மை விட்டுச் சென்றபோது ஒரு தலை சிறந்த நிருவாக அமைப்பை இந்தியா பெற்றிருந்தது. ஆனால் அது இன்று சீர்கேடடைந்து இந்தியப் பொதுத்துறை, அரசுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் தனி மனிதர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அந்த தனியார் நிறுவனங்கள் மேலாண்மையில் இந்தி மொழியைப் பயன் படுத்துகின்றனரா அல்லது ஆங்கிலத்தைப் பயன் படுத்துகின்றனரா? என்பதுவும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக் கொண்ட நாட்டின் முதன்மைப் பணி யாதெனின் நடைமுறையில் உள்ள தனிநல முரண்பாடுகளை அகற்றி இணங்கச் செய்வதும், எதிர்காலச் சிக்கலைப் போக்குவதற்கு வழி செய்வதும் ஆகும். அதைப் போல ஜனநாயக மரபு என்பது பெரும்பான்மையோர் எண்ணம் ஈடேற வேண்டும் என்பதல்ல! சிறுபான்மையோரும் அச்சமின்றி அரசியல் களத்தில் பங்கேற்கவும், அவர்களின் உரிமைகளும் உணர்வுகளும் மதிக்கப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் இன்றைய அரசியல் மேற்சொன்ன அனைத்திற்கும் முரணாக உள்ளது. இந்த நிலை நீடித்தால் எதிர்கால இந்தியாவின் ஒற்றுமை என்பது கேள்விகுறியாகி விடும்.

அரசமைப்புச் சட்டம் உருவான போது குறிப்பாகச் சட்டம், நீதித்துறை, கல்வி முறை என முப்பிரிவுகளாக பிரித்து விளக்கம் தரப்பட்டுள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் ஆட்சி மொழி ஒன்றிய அரசு, மாநில அரசுப் பணித்துறை, தொடர்பு

மொழி குறித்தும் வரையறை செய்துள்ளது, குறிப்பாக மாநிலக் கல்விக் கொள்கை, தாய்மொழி, பயிற்று மொழி குறித்தும் அரசமைப்பின் திருத்தங்கள் தெளிவு படுத்தியுள்ளன.

இந்திய அரசமைப்புச் சாசனத்தின் 343 வது பிரிவு ஒன்றிய அரசின் அலுவல் மொழிகள் குறித்தும், 345 வது பிரிவு மாநில வட்டார மொழிகள் குறித்தும் 346 வது பிரிவு ஒன்றிய மாநில அரசுகளின் தொடர்பு மொழி குறித்தும் விளக்குகின்றன. **அரசியல் சாசனப் பிரிவு 348 உச்சநீதி மன்ற, உயர் நீதி மன்ற வழக்காடு மன்ற மொழியாக ஆங்கிலம் மட்டுமே திகழும் எனவும் வகைப்படுத்தியுள்ளது**. இன்று வரை ஆங்கிலம் மட்டுமே நீதி மன்ற மொழியாக உள்ளது. இந்தி உட்பட வேறு எந்த வட்டார மொழிகளும் ஆங்கிலத்தின் இடத்தை எட்டவில்லை. மேலும் கல்வி நிலையங்கள் மொழி தொடர்பாக எந்த விதமான ஆணையும் இந்திய அரசமைப்புச் சாசனத்தில் இடம் பெறவில்லை. **1956 ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளியில் தாய்மொழி மூலம் பாடம் கற்பிக்க அந்தந்த மாநில அரசுகள் வகைசெய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டு அரசியல் சாசனத் திருத்தம் கொண்டு வந்து 350A பிரிவு சேர்க்கப்பட்டது.**

ஆங்கில மொழி இந்திய மக்கள் மீது கட்டாயமாகத் திணிக்கப் பட்ட ஒன்று அல்ல. விடுதலைக்கு முன்பு இந்தியாவில் ஆங்கில அறிந்தவர்களின் எண்ணிக்கை வெறும் 2% மட்டுமே, அனால் இன்று அது 25% அளவுக்கு உயர்ந்துள்ளது. அறிவியல், கணிதம், மருத்துவம், அணு ஆய்வு, மின்னியல், எண்ணியல் துறைகளில் ஆங்கிலத்தின் பரந்து பட்ட சொல்லாட்சியும் பயன் பாடும் உலக மக்களை அதன் பால் ஈர்த்துள்ளன. ஒரு மொழிக் கொள்கையைப் பின்பற்றிய ஜப்பான், சீனம், ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கூடத் தாய்மொழிக்கு அடுத்து ஆங்கில மொழி கற்பதில் பேரார்வம் காட்டுகின்றன.

நாம் ஆங்கில மொழியை இந்திய மொழிகளில் ஒன்று என்று ஒப்புக் கொண்டு விட்டால் ஆங்கிலத்தின் மீதுள்ள வெறுப்புணர்ச்சி மறைந்து விடும். ஆனால் ஆளும் ஒன்றிய வர்க்கம் அந்த உணர்வைப் பெற மறுக்கிறது என்பதோடல்லாமல், ஆங்கிலத்தை அகற்றி விட்டால் தென் மாநிலங்களில் எளிதாக இந்தியைப் புகுத்தி விடலாம் என்ற கனவிலேயே உள்ளனர்.

மொழிவாரி மாநிலங்கள்

இந்திய அரசமைப்புச் சட்டம் வரையறுக்கப் பட்டபோது நிலவியல் அடிப்படையில் இந்திய ஒன்றியத்தில் மூன்று வகையான மாகாணப் பிரிவுகள் மட்டுமே இருந்த நிலையில் இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் பிரிப்பு, கலாச்சார மற்றும் மொழி அடையாளங்களின் அடிப்படையில் மாநிலங்களை மறுசீரமைப்பு செய்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

1956 நவம்பர் 1-ல், ஃபசல் அலி கமிஷன் பரிந்துரையின்படி, 14 மாநிலங்கள் மற்றும் 6 யூனியன் பிரதேசங்களாக இந்தியா அதிகாரப்பூர்வமாக பிரிக்கப்பட்டது. இது பொட்டி சிறீராமலுவின் ஈகத்தால் உருவான ஆந்திர மாநிலப் பிரிவினைக்குப் பின் (1953) நடைமுறைக்கு வந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகு, மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது, ஆனால் தொடக்கத்தில் காங்கிரஸ் தலைமை தயங்கியது. ஜவகர்லால் நேரு இதற்கு உடன்படவில்லை.

1956 மொழிவாரி மறுசீரமைப்பு எல்லை மாற்றியமைக்கப் பட்ட பின்பு 14 மாநிலங்களும் 6 யூனியன் பிரதேசங்களும் அமைந்தன. இதை அரசமைப்புச் சட்ட அட்டவணை 1 பட்டியலிடுகிறது.

ஆனால் இன்று அந்த அட்டவணையில் 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன. இந்திய மாநிலங்களின் எண்ணிக்கைப் பெருக்கமும், எட்டாவது அட்டவணை மொழிகள் நீட்சியும் உணர்த்தும் செய்தி என்ன என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும். இன்றும் கூட போடோ மொழி பேசும் மக்கள் தங்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராடுகின்றனர். சீக்கியர்கள் பஞ்சாப் மாநிலக் கோரிக்கையை வைத்த போது இந்தி பேசும் இந்து மக்கள் அரியானா என்ற மாநிலத்தைக் கோரியதும் இந்த அடிப்படைதான். அதே போல சத்தீஸ்கர் மொழி பேசும் மக்கள் தனக்கென்று தனி மாநில உரிமை வேண்டி பீகாரிலிருந்து பிரிந்தவர் ஆவர். இந்திய மாநிலங்களின் எண்ணிக்கை மக்கள் பேசும் மொழி அடிப்படையில் இன்னும் பிரிந்து கொண்டே போகும். காரணம் அதிகமான மக்கள் பேசும் மொழி இந்தி என்று கூறி ஆரியக்

கோட்பாடுகளை இந்திய மாநிலங்கள் எங்கும் பரப்ப நினைக்கும் சிந்தனையின் விளைவாக இந்தி பேசாத பகுதியில் உள்ள மக்கள் குறிப்பாகத் தென் மாநில மக்கள், வடகிழக்கு மாநில மக்கள் தொடர்ந்து ஓர் அச்ச நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு நாகலாந்து மாநிலத்திற்குச் சென்ற ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சு பெரும் கண்டனத்திற்குள்ளாகியுள்ளது. அதாவது நாகலாந்து மக்கள் தங்கள் மொழியை தேவநாகரி வடிவில் எழுத வேண்டும் என்று பேசிய பேச்சு பெரும் சர்ச்சைக்குள்ளாகியது. அது எங்கள் கலாச்சாரத்தின் மீதி திணிக்கப் படும் ஒன்று என மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (The Hindu February 22, 2026)

முடிவுரை

ஆட்சி மொழி விவாதத்தில் பங்கேற்ற முகமது இசுமாயில் (காயிதே மில்லத்) அவர்கள்...

“பழமையிலும் மிகவும் பழமையான காலத்திற்கும் செல்ல வேண்டும் என்று சொல்வதைப் பொருத்த வரையில் நாம் கடந்த காலத்திற்குச் செல்ல வேண்டுமானால் அதிலே நியாயம் இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நாம் எதற்காகப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்? ஏனென்றால் நம் நண்பர்களில் சிலர் பழமையான மொழி (சமஸ்கிருதம்) வேண்டும் என்கிறார்கள்– அது இந்திய மொழியாக மட்டுமின்றி; நம் நாட்டின் பழமையான மொழியாகவும் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்; அது மத்திய ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும் என வற்புறுத்துகிறார்கள். அப்படித்தான் நடக்க வேண்டுமென்றால் நான் துணிவுடன் சொல்வேன் திராவிட மொழிகள்தான் இந்த நாட்டில் பேசப்பட்ட மொழிகளாகும். **தமிழ் மொழியில் உயர்ந்த வளமான இலக்கியங்கள், தொன்மை, வரலாறு புதைந்து கிடக்கிறது. அது தான் மிகவும் தொன்மையான மொழி; இன்னும் சொல்லப் போனால் அது தான் என் தாய்மொழி. அந்த மொழிக்காக நான் பெருமைப்படுகிறேன். கடந்த காலத்திற்குச் சென்றால் இந்த மொழி தான் ஆட்சி மொழியாக ஆக முடியும்**. ஆனால் அதைப் பேசக்கூடியவர்கள் அந்த உரிமையை முன்வைக்கவில்லை. ஒரு பரந்த பார்வையில் நாம் வட இந்திய மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறோம்.

கடந்த காலம் என்ற சங்கிலியால் பிணைக்கப் பட்டால் அந்த சங்கிலி அசைவற்றதாகவும், விறைப்பானதாகவும் இருக்கக் கூடாது. அது வளையும் தன்மையுடன் இருக்க வேண்டும். நாம் வேர்களாக மட்டும் இருக்கக் கூடாது; நாம் கிளைகளாகவும், எப்போதும் புதுமையோடிருக்கும் இலைகளாகவும், பூக்களாகவும், பழங்களாகவும் இருக்க வேண்டும். அது தான் வளர்ச்சி. எனவே நாம் தற்கால நிலைமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.''

ஆங்கிலேயர்களிடமிருந்து அரசியல் விடுதலை பெற்றாலும் இந்தியக் குடிமக்கள் பரந்து பட்ட அளவில் விடுதலைக் காற்றை இன்னும் சுவாசிக்கவில்லை என்பதை இன்றைய அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிலை உணர்த்துகின்றது. ஒரு நாட்டின் ஒற்றுமை, அனைத்து மக்களையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, சம ஈவு, சம உரிமை என்பவைகள் இந்தி ஆதிக்கவாதிகளுக்கு முதன்மை அல்ல. மாறாக இந்தி பேசாத மக்கள் மீது ஆரியக் கலாச்சாரத்தை, மொழியை, பண்பாட்டுக் கூறுகளைத் திணித்து அவர்களை நிரந்த அடிமைகளாக வைத்திருப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. வரலாற்றைப் படிக்க மறுக்கிறார்கள்; படிப்பினைகளை ஏற்க மறுக்கிறார்கள்.

வரலாறு நமக்குச் சில படிப்பினைகளை விட்டுச் சென்றிருக்கிறது. தடைகள் உடையும்; தளங்கள் மாறும்.

♦♦♦

★ கட்டுரையாளர்
எழுத்தாளர் மற்றும்
மும்பையைச் சார்ந்த தமிழியச் செயற்பாட்டாளர்

அகப்புற முரண்களில் சிக்கித் தவிக்கும் பிரமிளின் இலக்கியக் கோட்பாடுகள்

ஜமாலன்

“தமிழில் பலர், புதுக்கவிதை என்ற வெளியீட்டு சாதனத்தை, உயிரற்றதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் எழுதியவை, தங்களால் பிதற்றப்பட்டவை எல்லாமே கவிதைகள் என்று சொல்லி வருகிறார்கள். உள்ளர்த்தம், படிமம் ஏதும் கவிதைக்கு வேண்டாம்; உயிர், பொருள், அவசம் எதுவும் வேண்டாம்; ஏனென்றால் இவர்கள் யாவருக்கும் இவை சுட்டுப் போட்டாலும் வராது. கம்யுனிசம், மார்க்சிசம் என்ற லேபிலை ஒட்டிக்கொண்டு எழுதப்பட்டவை எல்லாம் அந்த வட்டாரத்தில் இலக்கியமாவது போல, எல்லாமே இந்த வட்டாரத்தில் கவிதையாகிவிடுகிறது.” - பிரமிள் (2004, 192)

1

மேற்கொண்ட குறிப்பைப் பிரமிள் எழுதிய ஆண்டு 1989. தற்போதுவரை இக்குறிப்பில் கூறப்படுபவை தமிழ்ப் புதுக்கவிதைகளில் ஒரு மெய்மையாக உள்ளது. அதாவது, கவிதையின் சீரியத்தன்மை குறித்து எந்த அக்கறையுமற்று பிரமிள் கூறுவதைப்போல “வசனத்தை உடைத்துப் போட்டுக்

கவிதையைச் சாதித்துவிட முடியாது'' (2004, 101). இக்குறிப்பில் முற்போக்கு மார்க்சிய இயக்கங்களுடன், கலை கலைக்காகவே எனப் பேசும் தூய இலக்கிய வட்டாரங்களையும் விமர்சிக்கிறார். அதற்குச் சான்றாக கலை உன்னதத்தை முன்வைக்கும் டி.எஸ். எலியட்டின் ஒரு கவிதை வரியையும், முற்போக்குக் கவிஞரான பாப்லோ நெருடாவின் ஒரு கவிதை வரியையும் சுட்டிக் காண்பித்து இரண்டிலும் உள்ள கவித்துவத்தை எடுத்துக்காட்டுகிறார் (2004, 110). அதாவது **அடிப்படையில் 'தர்சனம்' என்கிற அகக் காட்சியாதல் என்பதே கவிதையின் அடிப்படை என்பதாக இவரது கவிதைக் கோட்பாடு அமைந்துள்ளது.**

கவிதை குறித்துப் பல்வேறு 'வியாக்கியானங்களை' அதாவது விவரணைகளைத் தனது கட்டுரைகளில் தருகிறார். அவற்றை தொகுத்துப் பார்க்கும்போது சாரமாக அமைந்திருப்பது கவிதை என்பது ஓர் அகத்தெழுச்சி, உள்விழிப்பு, நிரந்தர உண்மை அதாவது சத்தியத்தை பேசுவது, படிமங்களை எழுதுவது, அகமுரண்களை வெளிப்படுத்துவது, உண்மைக்கு நேர்மையாக இருப்பது, நுண்ணுணர்வை வெளிப்படுத்துவது, தீண்டுதல் தன்மைக் கொண்டது, காலாதீதமானது, அதீதத்துவமானது இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். பொதுவாக சிருஷ்டி என்கிற படைப்பு நிலைக்கும், உள்ளுறையான இறைத்தன்மைக்கும் ஆன ஓர் உறவுநிலையாகக் கவிதையை முன்வைக்கிறார். இவரது கட்டுரைகளை வாசிக்கும்போது கவிதை ஓர் அதி உயர்ந்த கலை வடிவமாகவும், அதை எழுதுபவனே உயர்ந்த ஞானமடைந்த மனிதனாகவும் கருதும்படி ஆகிவிடுகிறது. **ஒருவகையில் கவிதையை ஒரு மதமாக படிமப்படுத்தினால் அதுதான் பிரமிளின் கவிதைக் கோட்பாடு.** இப்பொழுது இதனைக் கட்சிப் பிரிந்து விவாதிப்பது, குழுவாகி ஆதரிப்பது, எதிர்ப்பது என்கிற நிலை மதம் குறித்த ஒருவரது நிலைபாட்டோடு உறவுடையதாகிறது. **கவிதை மத உணர்வுடன் இறுக்கமாக பிணைந்து ஓர் ஆன்மீகப் பயணமாக அமைவதும், 'இக்கணம்' என்கிற உண்மையை உணர்வதுமே இவரது கவிதையின் விளைவு. இதை ஏற்பதும், மறுப்பதும் அவரவர் அரசியல் நிலைபாடு சார்ந்தது.**

காரணம், தனது கவிதைகள் குறித்துத் தன்னையே முதல் விமர்சகனாக, உரையாளனாகக் கருதும் பிரமிளின்

எழுத்துக்கள், பிறரின் கருத்துக்களுக்கான சுதந்திர வெளியை மறுத்து, எல்லோரும் பிரமிளாக மாறி அவரது கவிதையை வாசித்து விமர்சிக்க வேண்டும் என்ற மனநிலையை அல்லது அவரது பாணியில் கூறினால் மனோதருமத்தை அடைய வேண்டும் என்று கருதுகிறார். **மனோதருமம் என்பதும் இவரது கவிதைக் கோட்பாட்டின் ஒரு முக்கியமானக் கூறு. மற்றமைக்கான இடமே அவரது கருத்துலகில் இல்லை.** அனைத்தையும் போலிகள் என்று தாரதம்மியமற்ற முறையில் அடித்து நொறுக்குகிறார். சான்றாக கோவை ஞானியோ, கோ. இராஜாராமோ அவரது ‘கண்ணாடியுள்ளிருந்து’ என்ற காவியக் கவிதையை விமர்சித்தால் அதற்கான பதிலாக அவரது பார்வையைத்தான் அவர்கள் சொல்ல வேண்டும் என்றும், தான் இந்தவகையான பார்வையில்தான் எழுதினேன். அதைக் கண்டுணரும் திராணியற்றவர்கள் என்றும் அவர் கருத்தை முன்வைக்கிறார். பிரேதா- பிரேதன் எழுதிய கிரணம் கவிதைகள் தன் ‘கண்ணாடியுள்ளிருந்து’ ‘மண்டபம்’ போன்ற வேறுசில கவிதைகளில் அவர் எடுத்தாண்ட “பின்னலான செறிவுமிகுந்தப் படிமவியல் பிரயோகங்களை” காமாசோமாவாக எடுத்தாண்டு எழுதியதான குற்றச்சாட்டை முன்வைக்கிறார் (2004, 200). ஆனால் ‘கண்ணாடியுள்ளிருந்து’ கவிதைகளின் சிக்கலானப் படிமப் பிரயோகம் எப்படி பிரேதா கவிதைகளில் வந்துள்ளது என்பது குறித்த விரிவான விளக்கம் இல்லை. ஓரிரு வரிகளைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. இரண்டு பிரதிகளையும் ஒப்புநோக்கி ஆராய்ந்தால் மட்டுமே பிரமிளின் குற்றச்சாட்டின் பின்னணியைப் புரிந்துகொள்ள முடியும்.

மொழிக்கு பல்வேறு - அவர் பயன்படுத்தும் சமஸ்கிருத பாஷாவில் கூறினால் - வியாகரணங்கள், பாஷியங்கள் இருக்கும் என்பதையே மறுக்கிறார். அவர் எந்த சத்தியத்தை, உள்ளுணர்ச்சியை, மெய்மையை, மெய்யியலை.. இன்னபிறவற்றை முன்வைத்து எழுதினாரோ அதையே ஒரு வாசகனும் விமர்சகனும் கண்டுகொள்ள வேண்டும் என்கிறார். அவரைப் பொறுத்தவரை கவிதை கைளால் எழுதி, கண்களால் வாசிக்கப்படுவதில்லை. இதயத்தால் எழுதி இதயத்தால் வாசிக்கப்படுவது. அதாவது ‘ஹிருதயப்பூர்வமானது’ என்கிறார். “பிரக்ஞை எப்பவும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் சக்தி

வாய்ந்த உள்ளத்துக்குத்தான் புதுக்கவிதை உள்ளோட்டம் தெரியும். ஒரு சொல்லென்றால் அதன் அகராதி அர்த்தத்துக்கு மேல் ஓடாத மரத்த உள்ளங்களின் பிரக்ஞை இப்படிச் செயல்படப் போவதில்லை'' (2004, 76) எனும் பிரமிள் பல்வேறு பொருள் (அர்த்த) சாத்தியங்கள் இருப்பதால்தான் ஒரு கவிதைக்குப் பல்வேறு கருத்துக்கள் திறனாய்வாளர்களால், வாசகர்களால் முன்வைக்கப்படுகிறது என்பதை மறுக்கிறார். பொருளைக் கொண்டு கவிதை பிறப்பதில்லை என்றும் அது ஒரு எழுச்சியின் விளைவு என்றும், கவிஞன் பொருளைக் கொண்டு கவிதை படைக்கமுடியாது அது கட்டமைக்கப்பட்ட கவிதை. அது கவிதையாகாது என்கிறார். அதாவது கவிதை என்பது உள்மனப் பிரக்ஞையின் அவசத்தால், எழுச்சியால் வெளிப்படும் ஒரு 'மாந்த்ரீகம்' போன்ற செயல்பாடு. ஒருவகையில் இது உண்மைதான் என்றாலும், அதற்குக் காரணம் மொழியின் சமூவயப்பட்டத் தன்மையே.

ஒரு கவிஞன் சமூகம் உருவாக்கிய மொழிப்புலத்தில்தான் புழங்குகிறான். அதனால் அவனையறியாமல் மொழியானது அவனுக்குள் கட்டமைந்து விடுகிறது. அதாவது அவனது புலனுணர்வால் உள்வாங்கப்பட்டு அவனது மொழிப்பயிற்சியால் அல்லது அனுபவத்தினால் உருவாகும் நுண்ணுணர்வால் படைப்பாக வெளிப்படுகிறது. அதனால்தான் ஒவ்வொரு காலத்திற்குமான இலக்கிய வடிவங்களும் வெளிபாட்டு வடிவங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. அப்படி வெளிப்படும் இலக்கியங்களை அந்தந்தக் காலச் சமூகமும் தனக்கான பொருளில் மாற்றிப் புரிந்துகொள்ளுதலும் நடக்கிறது. அவ்வகையில் உரை அல்லது திறனாய்வு (விமர்சனம்) என்பது ஓர் இலக்கியத்தைச் சமூகவயப்படுத்தும் ஒரு நிகழ்வுப் போக்காகும். இலக்கியப் படைப்பை வாசகத்தளத்தில் உள்வாங்குவதற்கான திறப்பாக அமைகிறது. ஆனால் படைப்பாளியின் மனவோட்டத்தை ஒரு படைப்பு வெளிப்படுத்துவதாக சொல்வது, இவரது இந்த அகத்தெழுச்சிக் கோட்பாட்டிற்கே எதிரானது. இவரது கவிதைகள் பொருள் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்றால், இவரால் எப்படிப் பொருள் கூற முடிகிறது? இவரது பல கவிதை வரிகள் தவறாக புரிந்துகொள்ளப்படுகிறது என்றும் இவர் இன்ன பொருளில் எழுதினேன் என்பதையும் கூறுகிறார். இது இவரது தன்னெழுச்சி தத்துவார்த்தக் கவிதைக் கோட்பாட்டிற்கே

எதிரானதாக இல்லையா? இவர் இவரது கவிதைகளை தன்னெழுச்சியாக எழுதி இருந்தாலும் இவரே அதற்கு பொருள் தரும்போது ஒரு வாசகராகிறார் என்பதே. அப்படித்தான் ஒரு திறனாய்வாளன் இவரது கவிதைகளை அவனது பிரக்ஞா ஓட்டப்படி, மனவெழுச்சிப்படி பொருள் கூறுவான். அதை மறுக்க இவர் யார்? என்கிற கேள்வி உள்ளது.

இவரது கூற்றுப்படி சங்க இலக்கியத்தை எழுதியவர்கள் மட்டுமே விளக்கம் எழுதித் தந்திருக்க வேண்டும். மற்ற உரைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டும். அவரது கவிதைகள் குறித்து அவர் முன்வைக்கும் கருத்துக்களை ஒரு விமர்சகன் எப்படி முன்வைக்க முடியும்? அல்லது ஒரு படைப்பாளியின் படைப்பை அப்படியே படைப்பாளியாக வாசித்து உள்வாங்குதல் சாத்தியமா? ஆக, **பிரமிளின் படைப்புகள் குறித்த கருத்துக்கள் ஓர் ஒற்றைப் பார்வையை வேண்டுவதாக, அதிலும் அவரது பார்வையை மட்டுமே முன்வைப்பதாக இருக்க வேண்டும் என்பதே அவரது விமர்சனக் கோட்பாடாக உள்ளது. அதாவது ஒரு படைப்பும், அதன் வாசிப்பும் வேறுபடலாம் என்பதை அவர் ஏற்பதாகத் தெரியவில்லை.** பிறர் கவிதைகளைப்பற்றிய அவரது விமர்சனங்கள் மிக முக்கியமானவை. காரணம் ஒரு கவிதையை ஒரு வாசகனாக, விமர்சகனாக அனுபவித்து எப்படி வாசிப்பது? என்பதை நயம்பட எடுத்துரைக்கிறார். அதன் பன்முக அர்த்த பரிமாணங்களை. வடிவ உத்திகளை, மொழிக் கூறுகளை ஆராய்ந்து எழுதுகிறார். அவை புதுக் கவிதைகளை அதன் நவீனத்துவ வெளிப்பாடுகளைப் புரிந்துகொள்ள, திறனாய்வாளர்களுக்கும், கவிதை வாசகர்களுக்கும் புதிய திறனாய்வுப் பார்வையைத் தரக் கூடியவை. அவ்வகையில் இரசனைவாத விமர்சனமுறையைத் தாண்டிய ஒரு அறிவார்ந்த விமர்சனத் தளத்தை முன்வைப்பவராக உள்ளார்.

“ஒவ்வொரு கவி வரிக்கும் அர்த்தம் பிளந்து காட்டுவது வாசக அறிவை அவமதிப்பதாகும்” (2004, 73) என்று எழுதும் பிரமிள் ஒரு திறனாய்வாளன் அல்லது அவருக்கு பிடித்த சொல்லான விமர்சகன் ஒரு படைப்பை தனது பார்வையில், தான் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில், தன் அனுபவம் சார்ந்த உணர்வுத் தளத்தில், தன் கருத்து சார்ந்த அறிவுத்தளத்தில் கருத்துக்களை முன்வைத்தால் அதனைக் கடுமையாக எதிர்

கொள்கிறார். அவர் எதைக் கருதினாரோ அதையே கூற எதற்கு வாசிப்பு? இங்கு தெரிதா முன்வைக்கும் படைப்புதான் நமக்கு முன் பிரசன்னமாகிறது (பிரசன்னம் என்பதை நவீனத் தமிழில் முன்னிருப்பு அல்லது தொல்தமிழில் முன்னம் எனலாம்), படைப்பாளி அல்ல என்பதே நினைவிற்கு வருகிறது. படைப்பாளி என்பவன் படைப்புடன் மறைந்து போகிறான் அல்லது படைப்புக்குள் மறைந்து போகிறான். பூஃக்கொ கூறுவதைப்போல ஆசிரியன் என்பவன் ஒரு வினை (function). வினை முடிந்தவுடன் ஆசிரியனுக்கு அங்கு வேலை இல்லை. பிரமிளின் திறனாய்வுமுறையில் உள்ள மற்றொரு சிக்கல் இந்த ஆசிரியப் பிரக்ஞை என்ற ஒன்றைப் படைப்பில் தேடுவது. உண்மையில் படைப்பில் வாசிப்பவர் அல்லது திறனாய்வாளர் உருவாக்குவதே ஆசிரியப் பிரக்ஞை. இதனைக் கடுமையாக மறுப்பதாக உள்ளது, இவரது படைப்புகள் குறித்து வந்த விமர்சனங்களை இவர் தடாலடியாக மறுப்பது.

ஆனால், அவர் பிறர் கவிதைகளை வாசித்துக் காட்டுவதில் மிகவும் ஆழ்ந்ததொரு புதிய பொருளை உருவாக்கித் தருகிறார். அதேவேளையில், அவரது கவிதைகள் குறித்து பிறிதொரு பொருளைத் தரும் உரிமையை மறுப்பது எப்படி சரியானதாகும்? **வாசகன் கவியாக வேண்டும் என்றும் வாசகனே முதன்மையானவன் என்றும், ஆயிரம் வாசகர்கள்/வாசிப்புகள் சாத்தியம் என்றும் டி.எஸ்.எலியட், ஜெ.கே. ஆகியோரின் குறிப்புகளுடன் (2004, 76) முன்வைக்கும் பிரமிள், தன் கவிதைகளுக்கு மட்டும் அதைத் தடையாக மாற்றுவதைத்தான் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது என்பதுடன் அவரது இலக்கியக் கோட்பாட்டின் அகப் புறசிக்கலாகக் கருத முடிகிறது.** ‘வானமற்ற வெளி’ என்ற கட்டுரையில் பசுவய்யாவின் புகழ்பெற்ற ‘அறைகூவல்’ கவிதையை மிக மிக நுட்பமாக ஆராய்ந்து அதன் தன் அனுபவ சாத்தியங்களை முன்வைத்து எப்படி அது ஒரு புறச்சக்திக்கு எதிரான அகச்சக்தியின் விடுதலையாக அகந்தையை ஒழித்து எழுகிறது என்பதை விளக்குகிறார். அகச்சக்தி புறச்சக்தியை மீறி “அதாவது புறமனிதன் எட்டவியலாத ஒரு வானமற்ற வெளியில்” பறக்கும் எனது கொடி என்பதில் தன் அனுபத்தை மீட்டெடுக்கிறார். அதில் விமர்சனம் குறித்து “ஒரு உயர்ந்த கவிதை, விமர்சனத்தை

மீறிய எதிரொலிகளைக் கிளப்ப முடியும் என்பதையே இக்கட்டுரையின் தூண்டுதலாக நிரூபிக்கக் காத்திருந்தேன்" (2004, 117) என்று எழுதுகிறார். ஆனால் கெடுவாய்ப்பாக இந்த அருமையானதொரு விமர்சனத்தைப் பசுவய்யா என்கிற சுந்தரராமசாமி படுக்கையில் படுத்துக் கொண்டே உங்கள் விமர்சனம் இப்படி மல்லாக்க கிடக்கிறது என்று கையை விரித்து கட்டிலில் மல்லாக்க படுத்துக் காட்டியதாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். இவரது விமர்சனக் கோட்பாட்டின் அடிப்படையில் சுந்தரராமசாமி செய்தது நியாயம்தானே? அதை விமர்சிக்கிறார். இங்கு படைப்பாளியின் படைப்பிற்கும், விமர்சகன் உருவாக்கும் வியாக்கியானத்திற்குமான முரண்பாடு தெட்டத் தெளிவாக வெளிப்படுவது ஒரு சான்று. ஆக இவரது படைப்புக் கோட்பாடும், விமர்சனக் கோட்பாடும் அடிப்படையில் இவருக்குள் முரண்பட்டு நிற்கிறது.

பொதுவாக படைப்பு உயர்ந்தது, விமர்சனம் தாழ்ந்தது என்கிற இருமையில் விமர்சனத்தை கீழாக வைத்து பார்க்கும் பார்வையாக அவரது பார்வை உள்ளது. தனது தொடக்ககாலக் கவிதைகளை அவரே விமர்சிக்கிறார். அதேபோல் விமர்சனம், விமர்சகர்கள் என்பவர்கள் இரண்டாம் பட்சம் என்றும், படைப்பிற்கு பின்பே விமர்சகர்கள் வருகிறார்கள் என்றும் வாதிடுகிறார். ஆனால் எந்த ஒரு படைப்பும் விமர்சனத்தை உட்கிடையாகக் கொண்டே படைக்கப்படுகிறது. தெரிதிய வார்த்தைகளில் சொன்னால் படைப்பிற்கு முன்பே விமர்சனம் பிரசன்னமாகி (முன்னமாக) உள்ளது. அப்படிப் படைத்தால் அது படைப்பாகாது என்று கூறும் பிரமிள் தனது கவிதைகள் குறித்துச் சரியான விமர்சன அணுகுமுறைகள் இல்லை என்பதை உட்கிடையாகக் கொண்டே பல கருத்துக்களை முன்வைப்பராக உள்ளார். இது அவரது மற்றொரு முரண். விமர்சகளை வெறுத்தொதுக்கும் ஒரு படைப்பாளி எனது நூலைப் பற்றி யாரும் எதுவும் பேசவில்லை என்றும் 'தமிழில் விமர்சனம் செத்துவிட்டது' என்றும் கருமாதி நோட்டீஸ் அடிப்பது ஏன்? என்ற கேள்விக்கு பிரமிளிடம் பதில் இல்லை.

ஒரு படைப்பு உருவாக இரண்டு தளங்கள் முக்கியமானவை. ஒன்று பிரதியூடக வெளி (inter-textual space), மற்றது ஒரு வாசகத்தளம் (reader's space). பிரமிள் சென்ற நூற்றாண்டிலோ

சங்க காலத்திலோ பிறந்திருந்தால் அவர் ஒரு வர கவியாகவோ, ஆசு கவியாகவோ அல்லது அவர் விரும்பிய இளங்கோ, கம்பன், ‘மர்மப்பாட்டி’ ஔவையார் போன்ற உயர்ந்த காப்பியக் கவிஞராகவோ, காளமேகம் போலத் தனிப்பாடல் புலவராகவோ வந்திருக்கலாம். இவர்களைப் பற்றியும், இவர்களது பாடல்கள் குறித்தும் மிக அருமையான ஓர் உரையைத் தருகிறார் பிரமிள். அவை தமிழ் மரபறிவின் அசாத்தியத்தை வெளிப்படுத்துவதாக உள்ளன. ‘கண்ணாடியுள்ளிருந்து’, ‘கைப்பிடியளவு கடல்’, ‘மேல்நோக்கிய பயணம்’, ‘தெற்கு வாசல்’ போன்ற காப்பியத்திற்கு நிகரானதாக அவர்கூறும் அவரது கவிதைகளை எழுதியிருக்க முடியுமா? அகச்சக்தி, அகச்சக்தி என்று ஒரு கட்டுரைத் தவறாமல் எழுதும் பிரமிள், அந்த அகச்சக்தி என்பது எப்படி காலத்தால், இடத்தால், வரலாற்றால் அதாவது புற உலகு என்ற புறச்சக்தியால் உருவாக்கப்படுகிறது என்பதைக் குறித்து நீண்ட மௌனம் அல்லது தெளிவற்றவராக உள்ளார். நவீனக்கவிதை அல்லது புதுக்கவிதை என்பது காலத்தால் புற உலக வாசகத் தளத்தால், பிரதியூடக வெளியால் நிர்ணயிக்கப்பட்டது. பிரதியூடக வெளி என்பது ஒரு காலத்தின் பிரதியியல் வடிவங்களைத் தீர்மானிக்கும் மரபுத் தொடர்ச்சியில் வருவது. அதாவது பிரமிள் தனது கவிதைகளைப் பற்றிக் கூறும்போது ந. பிச்சமூர்த்தி (2024, 75), பாரதி, புதுமைப்பித்தன் போன்றவர்களின் கவித்துவ ஆற்றலையும், படிமங்களையும் உள்வாங்கி, தான் வேறுபடும் இடங்களைக் குறிப்பிடுகிறார். (மரபு குறித்து அவரது அறிவு பிரமிப்பு ஊட்டுவதாக உள்ளது. குறிப்பாக ‘காளமேகம் டிரிப்’ (2004, 227) என்ற கட்டுரையில் காளமேகப்புலவரின் தனிப்பாடலுக்கு அவர் தரும் விளக்கம் அற்புதமமான உரையாக உள்ளது.) இதைத்தான் பிரதியூடக வெளி என்கிறோம். ஒரு பிரதி மற்றொரு பிரதியை உருவாக்குகிறது என்பதும், பிரதிகள் ஒன்றோடு ஒன்று ஊடாடி உரையாடக் கூடியவையாக அமைந்துள்ளன என்பதும் இதன் அடிப்படை. ஒரு பிரதியின் வடிவத்தை அது செய்யுளா? கவிதையா? நாவலா? கதையா? புராணமா? காப்பியமா? என்பதைத் தீர்மானிப்பது பிரதி உற்பத்திக்கான வடிவத்தை தருவது அந்தக்காலப் பிரதியூடக வெளியே.

சுத்த சுயம்புவாக ஒரு படைப்பு சாத்தியமில்லை. படைப்பு, காலத்தின், வரலாற்றின் விளைபொருளாக அமைவதே.

அதேபோல் ஒரு பிரதி எதைப்பேச வேண்டும் என்பதையும் அந்தக் கால வெளியே தீர்மானிக்கும். நவீன காலத்தில் பிரமிளுக்கு ஓர் ஆன்மீக உள்ளடக்கத்துடன் பேசுவதற்கான நவீன வாழ்வனுபவங்களைத் தருவது புறச் சூழலே. பிரமிளின் இந்த ஆன்மீகத் தேட்டம் எங்கு உருவாகிறது என்றால் புறச்சூழலின் லௌகீக வாழ்வின் துயரத்திலிருந்தே. அத்தகைய வாழ்வைப் புறக்கணிப்பதும், அதைப் போலியானது என்றும் தொடர்ந்து அவரது கட்டுரைகளில் குறிப்பிடுகிறார். உண்மையில் அத்தகைய வாழ்வின் துயரத்திற்கான ஓர் ஆன்மீக விடுதலையை இவர் நவீனத்துவத்தை ஏற்றவர் என்ற முறையில் மதம்தாண்டி கலாதீதம் என்றும், நித்தியமான சத்தியம் என்றும் முன்வைக்கிறார். **அவரைப் பொறுத்தவரை அரசியல் என்பதற்கான ஒரு வெளியோ இடமோ படைப்பில் இல்லை. அவர் புறச்சக்தி என்பதை எள்ளளவும் மதிப்பதில்லை. அதை ஒரு எதிர்சக்தியாக, படைப்பு மனநிலைக்கு எதிரானதாக முன்வைக்கிறார். அதற்குக் காரணம் அவர் வரித்துக்கொண்ட படைப்புக் கோட்பாடே. அல்லது அக்கோட்பாட்டிற்கான அவரது மெய்யியல் மற்றும் கருத்தியல் பின்புலங்கள். அதை மேற்கத்திய மெய்யியலில் அல்லது மார்க்சிய மெய்யியலில் கூறினால் அகநிலை கருத்துமுதல்வாதம். இந்திய மெய் யியலில் கூறினால் அத்வைத மாயாவாதம்.**

பிரமிள் ஒரு வைதீக எதிர்ப்பாளராகவும், சாதீய மனோபாவங்களுக்கு எதிரானவராகவும், ஆஷாடபூதித்தனத்திற்கு எதிரானவராகவும் தொடர்ந்து பல விமர்சனங்களைத் தமிழ் இலக்கியத்தின் உள்சட்டகத்தில் இயங்கும் மனோபாவங்களை முன்வைத்து வெளிப்படுத்தி உள்ளார். அதுதான் அவரது மொழியில் கூறினால் நவீனத்துவ மனோதர்மத்தின் வெளிப்பாடு. அவரது படைப்புகளில் அதற்கான தடத்தைக் காணலாம். (அது தனியாக எழுதப்பட வேண்டிய ஒன்று.) இது ஒரு முற்போக்கான மனநிலையின் வெளிப்பாடு. ஆனால், அதனை அவர் ஏற்பதில்லை. ஒருவேளை இக்கட்டுரையை அவர் வாசித்தால் மிகக் கடுமையான எதிர்வினையை ஆற்றுவார். அது மார்க்சிய ஜடவாத மெய்யியல் பார்வை என்றும், மனித வியக்தியை அறியாத மானுடத்தின் அகத்தெழுச்சியின் பிரக்ஞையை அறியாத ஒரு மூடவாதம் என்றும்கூட அவர் சொல்லக்கூடும்.

ஆனால் இதனை அவர் தர்க்கரீதியாக எதிர்கொள்வதைவிட, உணர்வார்ந்த தளத்தில் மட்டுமே எதிர்கொள்வார். அதுதான் அவரது இலக்கியக் கோட்பாடும் கூட. உணர்வு என்பது பதப்படாத அறிவு. அறிவு என்பது பதப்படுத்தப்பட்ட உணர்வு என்பதால், அறிவில் உணர்வின் கூறுகளும், உணர்வில் அறிவின் கூறுகளும் இருக்கும். அவரது இலக்கியக் கோட்பாட்டில் படைப்பில் உணர்ச்சியும், விமர்சனத்தில் அறிவும் தர்க்கமும் தனித்தனியாக தன்னிச்சையாக, சுயேச்சையாக இயங்குவதாகக் கூறுவது மற்றொரு முரண்.

2

பிரமிள், கவிதை குறித்து மிகவும் சீரிய முறையிலும், அதன் படைப்பியக்கத்தைக் குறித்தும் தமிழில் கவலைப்பட்டவர்களில் குறிப்பிடத் தகுந்தவர். அவரது கவிதை குறித்துக் கோட்பாட்டுப் பார்வையில் பல முரண்கள் இருந்தாலும், மிகவும் காத்திரமான முறையில் இரசனைவாத விமர்சனத்தை வளர்த்தெடுத்தவர் தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகளில் ஒருவருமான தருமு அரூப் ஜீவராம் பிரமிள். இவர் இப்பெயரின் பலக் கூட்டமைப்பு மற்றும் உச்சரிப்புகளில் தனது புனைப்பெயர்களை மாற்றி மாற்றி எழுதியவர். எண்பதுகளில் நான் இலக்கிய உலகில் நுழைந்த காலங்களில் தினமும் இன்று இவருடைய பெயர் என்ன? என்று அடிக்கடி தோழர் பொதியிடம் கேட்டுக் கொண்டிருப்பேன். பிரமிளின் படைப்புலகையும், விமர்சன உலகையும் இன்றுவரை தமிழ்ச் சூழலில் முன்னின்று வாதாடி காத்து வருபவர்கள் தோழர் பொதியும், லயம் இதழாசிரியரும் பிரமிளைக் கடைசிக் காலங்களில் பாதுகாத்தவருமான கால சுப்ரமணியம். இருவரும் என்றும் பிரமிளுடன் நினைவுகூரத்தக்கவர்கள்.

பிரமிள் ஒருவேளை பெயரற்ற அதாவது அடையாளமற்ற மனநிலையில் இப்படிப் பெயரை மாற்றி மாற்றி வைக்கிறாரா? என்கிற சந்தேகம் இருந்தது. ஆனால், அதன்பின் இருந்தது அவரது எண்கணித நம்பிக்கை. அக்காலத்தில் எண்கணித ஜோதிடம் தமிழ்நாட்டில் பரவலாகக் கவனத்தைப் பெற்று வந்தது. இளமையில் எனக்கும் அந்தப் பைத்தியம் இருந்தது. எண்கள் ஓர் அரூபமான குறியீடுகள். காரணம் 1 என்ற எண்ணிற்கு ஏதேனும் பொருள் உள்ளதா? அதன் பொருள்

நமது மனக்கண்ணால் அறியப்படுவது. பொதுவாகக் கணிதம் என்பதே இருண்மைத்தன்மைக் கொண்டது. அது புற உலகில் ஒரு பொருளின் எண்ணிக்கையைக் குறிப்பது. அறிவியலுக்கான அடிப்படைகளை உருவாக்கியது எண்கள்தான். ‘எண்ணும், எழுத்தும்’ என வள்ளுவர் கூறுவதுகூட அறிவியலையும், மொழியையும்தான். இது ஒருபுறமிருக்க, எண்கணிதம் என்பது வழக்கமான ஜோதிடத்தைப் போல ஒவ்வொரு எண்ணையும் ஒரு கிரகத்துடன் இணைத்து அதிலிருந்து பலனைக் கூறும் முறை. இரண்டிற்கும் உள்ள வேறுபாடு பிறந்த நேரத்தை (லக்கனம், ஜனனம்) ஜோதிடமும், பிறந்த தேதியை எண்கணிதமும் அடிப்படையாகக் கொள்கிறது என்பதே.

எண்கணிதத்தில் பிறந்த எண், பிறந்த தேதியின் கூட்டு எண், பெயரின் கூட்டு எண் மூன்றும், மூன்றுவிதப் பலனைத் தரக்கூடியது. பிறந்த எண் ஒருவரது குணத்தையும், தேதியின் கூட்டு எண் ஒருவரது எதிர்காலத்தையும், பெயரின் கூட்டு எண் ஒருவரது வாழ்வின் மாற்றத்தை உருவாக்குவதாகவும் நம்பப்படுகிறது. பிரமிள் பெயரை மாற்றியதன் பின்னணியில் தனது தினவாழ்வின் நெருக்குதலை பலனை மாற்றிக் கொள்ளும் தேட்டம் இருந்திருக்கலாம். அவரது எதிர்பார்ப்புகள் பெயர் மாற்றத்தால் நிறைவேறியதா? என்பதை அவரோடு பழகிய நண்பர்களே சொல்லமுடியும். அடிப்படையில் இது அரூபமான முறையில் காரணகாரியமற்று இணைக்கப்பட்ட ஒன்று. இதில் ஏதேனும் மிஷல் பூ்ஃக்கோ கூறும் மனித அறிவை உருவாக்கும் ஆரம்பநிலை ஒப்புமை விதிகள் இயங்குகிறதா? என்பது மற்றொரு ஆய்விற்கு உரியது. எண்கணிதத்தில் உள்ள ஈடுபாடு மற்றும் ஆழ்ந்த அறிவின் காரணமாகத் தனது பெயரை மட்டுமின்றி, பல இலக்கிய நண்பர்களுக்கும் இவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

“நியுமராலஜி ஆலோசனையை 1979ல் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் பெற்றுக்கொண்ட நாகர்கோவில் ‘பின்திண்ணைக் காட்சி’க்காரர், எனது நண்பரான சுப்ரபூஷங்கர் (இவர், என்னிடம் தமது கவிதைகளைத் தந்து திருத்தங்களை அநுசரித்த சில கவிகளுள் ஒருவர்) இடம் “இந்த மாதிரி (நியுமராலஜி) வேலை செய்வதற்கு இவர் (பிரமிள்) யார்?” என்று கேட்டதை சங்கர் என்னிடம் உளறிவிட்டார். உடனே நேர்க்கடிதங்கள் மூலமும் நண்பர்கள் மூலமும் நியுமராலஜிக்கான பில் ஒன்றை நாகர்கோவிலாருக்கு அனுப்பியிருந்தேன்.

பதிலில்லை.'' (2004, 215) என்று தனது நியுமராலஜி குறித்த அனுபவங்களைக் குறிப்பிடுகிறார் பிரமிள்.

ஈழத்தைச் சேர்ந்த இவர் தமிழ்நாட்டில் தனது இளமைப் பருவத்தில் வந்து தமிழ் நவீனப் படைப்பியக்கத்தில் இயங்கிய காத்திரமான, கனமான எழுத்தாளர். மிகவும் சர்ச்சைக்குரிய எழுத்தாளரும்கூட. சிறுகதைகள், கவிதைகள், நாவல், கட்டுரைகள் என அனைத்து வடிவங்களிலும் தனது எழுத்தியக்கத்தை நிகழ்த்தியவர். தமிழ் மொழியின் நுட்பங்களை நன்கு அறிந்தவர் என்பதால் பல்வேறு மொழிவிளையாட்டுகளை தனது படைப்புகளில் நிகழ்த்தியவர். சான்றாக, 'ராமன் இழந்த சூர்ப்பநகை' என்ற கவிதையில்

'ஆடையின் இரவினுள்
உதயத்தை நாடும்
பருவ இருள்.
நடையோ
ரடியொவ்வோ
ரடியில்
தசையின்
ஜ்வாலை நடுக்கம்.'

இக்கவிதையில் 'நடை ஓரடி ஒவ்வோரடியில்' என்பதை மரபான மொழி நடையில் புணர்ச்சியிலக்கண அடிப்படையில் எழுதும்போது கவிதை வாசிப்பு தடைபட்டு அதைச் சிந்திக்க வைப்பது ஓர் உத்தி. அதேசமயம் சூர்ப்பநகையின் புணர்ச்சி வேட்கையில் தடுமாறும் நடையின் ஒவ்வொரு அடியின் வேகத்தையும் அதாவது அந்தக் கணநேரத்தையும் சுட்டுவதாக அமைந்துள்ளது. (இப்படி விளக்கம் சொல்லும்போது, பலவேளை இது அச்சுப் பிழையால் நிகழ்ந்திருக்கலாம் என்றாலும் இப்படி விளக்க சுவராஸ்யமாக உள்ளது என்பதே) இக்கவிதை காமார்த்தம் சார்ந்த ஒரு புராண நிகழ்வைக் கவிதையாக்குகிறது. சூர்ப்பநகைக்கு இராமன் மேல் விழுந்த தீராக் காதலை அதன் காம வேட்கையின் தீச்சுவாலைகளை, நடுக்கத்தைக் கவிதையாக வெளிப்படுத்தும் கவிதை.

இக்கவிதை குறித்துக் கோவை ஞானி முன்வைத்த 'இராமனைப் பகடி செய்கிறார்' என்ற விமர்சனத்தைக்

கடுமையாக மறுத்து, தான் படைத்த இந்த இராமன் வால்மீகி இராமன் அல்ல. ஒரு மேதைக்கு எதிராகப் படைக்க ஒரு மேதமை வேண்டும் என்றும், தான் படைத்த இராமன் இன்றைய பிரதி இராமன் என்றும் கூறுகிறார் (2004, 164). இதைத்தான் முன்பு சுட்டியதைப்போல தனது கவிதையைத் தன்னைப்போல ஏன் வாசிக்கவில்லை என்ற கேள்வியாக முன்வைப்பது என்றோம். மேலும், கடுமையாக மார்க்சியத்தைக் கிண்டலடித்தும் எழுதுகிறார். “கவிஞனான நான்தான் எனது படைப்புகளின் மிகச்சிறந்த விமர்சகன்” (2004, 161) என்று கூறுவதும், ‘படைப்பின் நிழலுருவம்தான் விமர்சனம். பெரும்பாலும் அபூர்ணமான படைப்பாளிகள் அல்லது படைப்புத்திறன் அற்றவர்கள் தாம் விமர்சனத்தை மேற்கொள்கின்றனர். எழுத்துவில் விமர்சனங்களை எழுதியபோது நான் அபூர்ணமான படைப்பாளியாகவே இருந்திருக்கிறேன்.” (2004, 158) என்று சுயவிமர்சனமாக எழுதுகிறார் 1979ல். அப்படி என்றால் இந்த விமர்சனத்திற்கு மறுப்பு எழுதும் விமர்சகராக தன்னைக் கருதும் பிரமிள் பூர்ணமானவரா? அபூர்ணமானவரா? என்கிற கேள்வி எழுகிறது. விமர்சனம் என்பது படைப்பின் நிழலுருவம் என்றால் படைப்பு நிஜம் என்றும், விமர்சனம் அதன் நிழல் என்றும் தனது வழக்கமான கவித்துவ ஒளி, இருள், நிழல் படிமத்தை இங்கும் கொண்டுவருகிறார். பூர்ணம் என்ற முழுமை ஒன்று இருப்பது என்பது அபௌதீக நம்பிக்கைத் தவிர வேறு ஒன்றுமில்லை. பூர்ணத்துவம் என்ற முழுமை சாத்தியமில்லை என்கிறது நவீன குவாண்டம் எந்திரவியல், சார்பியல் மற்றும் எண்ட்ரபி கோட்பாடு. நவீன அறிவியல் குறித்து ஆழ்ந்த அறிவாற்றல் உள்ளவர் பிரமிள். அதை வெளிப்படுத்தும் பல கட்டுரைகள் மற்றும் கவிதைகள் (சான்றாக $E=MC^2$ கவிதையைச் சொல்லலாம்) எழுதியவர். அவர் இதை அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் நவீன அறிவியலை ஓர் இறையியல் மௌடீகமாக மாற்றும் போக்கில்தான் அவரது வெளிப்பாடுகள் இருந்தது.

பிரமிளின் பல கவிதைகள் இத்தகைய புராண, இதிகாச மற்றும் வேத உபநிடதங்களின் வழிநின்று பேசக்கூடியக் கவிதைகள். இவற்றில் உள்ள அவரது ஆழ்ந்த அறிவைக் கவிதைகளின் மொழிப்படிமங்களாக மாற்றுகிறார். ‘கோத்ரம்’ என்ற கவிதை (2007, 58) ருக்வேதப் பாடல் வடிவிலேயே எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால், அது நவீனப்பார்வையில் பிராமணர்களின்

ரிஷி வம்சாவளியான கோத்ரம் என்பதை விமர்சிப்பதாக அமைந்த ஒன்று. காமார்த்தம் மற்றும் ஞானார்த்தம் என்ற இரண்டு எல்லைகளுக்குள் தான் அவரது பெரும்பாலான கவிதைகள் எழுதப்பட்டுள்ளது. அவ்வகையில், பிரமிள் இன்றைய இளம் படைப்பாளிகளுக்கு, தமிழ்ச் சிற்றிதழ் இயக்கத்தின் முக்கியமான கவனப்படுத்த வேண்டிய ஓர் எழுத்தாளர். இன்றைய புதிய தலைமுறை இலக்கியவாதிகள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு எழுத்தியக்கம் பிரமிளுடையது. கவிதைபற்றிய அவரது கவிதைகளும், கட்டுரைகளும் கவிதையை, இலக்கியப் படைப்புணர்வை ஒரு மெய்ஞானமாக மாற்ற முயல்பவை. அன்றாட அனுபவங்களை மெய்ஞானத்தின் வழியாக அறிய முற்படுபவை. வாழ்வின் புரிபடாதவற்றையும், அவை உருவாக்கும் தெளிவின்மையுமே அவரது கவிதைகளின் அரூபமான தெளிவற்ற வெளிப்பாட்டுக்கு காரணம். ஆனால், வலிந்து அது தனது அகசக்தியின் வெளிப்பாடாக அவர் கொள்வது அவரது படைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த வாதமே தவிர வேறொன்றுமில்லை.

தெருவில் விழுந்து
நிலவின் ஒளியைத் துடைத்தது
மின்சார வெளிச்சம்!

இப்படியான மெய்ஞானமும் இல்லாத விஞ்ஞானமும் இல்லாத அஞ்ஞானக் கவிதை வரிகளும் ஆங்காங்கே தலைகாட்டுகிறது அவரது பிரக்ஞையின் ஓரத்தில். ‘பிரதி’ என்ற தலைப்பைக் கொண்ட இக்கவிதை இன்றைய இராமனின் பிரதியை, சீதாவைத் தொலைத்துவிட்டுத் தாசியைத் தேடும் மனித வேட்கையினை விமர்சிப்பதாக அமைந்துள்ளது. கவிதைகளில் ஒரு கட்டுக்கோப்பும் பொருண்மையும் கொண்டு எழுதப்பட்டவை இக்கவிதைகள். இதில் பிரக்ஞையின் சாயல்கள் என்ன? என்ற கேள்வி உள்ளது. அகலிகை, கோதமர், இந்திரன், இராமன் என்கிற புராணப் பாத்திரங்கள் பல கவிதைகளில் வலுவான படிமங்களின் வழியாக மறு விசாரணை செய்யப்படுகிறார்கள். காரணம் அகலிகை கதை பல எழுத்தாளர்களால் மாற்றி மாற்றி எழுதப்பட்ட ஒரு பிரதி. இதைதான் பிரதியூடக வெளியின் விளைவு என்கிறேன். ஏற்கனவே பிரதியாக்கப்பட்ட தொன்மங்கள், புராணங்கள், கதைகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் ஆகியவை

புற மெய்மையாக உள்ளன. அவை அகத்தில் புரண்டு வெளிப்படுகிறதே தவிர, இந்தப் புறக்கதையாடல்கள் இல்லாமல் எப்படி கவிதை ஊடாட்டம் நிகழும் என்பதே கேள்வி.

'முட்டித் ததும்பியென்ன?
மாலையில் பகல் வடிகிறது
ஒளி ஒதுங்கி இரவாகிறது'

- என்று தொடங்கும் 'அடிமனம்' என்ற கவிதை ஆழ்மனதின் புணர்ச்சி வேட்கையைப் பாடு பொருளாகக் கொள்கிறது. முட்டித் ததும்பி, வடிகிறது போன்ற சொற்கள் தரும் படிமங்கள் காமத்தின் வாசனையை நுகரச் செய்பவை. இப்படியாக இக் கவிதைகளை காமார்த்தம் மற்றும் ஞானார்த்தம் என்பதற்கு இடையில் ஊசலாடும் ஒன்றாக வாசித்தறியலாம். இவரது கவிதைகள் ஆழ்ந்த வாசிப்பிற்கு உரியவை. அவற்றை சிதைவாக்கம் செய்வதன் மூலம் உள்ளார்ந்த பொருளை வெளிக்கொண்டுவரலாம். அது மற்றொரு பணியாகும்.

3

பிரமிள் பல்துறைச்சார்ந்த அறிவாற்றல் மிக்கவர். ராம்சுரத் குமார், ஜே.கே., இந்திய மெய்யியல், மேற்கத்திய மெய் யியல், உலக இலக்கியம், தமிழ் மரபிலக்கியங்கள் தொடங்கி குவாண்டம் எந்திரவியல் வரை ஆழமான தனது பார்வையில் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டிருப்பவர். எது குறித்தும் ஒரு தனியான பார்வைக் கொண்டவர் என்றாலும், அவரது அடிப்படைத் தேடல் ஆன்மீகம். அவரது ஆன்மீகத் தேட்டமே அவரது படைப்புகளாகவும், தீவிரமான மற்றும் கூர்மையான விமர்சனமாகவும் வெளிப்பட்டது. இருபது வயது முதல் கவிதை எழுதத் தொடங்கியவர். தொடர்ந்து தனது ஆன்மீகத் தேடலை நிகழ்த்திக் கொண்டே இருந்தவர். தீவிரமான படிமச் சிந்தனையாளராக இருப்பதை அவரது படைப்புகளை வாசித்தவர்கள் அறியலாம். அதன் பொருட்டே அவரது படைப்புகள் வாசிப்பிற்குக் கடினமான, புரியாத்தன்மை கொண்டதாக உள்ளது எனலாம். தனது கூர்மையான விமர்சனத்தை மொழி லாவகத்துடன் கையாள்பவர். அதுவே ஒரு படைப்பாக வெளிப்படும் தன்மை கொண்டது. அவரது கட்டுரைகள் வாசிக்கச் சுவராஸ்யமானவை.

பகடியும், தீர்க்கமான விமர்சனமும், சமரசமற்ற தன்மையும் அவரது வாழ்நாளில் பல எதிர்ப்புகளை அவருக்கு ஏற்படுத்தியது. ஓர் இலக்கியவாதியாகத் தமிழ்ச் சமூகம் தரும் பரிசான ஏழ்மை வாழ்வையும், அதன் கசப்பையம் அனுபவித்தவர். தமிழ் நவீனத்துவப் படைப்பியக்கத்தில் பாரதி, புதுமைப்பித்தன் போன்றவர்களுடன் வரிசைப்படுத்திப் பேசத் தகுந்த இலக்கிய ஆளுமை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அடிப்படையில் மார்க்சியம் மட்டுமின்றி அனைத்து 'ஸ்தாபன' அதாவது நிறுவனங்களுக்கும் எதிரானவர். நிறுவனங்கள் சமரசத்தையும், கண்மூடித்தனமான நம்பிக்கைப் பற்றையும் உருவாக்கும் என்பதில் தீவிரமான கருத்தைக் கொண்டிருந்தார். அதனால் அடிப்படையில் ஒரு நிறுவன எதிர்ப்பாளராக இருந்தார். தான் நம்பும் நம்பிக்கைகள் தவிர்த்து பிறவற்றின்மீது கூர்மையான விமர்சனங்களை, எதிர்ப்பைப் பதிவு செய்பவராக இருந்தார். இலக்கியம் என்பதை ஓர் ஆன்மீகம் சார்ந்த காலாதீதம் மிக்க மதமாக அவரது நம்பிக்கை வெளிப்பட்டிருப்பதை அவரது படைப்புகள் மற்றும் கட்டுரைகளில் வாசிக்க முடிகிறது. இலக்கியத்தை ஒரு மதமாக பாவித்தார் எனபது மிகையான கூற்றாகாது. தமிழ்ச் சிறுபத்திரிகை மரபில் இலக்கியக் கலகக்காரராக இறுதிவரை இருந்தவர். இது அவரை நிராகரிக்கும் இலக்கியவாதிகள்கூட எதிர்மறையாகக் கற்றுக் கொள்ளவேண்டிய பாடம். அவரது வாசிப்புப் பரப்பு அகண்டமானது மட்டுமல்ல மிகவும் ஆழமானதும்கூட.

உலக இலக்கியத்தில் புதுக்கவிதைக்கான அடிப்படைகளை உருவாக்கி, நவீனத்துவத்தின் புதிய பாதையைக் கவிதைகளில் உருவாக்கிய எஸ்ரா பவுண்டு குறித்து இவர் முன்வைக்கும் வாதங்கள் முக்கியமானது. அவர் ஜெர்மானிய பாசிசத்தை ஆதரித்தவர் என்ற குற்றச்சாட்டிற்கு இவர் கூறும் சமாதானங்கள் கவனத்தில் கொள்ள வேண்டி உள்ளது. "நவீன வியாபார மனோபாவங்கள் கலையுணர்வையும், காலச்சூழலையும் பாதிப்பது கண்டு, இதன் காரணகர்த்தாக்கள் பெருந்தனவாதிகளான யூதர்களே என்ற தவறான முடிவிற்கு வந்தார் பவுண்டு. இம்முடிவு இவரை பாசிச அனுதாபியாக்கிற்று." (2004, 194) என்று கூறும் பிரமிள் மற்றொரு கருத்தையும் இதற்குச் சாதகமாக எடுத்துவைக்கிறார். "ஆனால், அபாரமான கலைஞர்கள் இளமை யிலே மடியும்படி விட்ட பொதுவான நவீனவர்த்தகச் சூழலை

நோக்கி ஒருகலைஞன் கொண்ட ஆவேசத்தின் விளைவு அவரது பாசிசம் என்றுதான் கருதவேண்டியுள்ளது.” (2004, 194) என்று கூறும் பிரமிள் அவர் கலைக்கு எதிரான பாசிஸ்டுகளையும் சாடினார் என்று குறிப்பிடுகிறார். அது குறித்து எந்த ஆதாரத் தகவலும் சுட்டப்படவில்லை. பிரமிள் அவர்களின் இலக்கிய இயக்கத்திற்கும் இது பொருந்தக் கூடியதே. அவரது காலத்தின் இலக்கியம் ஒருபுறம் வணிக நிறுவனமயமாகியது மற்றொரு புறம் பிராமணீய சாதியமாகியது. இலக்கிய பிழைப்பிற்கானதாக மாறுவதற்கான சமரசங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தது. இச்சூழல் அவரது இலக்கியக் கோட்பாட்டை இவற்றிலிருந்து விலக்கி இன்னும் தீவிரப்படுத்தியது.

ஒரு கலைஞனுக்கு காலாதீதத்தை தாண்டிய உண்மையான அக உணர்வின் தீட்சண்யம் உண்டு என்ற தனது இலக்கியக் கோட்பாடாக பல கட்டுரைகளில் வெளிப்படுத்தும் பிரமிள், எஸ்ரா பவுண்டின் அகஉணர்வு ஏன் அந்த உண்மை ஒளியில் புடமாகவில்லை என்பதை ஆராயாமல் விட்டுள்ளார். மேலும், பவுண்டு பதினைந்து வருடங்களாக ஜேம்ஸ் ஜாய்ஸ் அவர்கள் எழுதிய உலகப் புகழ் பெற்ற நாவலான ‘யுலிசஸ்’ எழுத முழுமையாக உதவியதைச் சுட்டிக்காட்டுகிறார். ஜாய்ஸ் ஒரு யூதர். ஒரு சிறந்த கலைஇலக்கியவாதி என்றமுறையில் அவர் யூதர்களின் பாசிச வெறுப்பைக் கொள்ளவில்ல என்கிறார். “கலைஇலக்கியத்தை உதாசீனம் செய்வதன் மூலம் அதை நசிவடையவும் அழியவும் விடுகிற பணவாதிகள்மீதும் போலிகள் மீதும் பவுண்டு செய்த இந்தத் தாக்குதல் கவிதைகளைப் படிக்க வேண்டும்” (2004, 194) என்று கோரிக்கை வைக்கிறார். அடிப்படையில் ஓர் ஆன்மீகவாதியான பிரமிள், தமிழ் கலைஇலக்கியம் திரண்டு செழித்த எழுத்து தொடங்கி பிந்தைய கசடதபற, நடை வரையிலான காலங்களில் நிகழ்ந்த தமிழ் இலக்கியச் சூழலின் விமர்சனமாகவும் இதனைக் காணலாம்.

கலைஇலக்கியம் அல்லாத எதையும் கவனப்படுத்தவோ, அதன் தர்க்க எல்லைகள் சமூகச் சலனங்கள் குறித்தோ எழுதியதைவிடப் பிரமிள் கலை இலக்கிய உண்மைத்துவத்தை, அகவுணர்ச்சியின் நேர்மையை, அதன் வெளிப்பாட்டு, உள்விழிப்பை அதிகமதிகம் எழுதி உள்ளார். அவரது யதார்த்த வாழ்வில் ஏற்பட்ட மன அவசங்கள் பல அவரது கவிதைகளில்

இருண்மைகளாக, இருளாக, ஒளியற்ற தசைச்சுவர்களின் நிழல்களாக வெளிப்பட்டுள்ளது.

‘வயிற்றில் குடியிருந்து
வாழ்ந்து பசிக்கிறது
நிகழ்காலம்
பசியில் அடைத்த
காதிலும் விழுகிறது
‘நாளை புரட்சி
சரித்திரம் நமது கட்சி’
என்றேன்
பசியைக் கூட
ஜீரணிக்க முயற்சிக்கும்
ஏப்பக் குரல்கள்.
ஆனால்,
நாளைகள் ஒவ்வொன்றும்
நாள்தோறும் நேற்றாக
தன்பாட்டில் போகிறது
தான்தோன்றிச் சரித்திரம்.’

1973ல் எழுதப்பட்ட ‘நாளை புரட்சி’ (2007, 75) என்ற தலைப்பிலான கவிதை, புறஉலகின் சிக்கலைப் பேசுகிறது. இப்படியான கவிதைகளும் அவரால் எழுதப்பட்டுள்ளது. இவற்றை அவர் எந்த அகத்தெழுச்சி வகையில் சேர்ப்பார்?

அவரது கவிதைகள் குறித்த அகப்பிம்பம் அல்லது சிந்தனைப் படிமம் (image of thought) என்பது அவரது மொழியில் கூறினால் காலாதீதமான ஒருவகை அதீதத்துவம் குறித்த அகவேட்கை எனலாம். காலத்தைக் கடந்த மற்றும் காலந்தாண்டிய அல்லது காலத்தால் தீண்டப்படாத அதீதமான உணர்வெழுச்சிகளுக்கான வேட்கை குறித்த படிமம். அடிப்படையில் காலத்தை வெல்வதற்க்கான அடிப்படை ஆன்மீக உணர்வாகக் கலை இலக்கிய மனவெழுச்சியைக் கொள்கிறார். அதனால் தொடர்ந்து அவர் மனவெழுச்சியே கவிதையின் வெளிப்பாடு என்பதையும், கட்டப்படும் கவிதைகளில் இருந்து இந்தக் கவித்துவ உத்வேகம் வேறுபட்டது என்கிறார். **கலைஇலக்கியத்தின் வழி ஒருவகை**

ஆன்மீக உச்சநிலையை அடைய முனையும் வேட்கையே அவரது படைப்புகளின் ஊற்றுக் கண் எனலாம். அதனால்தான் மெய்யியல் சார்ந்து நிற்பதாக அவரது படைப்பியக்கம் உள்ளது. கவிதை அகண்ட பிரபஞ்ச விகசிப்பில் தன்னை இணைத்துக் கொள்ளும் ஒரு அகத்தின் பேரெழுச்சியில் உருவாகும் கணம் அதாவது அவரது சொல்லில் சொன்னால் ‘இக்கணம்’. அவரது ஆன்மீக வேட்கையில் ‘இக்கணம்’ என்பது முக்கியமானது. அதனை புத்தம், ஜே.கே., அத்வைதம் உள்ளிட்ட மெய்யியல் சிந்தனைகளில் இருந்து பெறுகிறார்.

கவிதை ஒருவரை ஆன்மீக வயப்படுத்த வேண்டும் என்பதே அவரது படைப்புகளின் தேட்டமாக உள்ளது. புறவாழ்வின் அழுத்தங்கள் அனைத்தும் அவரது அகநெருக்கடிகளில் இந்த சாதாரண வாழ்வை நெட்டித்தள்ளி ஓர் ஆன்மீக கற்பனையான அகவாழ்வை அனுபவமாக்க முயல்கிறது அல்லது புறவாழ்வின் நெருக்கடிகளைக் கடக்க அது ஒரு சக்தியாக உள்ளது. பேரறிவு குறித்த கற்பனையும், அதை அடைவதற்கான பேருணர்வை உருவாக்குவதே கலை இலக்கியத்தின் ஆகப்பெரும் பணி என்கிற சிந்தனைப் படிமமே அவரது படைபியக்கத்தின் மையமாக உள்ளது. அதில் அவர் எந்த சமரமுமின்றி, இல்வாழ்வின் எல்லா நெருக்கடிகளையும் கடந்து புறங்கையால் ஒதுக்கி தனது அகக்கையால் எழுதப்பட்டதாக தனது கவிதை இயக்கம் குறித்து கவிதைகளில் தன் வாக்குமூலமாக வெளிப்படுத்துகிறார். கவிதையைப் பற்றியும் அதன் உருவாக்கம் பற்றியும் சில கவிதைகள் அவரால் எழுதப்பட்டுள்ளது. ‘தொழில் கவிதை’ (2007, 82) என்ற கவிதையில் கவிதையை ஒரு மனைவியாக உருவகித்து எழுதுகிறார். ‘மனக்கண்ணின் மத்தளத்தில் கதிர்களின் கூத்தடிப்பு’ என்று ‘மோகினியாக’ இரவில் கவிதை உருவாக்கும் இனிமையான தருணத்தை எழுதுகிறார். இதுபோன்ற அவரது கவிதை உருவாக்கக் கணங்கள் குறித்துச் சில கவிதைகள் அவரது படைப்புக் கோட்பாட்டிற்கான சாட்சிகளாக அமைந்துள்ளன.

மொழி, அவருக்குப் புற மெய்யை விட அகமெய்யாகவே செயல்பட்டுள்ளது. அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞானம் என்ற முப்பரிமாண அறிதல்முறையைக் அவர் கைக்கொண்டுள்ளதை

அவரது படைப்புகளின் வாசிப்பில் அறியமுடிகிறது. அதாவது யதார்த்தமான இயல் (லௌகீக) வாழ்வில் வாழ்பவர்களை அஞ் ஞானிகளாவும், யதார்த்த உலகை புரிந்து வாழ்பவர்களை விஞ் ஞானிகளாகவும் (விஞ்ஞானம் என்பது சமஸ்கிருத மெய்யியலில் பௌதீக இருப்பைக் குறிக்கும் சொல், தமிழில் அறிவியல் என்ற பொருளில் அது தவறாகப் பயன்படுத்தப்படுகிறது) இவற்றை மீறி உண்மை அறிவை உணர்பவர்களை மெய்ஞானிகளாகவும் பார்க்கிறது இவரது படைப்புலகம். இதிலிருந்து காமார்த்தம், ஞானார்த்தம் என்ற இரண்டு சொல்லாட்சிகளை இவர் உருவாக்குகிறார். காமார்த்தம் என்பது யதார்த்த உலகை அதில் உள்ள உடல் அதன் காமக் குரோதங்கள், அதன் வேட்கை ஈடுபாடுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. இது புணர்ச்சி, உடல் இச்சை, உடலின் தசைகளின் செயல்பாடுகள் என நீள்கிறது. அவரது படைப்பியக்கம் இயங்கும் மொழிக் கூறுகளான சொற்களை யாராவது ஓர் ஆய்வாளர் தொகுத்தால் அவை தமிழின் வீச்சில் குறைவானதொரு அகராதியாகவே இருக்கும். பெரும்பாலான கவிதைகளில் இக்கணம், இருள், அதீதம், காலாதீதம், தசைச்சுவர், புழுதி, நக்ஷட்த்திரம், பரிதி, நிலவு, பாலை, கதிர், ஒளி, பிளவு, இருட்டு... இன்னும்பிற சொற்கள் அதிகம் திரும்ப திரும்ப ஒரு இருண்மையான அல்லது தெளிவற்ற. சிதறலான அனுபவத்தை, உணர்வைத் தரக்கூடியதாக அமைந்துள்ளது.

அவரது கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், குறுநாவல்கள் என்கிற படைப்பியக்கம் குறித்ததொரு ஆய்வு விரிவாக செய்யப்பட வேண்டும். இங்கு அவரது இலக்கியக் கோட்பாட்டை அவரது விமர்சனக் கட்டுரைகளில் இருந்தும், அவரது கவிதைகளில் இருந்தும் வாசித்துத் தொகுக்க முயன்றுள்ளேன். அவரது மொத்த இலக்கிய உலகம் குறித்து விரிவான ஆய்வுகள் செய்யப்படும்போது இன்னும் துலக்கமாக அவரது படிமங்கள், உருவகங்கள் என இலக்கிய உத்திகள் தொடங்கி, அவர் உருவாக்க விரும்பிய விமர்சன மரபு குறித்த விசாரணையையும் நிகழ்த்த முடியும். அவர் கவிதைகளின் முக்கியக் குணமாக இந்த நிகழ்த்துதலை முன்வைக்கிறார். கவிதை நிகழ்த்தப்பட வேண்டும் வாசிப்பவரின் அகத்தில்

என்பதும் அவரது இலக்கியக் கோட்பாட்டின் மற்றொரு அம்சம். “கவி வாழ்வோ பூரண வாழ்வு. அவ்வாழ்வில் கவி எழுதப்படாவிட்டாலும் கவித்துவம் உண்டு.” (2004, 85) என்கிற பிரமிள் தன் வாழ்வை ஒரு கவி வாழ்வாக வாழத் தலைப்பட்டவர் என்பதை அவரது எழுத்துக்களில் வெளிப்படும் கவித்துவ வேட்கையாக உணரமுடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. வானமற்ற வெளி - கவிதை பற்றியக் கட்டுரைகள், 2004, பிரமிள் (தொகுப்பாசிரியர் கால சுப்ரமணியன்), அடையாளம்
2. பிரமிள் கவிதைகள் - பதிப்பு: கால சுப்ரமணியம், 2007, அடையாளம்
3. பிரமிள் படைப்புகள் - பதிப்பாசிரியர்: கால. சுப்ரமணியம், 2003, அடையாளம்

♦♦♦

மார்க்சியப் பெண்ணிலைவாதம்: ஒரு வரலாற்று நோக்கு

யமுனா ராஜேந்திரன்

(1) பெண்ணிலைவாதம் (Feminism) என்பது முதலாளியம், சோசலிசம், தாராளவாதம் போன்ற அரசியல் கருத்தியல் கடந்தது எனவும், அது பால்நிலையை (Gender Based) அடிப்படையாகக் கொண்டது எனவும், ஆணாதிக்கத்தை (Patriarchy) ஒழிப்பதை இலக்காகக் கொண்டது எனவும் கருதப்படுகிறது. மார்க்சியம் வர்க்கப் பகுப்பாய்வை (Class Ananlysis) அடிப்படையாகக் கொண்டு முதலாளியத்தை அழிப்பதை (Anti Capitalist) இலக்காகக் கொண்டது எனவும் கருதப்படுகிறது.

வரலாற்றில் முதலாளியத்திற்கு முன்னும் பின்னும் ஆணாதிக்கம் இருந்தது - இருக்கும் என பெண்ணிலைவாதம் கருதுகிறது. உழைப்பை மதிப்பிடுவதில் (Valuing Labour), சமூக இனப்பெருக்க, மறுஉற்பத்தியில் (Reproduction) ஆண்-பெண் அசமத்துவத்தைக் கடைப்பிடிக்கும் (Inequality) முதலாளியத்தையும் ஆணாதிக்கத்தையும் பிரிக்க முடியாது என வாதிடும் மார்க்சியம், முதலாளித்துவத்தை எதிர்க்கும் போராட்டத்தில் பெண்களின் விடுதலையும் இணைந்தது எனக் கருதுகிறது. பெண்நிலைவாதத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான முரண் என்பது பால்நிலை அடிப்படைக்கும் வர்க்க அடிப்படைக்கும் இடையிலான உறவாகப் பரிமாணம் பெறுகிறது.

இதனின்று ஆணாதிக்க எதிர்ப்பு, வர்க்கப் போராட்டம் என இரண்டையும் இணைக்கும் வகையில் மார்க்சியப் பெண்ணிலைவாதம் (Marxist Feminism) தோன்றுகிறது.

(2) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்குலகிலும் அமெரிக்காவிலும் தோன்றிய **முதல் அலை** (First Wave) பெண்ணிலைவாதம், முதன்மையாக பெண்ணின் வாக்களிக்கும் உரிமையை வென்றதன் மூலம் உருவாகிறது.

இரண்டாவது அலை (Second Wave) பெண்ணிலைவாதம் தோராயமாக 1960களில் இருந்து 1990கள் வரை ஊதிய சமத்துவம், இனப்பெருக்க உரிமைகள், பெண் பாலியல் மற்றும் குடும்ப வன்முறை போன்ற பல சிக்கல்களை உள்ளடக்கியது. பெண்ணிலைவாத முதல் அலையைப் போலவே இந்த இலக்குகளில் பலவும் சட்டம் மற்றும் முக்கியமான நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் அடையப்பட்டன.

மூன்றாவது அலை (Third Wave) பெண்ணிலைவாதம் 1990 களின் நடுப்பகுதியில் இருந்து வெளிப்பட்டது. மூன்றாவது அலையினர் பெண்மையை மறுவரையறை செய்ய முயன்றனர். இரண்டாவது அலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டு இனம், வர்க்கம், பாலினம், பிற தனிப்பட்ட குணாதிசயங்கள் எப்படி ஒன்றுடன் ஒன்று வெட்டுகின்றன என்பதை இது விளக்க முயன்றது.

நான்காவது அலை (Fourth Wave) பெண்ணிலைவாதம் தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் உடலின் மீது ஏற்படுத்திய மாற்றங்களை உள்கொண்டது. இக்கட்டத்தில் பெண்ணியம் என்பது மேலாதிக்க வெள்ளைப் பெண்ணியம், ஆண் மேலாதிக்கம், பால்மாறுதல் போன்றவை குறித்த விமர்சனமாக உருவாகிறது. மாற்றுத்திறனாளிகள், நிறமுள்ளவர்கள், பாலினம் அல்லாதவர்கள், குறைபாடுகள் உள்ளவர்கள் என அனைத்து ஒதுக்கப்பட்ட குழுக்களையும் உள்ளடக்கி ஆதரிக்கவேண்டும் என இந்தப் பெண்ணிலைவாதம் கோருகிறது.

பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகங்கள், விருப்பமில்லாத கர்ப்பம், பெண்களின் உடல் மீதான கட்டுப்பாட்டின்மை போன்ற உண்மைகளால் பெண்ணிலைவாதிகள் இப்போது உந்துதல் பெறுகின்றனர்.

பெண்களின் வறுமை, பாதுகாப்பான சிறந்த ஊதியம் பெறும் வேலைகளில் இருந்து விலக்கப்படுதல், திருமணம் அல்லது தாய்மையின் மூலம் ஏற்படும் பாதிப்புகள், அவர்களின் கல்வியறிவின்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றனர். பெண்களுக்குச் சட்ட உரிமைகள் இல்லாமை, அவர்களின் குழந்தைகளின் மீதான உரிமையை இழப்பது, கட்டாய உழைப்பு, மருத்துவ வளங்களும் நில உரிமைகளும் இல்லாமை, நாடுகளின் மீதான ஆக்கிரமிப்பு, போர், பஞ்சம் போன்ற சூழ்நிலைகளில் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பு போன்றவற்றின் கொடுமைகளை அவர்கள் உணர்கிறார்கள்.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகள் தேசியவாதத்தின் ஆதிக்கத்தினால் பெண்களின் நிலை, சுதந்திரம் என்பது தேசிய முன்னேற்றம் பற்றிய விவாதங்களுடன் பிணைக்கப்பட்டன. இக்காரணங்களால் பெண்ணிலைவாதிகள் தாராளவாதம், சுயம், சமூக ஒப்பந்தம், ஜனநாயகக் குடியுரிமை, அரசு-தேசம் அத்துடன் சோசலிச புரட்சிக் கருத்துக்கள் ஆகியவற்றை விமர்சனத்துக்கு உட்படுத்துகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உயர்கல்வி விரிவடைந்ததால் பெண்ணியம் என்பது உலகின் கல்விப் புலங்களில் ஒரு நிறுவப்பட்ட பார்வையாக மாறியுள்ளது. இருபத்தியோரம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது மீ-டு (Mee-Too) இயக்கமாகவும் பரிமாணம் பெறறது.

(3) ஐரோப்பிய மையப் பெண்ணிலைவாதம் (Euro Centic Feminism) என்பது முதன்மையாக ஐரோப்பிய அமெரிக்கப் பெண்களின் அனுபவங்கள், முன்னோக்குகள், கலாச்சாரச் சூழல்களில் வேரூன்றிய பெண்ணிலைவாதச் சிந்தனை. இவர்தம் சிந்தனை உலகளாவிய தெற்கில் நிகழும் பெண்களின் மாறுபட்ட போராட்டங்களைப் புறக்கணிக்கிறது. இவர்களது சிந்தனை காலனித்துவம், இன-நிறவாதம், ஏகாதிபத்தியம் போன்ற ஒடுக்குமுறைகளை எதிர்க்கத் தவறிவிட்டது எனும் விமர்சனம் இருக்கிறது. மேற்கத்தியக் கட்டமைப்புகளுக்குள் வேலையிட சமத்துவம், இனப்பெருக்க உரிமைகள் போன்ற பிரச்சினைகளை மட்டுமே இவர்களது சிந்தனை வலியுறுத்துகிறது.

இதற்கு மாற்றாகத் தங்களுக்காகப் பேசுவதற்கு அதிகாரம் அளிப்பதை விட, குரலற்ற பெண்களுக்காகப் பேசுவது

என்பதுடன், பின் காலனித்துவ யதார்த்தங்களை மையம் கொண்டதாகப் பின் காலனித்துவப் பெண்ணிலைவாதம் (Post Colonial Feminism) இருக்கிறது. காலனித்துவ நாடுகளில் பெண்களின் அனுபவங்களை மையப்படுத்துவதன் மூலமும், பெண்களின் வாழ்க்கையில் காலனித்துவத்தின் தாக்கத்தை விசாரிப்பதன் மூலமும் மேற்கத்தியப் பெண்ணிலைவாதத்தை பின்காலனியப் பெண்ணிலைவாதம் விமர்சிக்கிறது.

இனம், வர்க்கம், காலனித்துவம் போன்ற பிற காரணிகளுடன் பாலின ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வை இது வலியுறுத்துகிறது. காலனித்துவச் சக்திகளின் ஆதிக்கம் தேசிய ஆணாதிக்கம் ஆகிய இரண்டிலிருந்தும் விடுதலை அடைவதை இச்சிந்தனை முன்னிலைப்படுத்துகிறது. இதனது கோட்பாட்டு விளைவாகத் தோன்றிய **மூன்றாம் உலகப் பெண்ணிலைவாதம் (Third World Feminism)** மேற்கத்திய பெண்ணியத்தை விமர்சிக்கிறது. பெரும்பாலும் வெள்ளை நடுத்தர வர்க்கப் பெண்களின் அனுபவங்களை ஐரோப்பியப் பெண்ணிலைவாதம் உலகளாவியதாக்குகிறது என்கிறார்கள் இவர்கள். காலனித்துவம், ஏகாதிபத்தியம், இனவெறியின் தாக்கத்தை ஐரோப்பியப் பெண்ணியர்கள் புறக்கணிக்கிறார்கள் என மூன்றாம் உலகப் பெண்ணிலைவாதம் வாதிடுகிறது.

பெண்களின் ஒடுக்குமுறை பாலினம், இனம், வர்க்கம், தேசியம் போன்ற ஒன்றோடொன்று இணைக்கப்பட்டப் பல காரணிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை இது வலியுறுத்துகிறது.

விளிம்புநிலைப் பெண்ணிலைவாதம் (Subaltern Feminism) ஒதுக்கப்படும் நிறப் பிரக்ஞை கொண்ட பெண்கள், தொழிலாளி வர்க்கம், காலனித்துவம், சாதியமைப்பு போன்ற விளிம்புநிலைப் பெண்களின் அனுபவங்களை மையப்படுத்துவதன் மூலம் நிலவும் பிரதானப் பெண்ணிலைவாத சிந்தனைக்கு சவால் விடுக்கிறது. காலனித்துவம், இனவாதம், வர்க்கவாதம், சாதிவாதம் போன்ற அதிகார அமைப்புகளில் வேரூன்றிய குறிப்பிட்ட ஒடுக்குமுறைகளை ஆதிக்கம் செலுத்தும் பெண்ணிய விவரிப்புகள் பெரும்பாலும் எவ்வாறு விளிம்புநிலைப் பெண்களை ஒதுக்குகிறது என்பதை இவர்கள் அம்பலப்படுத்துகிறார்கள்.

இவ்வாறு படிநிலைகளில் உலகளாவி வளர்ந்து வந்திருக்கும் பெண்ணிலைவாத உணர்வு இன்று பாலின சமத்துவமின்மை பற்றிய பன்முக விழிப்புணர்வு, ஆழமான தனிப்பட்ட புரிதலுக்காகப் பாரம்பரிய நினைவை விமர்சனத்துடன் அணுகுதல், பாலியல் துன்புறுத்தல் போன்ற பிரச்சினைகளில் குறுக்கிடுதல் போன்றவற்றில் கவனம் செலுத்துகிறது. ஊதிய வித்தியாசம், இனப்பெருக்க உரிமைகள், கருப்பின, சாதி மறுப்புப் பெண்ணிலைவாதம், பாலின-விமர்சன கண்ணோட்டங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளில் ஆணாதிக்க விதிமுறைகளை இந்தப் புதிய பெண் பிரக்ஞை விமர்சனம் செய்கிறது.

இதனின்று முகிழ்க்கும் விமர்சனப் பெண்மொழி என்பது ஓர் இலக்கிய அணுகுமுறை. பெண்ணிலைவாதக் கண்ணோட்டத்தில் இது இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்கிறது. பெண்களின் அனுபவங்களில் இது கவனம் செலுத்துகிறது. ஆணாதிக்க மொழியை இது நிராகரிக்கிறது. பெண் அடையாளத்தை இது தீவிரமாக ஆய்வுக்கு உட்படுத்துகிறது. பெரும்பாலும் விளிம்புநிலைக் குரல்களை பிரதிநிதித்துவப்படுத்தி புதிய வடிவங்கள் கருப்பொருள்களை இந்த நோக்கு பரிந்துரைக்கிறது. இலக்கிய வரலாற்றை மீண்டும் எழுதுவதன் மூலம் புராதனப் பெண்களை எழுத்தாளர்களாக இந்த நோக்குக் கொண்டாடுகிறது. தனித்துவமான பெண் படைப்பாற்றல் வரலாற்று ரீதியில் மொழியை ஆராய்வது ஆகிய இரண்டு பண்புகளையும் உள்ளடக்கியதாக இன்று பெண் இலக்கியமொழி உருவாகி யிருக்கிறது.

பெண்ணிலைவாதத்தில் உடல் அரசியல் (Body Poltics) என்பது உடலின் மீதான பெண்களின் கட்டுப்பாடு அதனது அர்த்தம் குறித்த சமூக அரசியல் கலாச்சார நோக்குகள் மீதான அவர்களது போராட்டங்களைக் குறிக்கிறது. இனம், வர்க்கம், பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் உடல்களை அதிகாரக் கட்டமைப்புகள் எவ்வாறு ஒழுங்குபடுத்துகின்றன என்பதையும், தனிநபர்கள்-குழுக்கள் போன்றவர்கள் தங்கள் சொந்த உடல் அனுபவங்களின் மீது கட்டுப்பாட்டைக் கோர எவ்வாறு பின்வாங்குகின்றனர் என்பதையும் இது பகுப்பாய்வு செய்கிறது.

இனப்பெருக்க உரிமைகள், அழகை வரையறுத்தல், உடல் வெளிப்பாட்டை ஒழுங்குபடுத்துதல் போன்ற பிரச்சினைகளும் இதில் அடங்குகிறது.

பெண்ணிலைவாதமும் மதமும் குறித்த பிரச்சினை ஒரு சிக்கலான பெரும்பாலும் பதட்டமான உறவைக் கொண்டுள்ளன. பெண்ணிலைவாதிகள் ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தை ஆணாதிக்கமாகப் பார்க்கிறார்கள். கோட்பாடுகள் கட்டமைப்புகள் சடங்குகள் மூலம் ஆண் ஆதிக்கம் பெண்களின் கீழ்ப்படிதலை வலுப்படுத்துகிறது என்பதை இவர்கள் சொல்கிறார்கள்.

ஆணாதிக்கச் சமூகங்கள் அசலான மானுட நம்பிக்கைகளைச் சிதைத்துள்ளன. இது மத ஆதிக்கப் பெண்ணிலைவாதத்திற்கு (Religious Feminism) வழிவகுக்கிறது. இது நூல்களை மறுவிளக்கம் செய்து பெண் ஆன்மீகத்தைத் தழுவக் கோருகிறது. இந்த நெருக்கடிகள் பெண்களிடம் பாரம்பரிய நிறுவனங்களுக்குள் வெளியே சமத்துவத்திற்கான புதிய வெளிகளைக் கண்டடையச் செய்கிறது.

மேற்கண்ட பல்வேறு பெண்நிலைவாத நோக்குகளில் இருந்து இன்று **பல்துறை - பன்முக நிலைபாட்டு ஊடறுப்புப் பெண்நிலைவாதம் (Intersectional Feminism),** அடையாள அரசியல் அணுகுமுறையாக எழுந்திருக்கிறது. இது பாரம்பரியமான கல்வி சார்ந்த எல்லைகளை உடைக்கிறது. சமூகவியல் வரலாறு அறிவியல் கலை போன்ற பல்வேறு துறைகளிலிருந்து பாலினம் சமத்துவமின்மை சமூக நீதியை இந்த அணுகுமுறை முழுமையாகப் புரிந்துகொள்கிறது பாலினத்தின் பிரச்சினைகள் வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் பாதிக்கின்றன என இப்பார்வை கருதுகிறது. கூட்டு பன்முகத் தீர்வுகள், ஆய்வின் தேவை என்பதை இது அங்கீகரிக்கிறது.

பல்வேறு ஆய்வு முறைகள் அறிவு அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலமும் இணைந்த செயல்பாட்டை வளர்ப்பதன் மூலமும் சமூக மாற்றத்திற்கான மிகவும் வலுவான கோட்பாடுகள் நடைமுறைகளை உருவாக்குவதன் மூலமும் குறுகிய ஒழுக்க முன்னோக்குகளை இப்பார்வை தகர்க்கிறது.

(4) மார்க்சிய மரபில் பெண்ணுரிமைக்கான முதல் கோட்பாட்டு அடிப்படையை வழங்கும் நூல் **பிரெடரிக் எங்கெல்சின் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்**. தனிச் சொத்துடைமையை வரலாற்றில் பெண்ணுரிமையின் வீழ்ச்சிக்கான காரணமாக அந்நூல் முன்வைத்தது. இதன் தொடர்

தர்க்கமாகத் தனியுடைமைச் சமூகமான முதலாளித்துவம் வீழ்ந்து சோசலிசச் சமூக அமைப்பில் பெண் உரிமை பெற்றவளாக ஆவாள் எனக் கருதப்பட்டது. இதனை மார்க்சிய இயக்கங்களில் செயல்பட்ட பெண் புரட்சியாளர்கள் தமது செயல்பாடுகளாலும், மார்க்சிய இயக்கங்களில் ஆணாதிக்கத்தை நிராகரித்தலின் வழியாலும் மார்க்சியப் பெண்ணிலைவாதித்திற்கான கோட்பாட்டு அடிப்படைகளைத் தந்தனர்.

பாசிசத்தின் தொடக்க காலங்களில் ஒடுக்குமுறையை எதிர்கொண்ட பாட்டாளி வர்க்கத்தின் தெருச்சமர்களில் இருந்து உருவானவர்கள் கிளாரா ஜெட்கினும் ரோஸா லுக்சம்பர்க்கும். அக்டோபர் புரட்சியின் நடைமுறைகளில் இருந்து தோன்றியவர் அலக்சான்ட்ரா கொலாண்டாய். அமெரிக்க வெள்ளைநிற இனவெறிக்கு எதிரான பிளாக் பாந்தர் அமைப்பிலிருந்து கம்யூனிஸ்ட் ஆனவர் ஆஞ்சலா டேவிஸ். ஒடுக்குமுறைக்கு உள்ளான ஆண் புரட்சியாளர்களுடன் சமாந்திரமாக நின்று போரிட்டவர்கள் இவர்கள்.

செவ்வியல் மார்க்சியப் பெண்பேராளிகளான **ரோஸா (1871-1919) லுக்சம்பர்க், கிளாரா ஜெட்கின்** (1867-1933), **அலக்சான்ட்ரா கொலாண்டாய்** (1872-1952) போன்றவர்கள் பால்நிலை அடிப்படையிலான பெண்நிலைவாதம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அன்று நிலவிய பெண்நிலைவாதக் கருத்துக்கள் முதலாளியத்தை எதிர்த்த போராட்டத்தில் பங்கு பெறவில்லை என்பது அதற்கான அவர்களது காரணம்.

போலந்தில் பிறந்து ஜெர்மனியில் தொடக்க காலப் பாசிஸ்டுகளால் கொல்லப்பட்டவர் ரோஸா லுக்சம்பர்க். ரோஸா லுக்சம்பர்க், சே குவேரா, லுமும்பா என மூவருக்கும் உள்ள ஒற்றுமை அவர்கள் கொல்லப்பட்டமுறை. மூவரும் உயிருடன் கைது செய்யப்படுகிறார்கள். தனியிடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். சேவும் லுமும்பாவும் நேரடியாக நெஞ்சில். ரோஸாவுக்கு தலையில் துப்பாக்கியால் அடி. பிற்பாடு தலையில் துப்பாக்கிச் சூடு. சே குவேரா, லுமும்பா உடல்களுக்கு என்ன ஆனது என்று தெரியாமல் இருந்து பல தசாப்தங்களின் பின் அவர்தம் உடல்கள் குறித்த உண்மைகள் வெளியாகின.

சே குவேரா கைகள் வெட்டப்பட்டு, உடல் ரொட்டி சுடும் அடுப்பில் சுடப்பட்டு, மிஞ்சிய உடல் கைவிடப்பட்ட விமான ஓடு பாதையில் அவரது தோழர்களுடன் புதைக்கப்பட்டது. லுமும்பாவின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு அமிலத்தில் கரைக்கப்பட்டது. சே குவேராவின் கைகள் வெட்டப்பட்ட இடம் அவரை அடையாளம் காண உதவியது. லும்பாவின் ஒரேயொரு பல் மட்டுமே அவரது மகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ரோஸாவின் உடலுக்கு என்ன ஆனது என்பது இன்றுவரையிலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ரோஸாவின் பெற்றோர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். மறுமலர்ச்சி யுக மதிப்பீடுகளுடனும் கெதேவின் இலக்கித்துடனும் சேர்ந்து வளர்ந்தவர் ரோஸா. 1873 இல் அவரது குடும்பம் வார்ஸாவுக்குக் குடி பெயர்நதது. அங்குதான் அவரை வாழ்நாள் முழுதும் அலைக்கழித்த இடுப்புவலி அவரைப் பீடித்தது. பள்ளிக்கூட நாட்களிலேயே ரோஸா அரசியலில் பிரவேசித்துவிட்டார். இரசியத் தீவிரவாதிகளினால் பாதிப்புக்குட்பட்ட நரோத்னிக் தழுவிய போலந்து புரொலிடரியட்டில் செயல்பட்டார் ரோஸா. அக்கட்சி போலீசின் வேட்டைக்கு உட்பட்டபோது, 1887 இல் பள்ளி இறுதி முடித்திருந்த ரோஸா சூரிச்சுக்குப் பறந்தார். அவ்வாண்டில்தான் அவர் மார்க்ஸ் எங்கெல்ஸைப் படிக்கத் தொடங்கினார்.

அவர் இனம் மொழி போன்ற அடையாளங்களை ஒப்பாதது போலவே, பெண் எனும் தனி அடையாளத்தையும் ஒப்புக்

கொண்டவரல்ல. இந்த அடையாள மையங்கள் அனைத்தும் முதலாளித்துவத் தன்மை கொண்டதென அவர் நினைத்தார். தனித்த பெண்களின் இயக்கம் என்பதில் அவர் அவ்வளவு ஈடுபாடு காட்டியவராக இல்லை. வர்க்க அடையாளம் கொண்ட ஆண் பெண் உறவு என்பதாக அவரது வாழ்க்கைப் பார்வை அமைந்தது.

ரோஸா லுக்சம்பர்க், பெண்கள் உரிமைப் பிரச்சினை சார்ந்து கோட்பாட்டுக் கட்டுரைகள் எதனையும் எழுதியவரில்லை. சக போராளியான அகஸ்டோ பேபல் பெண்களுக்கென தனி இயக்கம் தொடங்கி அதில் கவனம் செலுத்துமாறு கோரியபோது அதனை மறுத்தவர் ரோஸா லுக்சம்பர்க். இயக்கத்தில் ஆண்களின் ஆதிக்கத்திற்கானதாக பேபலின் கருத்தை ரோஸா கருதினார். ரோஸாவின் சக தோழரான கிளாரா ஜெட்கின் பெண்கள் அமைப்பைக் கட்டினார். பெண்கள் பிரச்சினை குறித்துத்தான் ஆசிரியராக இருந்து நடத்திய இதழுக்குக் கட்டுரை தருமாறு ரோஸா கிளராவிடம் கோரினார்.

ஆணாதிக்கத்தைத் தனது சொந்த வாழ்வில் அவர் அனுபவம் கொண்டார். தான் காதல் கொண்டிருந்த சக தோழர் ஜோகித்சேவை மணந்துகொண்டு குழந்தை பெற்றுக்கொள்ள அவர் விரும்பினார். ஜோகித்சே, புரட்சியே உனது குழந்தை எனச் சொல்லி அதனை மறுதலித்தார். அதே ஜோகிச்சே பிறிதொரு இரசியப் பெண்ணிடம் காதலுறவு கொண்டிருப்பதைக் கண்டு அவர் துயருற்றார். தனது சகதோழியான கிளாரா ஜெட்கினின் இளம் வயதினரான புதல்வருடன் காதலுறவு கொண்டிருந்தார். ஜெட்கின் நட்புக்காக அதனை நிறுத்திய ரோஸா, பின்னாளில் பிறிதொரு தோழரான பால் லெவியுடன் காதல் கொண்டிருந்தார். அன்று நிலவிய மரபார்ந்த காதலுறவை மீறியவராக அவர் வாழ்ந்தார்.

(5) அலெக்ஸாண்ட்ரா கொலாண்டாய் ஒரு தாராளவாத பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்தார். 20 வயதில் அவர் இராணுவ அதிகாரியான விளாடிமிர் மிகைலோவிச் கொல்லோன்டாய் என்பவரை மணந்தார். அவருக்கு ஒரு மகன் பிறந்தார். 1898 ஆம் ஆண்டில் அவர் தனது பிரபுத்துவ வர்க்கச் சலுகைப் பின்னணியை நிராகரித்து தனது கணவரையும் மகனையும்

கைவிட்டுப் பெண் தொழிலாளர்களிடையே பிரச்சாரத்தைப் பரப்புவதற்காக இரசிய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார்.

மாஸ்லோவ் என்ற திருமணமான இரசிய பொருளாதார நிபுணருடன் அவருக்கு ஒரு கொந்தளிப்பான உறவு இருந்தது. அவர் பாரிஸ் நகரில் பிறதொரு பெண்போராளியான இனெசா அர்மாண்ட்டையும் லெனினையும் சந்தித்தார். மென்சுவிக் அமைப்பில் இருந்த கொலான்டாய் முதல் உலகப் போரை எதிர்த்த ஒரே சோசலிசக் குழுவாக போல்ஷிவிக்குகள் இருந்தபோது அவர்களுடன் இணைந்தார்.

1917 ஆம் ஆண்டு பிப்ரவரியில் போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் குழுவில் சேர்ந்தார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அரசாங்கத்தில் ஒரே பெண் பொதுநல ஆணையராகப் பதவியேற்றார். பொதுநல ஆணையராக கொலான்டாய் புரட்சிக்குப் பிறகு சமூகத்தில் பெண்களின் பங்கை மறுவடிவமைப்பதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்.

அவரது திடடங்களால் திருமணமான பெண்கள் அதிக சுதந்திரம் பெற்றனர். விவாகரத்து எளிதாக்கப்பட்டது. மணவாழ்வில பிரிந்த, மணவாழ்வில் ஈடுபடாத ஒற்றைப் பெண்களுக்கு (Single Mothers) பிறந்த குழந்தைகள் திருமணத்தில் பிறந்த குழந்தைகளைப் போலவே அதே உரிமைகளைப் பெற்றனர். கருக்கலைப்பு, சட்டப்பூர்வமாக்கப்பட்டது.

பாலியல் உறவுகள் ஒரு அரசியல் பிரச்சினை (Sexual relationship is Political) என்று கருதிய அவர், ஒரு சோசலிச சமூகத்தில் தனிநபர்கள் தாங்கள் விரும்பும் எவருடனும் பாலியல் உறவு கொள்ள சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று நம்பினார். இது குடும்பத்தைப் பலவீனப்படுத்தும் எனக் கருதிய லெனின் அதை ஏற்கவில்லை. கொலான்டாய் பாலுறவுச் சுதந்திரம் தொடர்பாகத் தான் கருதியவற்றைத் தனது சொந்த வாழ்வில் நடைமுறைப்படுத்தினார். விவசாய வம்சாவளியைச் சேர்ந்த இளம் மாலுமியான பாவெல் டைபென்கோவை அவர் மணந்தார். சுதந்திரக் காதல் தொடர்பான தனது நாவல்களை எழுதினார்.

கம்யூனிசம் கருத்தியலாகப் பெண்கள் பணியிடத்தில் (Work Place) பங்கேற்பதன் மூலம் அவர்களது சமூக விடுதலையை ஆதரிக்கிறது. போல்ஷிவிக்குகளின் ஆரம்பகாலச் சட்டம் சம வேலைக்குச் சம ஊதியம் என்ற கொள்கையை நிறுவியது. அவர்கள் வீட்டு வேலைச் சுமைகளிலிருந்தும் தாய்மையிலிருந்தும் பெண்களை விடுவிக்கத் தொடங்கினர். தாய்மார்கள் பணி இடத்திற்குத் திரும்புவதற்கு லெனின் குழந்தை பராமரிப்பு, பொது சமையலறைகளை ஊக்குவித்தார். இந்த நிலைபாடுகளைத் தனது பொறுப்பின் கீழ் உருவாக்கி ஊக்குவித்தார். விவாகரத்துக்கு ஆதரவாக அவர் பிரச்சாரம் செய்தார். பெண்களை வீட்டு வேலைகளிலிருந்து விடுவிக்கப் பொதுச் சமையலறைகள், உணவுக்கூடங்கள், சலவை நிலையங்களை உருவாக்க விரும்பினார்.

வீடு சுத்தம் செய்வது ஆண்களும் பெண்களும் பகிர்ந்து கொள்ளும் கூட்டுப் பொறுப்பாக மாற வேண்டும் என்றார். மழலையர் பள்ளி, குழந்தைகள் காலனி, குழந்தைகள் காப்பகம், அனுபவம் வாய்ந்த செவிலியர்களின் பராமரிப்பில் உள்ள பள்ளி ஆகியவற்றில் குழந்தைகள் வளரும் என அவர் கனவு கண்டார. தாய் எப்போது வேண்டுமானாலும் தனது குழந்தைகளுடன் நேரத்தை செலவிட வேலையை விட்டு வெளியேறச் சுதந்திரமாக இருக்க வேண்டும் என அவர் கருதினார்.

பெண்களின் பிரச்சினைகளைக் கையாளப் பெண்களால் நடத்தப்படும் ஒரு சிறப்புப் பணியகத்தைக் கட்சி அமைக்க வேண்டும் என்றும் கொல்லோண்டாய் விரும்பினார். 1917 கட்சி மாநாட்டில் மற்ற எல்லாப் பெண்களும் இந்தத் திட்டத்தை நிராகரித்தனர். 1918 இல் கொல்லோண்டாயும் இனெஸா அர்மண்ட்டும் மாஸ்கோவில் ஒரு மகளிர் மாநாட்டை நடத்தினர். போரினால் பாதிக்கப்பட்ட இரசியா முழுவதும் பயணம் செய்ய

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் துணிந்து இதில் கலந்து கொண்டனர். பெண்களது பங்களிப்பினால் கம்யூனிச மாற்றங்கள் அவர்களைத் தங்கள் குழந்தைகளிடமிருந்து பிரிக்காது என்று அவர்கள் உறுதியளித்தார்.

பெண்களுக்கான கட்சியின் தனித்துறை இறுதியாக செப்டம்பர் 1919 இல் அமைக்கப்பட்டது. உழைக்கும் பெண்களிடையே கம்யூனிசத்தை ஊக்குவிப்பதற்காகக் கட்சியுடன் அது இணைக்கப்பட்டது. கொலான்டாய் கிராமப்புறங்களில் ஒரு அமைப்பாளராக வேலை செய்தார். 1920 இல் அவரது சக தோழரான அர்மண்ட் காலராவால் இறந்தபோது கொல்லோந்தாய் மகளிர் துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

1921-22 இல் கொலாண்டாய் கம்யூனிச அகிலத்தின் சர்வதேச மகளிர் செயலகத்தின் செயலாளராகவும் இருந்தார். அர்மண்டின் மரணத்திற்குப் பிறகு பெண்களின் நிலையை மேம்படுத்தும் கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்க ஒரு பெண்கள் இயக்கத்தை உருவாக்கிய, போதுமான முக்கியத்துவம் வாய்ந்த ஒரே பெண் கொலாண்டாய் ஆவார். தொழிலாளித் தேனீக்களின் காதல், சுதந்திரக் காதல் போன்ற புனைவுகளை எழுதினார். 1926 இல் எழுதப்பட்ட அவரது சுயசரிதை இரசியாவில் வெளியிடப்படவில்லை.

கொலான்டாய் பாலின மையப் பெண்நிலைவாத (Gender Based feminism) இயக்கத்தின் மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். ஒரு முதலாளித்துவ ஆட்சியின் கீழ் சமத்துவமின்மை இருப்பதற்குக் காரணமாகப் பாலினத்தை மட்டுமே குறிப்பிடும் பெண்நிலைவாதிகளை அவர் அப்பாவிகள் என்று கருதினார். கொலான்டாய் போன்ற விமர்சகர்கள் தொழிலாள வர்க்கத்திற்கான நிலைமைகளை மேம்படுத்துவதற்கான மார்க்சியத்தின் முயற்சிகளை தாராளவாதப் பெண்நிலைவாதம் (Liberal Feminism) கீழாக மதிப்பிடுகிறது என அவர் கருதினார்.

(6) கறுப்பினக் கம்யூனிஸ்டுப் போராளியான **ஆஞ்சலா டேவிஸ்** (1944-) பெண்களின் உரிமைகளுக்காகப் போராட பிற சிறுபான்மையினரின் உரிமைகளுக்காகவும் ஒருவர் போராட வேண்டும் என்றார். அறுபதுகள் எழுபதுகளில் அவர் அமெரிக்கச்

சிவில் உரிமை இயக்கங்களில் ஈடுபட்டார். பிளாக் பாந்தர்ஸ் இயக்கம், கம்யூனிஸ்ட் கட்சியின் கருப்பினக் கிளையாக இருந்த சேகுவேரா - லுமும்பா கழகம் போன்ற இயக்கங்களில் அவர் செயல்பட்டார். அமெரிக்கச் சிறைச்சாலை அமைப்பில் இனவெறிக்கு எதிரான உரிமைப் போராட்டத்தில் அவர் பங்கேற்றார். இதன்பொருட்டு ஓராண்டுக்கும் மேலாக சிறையில் அரசியல் கைதியாக அவர் இருக்க வேண்டியிருந்தது.

ஏஞ்சலா டேவிஸின் பெண்கள் இனம், வர்க்கம் என்ற நூல், வீட்டு வேலை என்ற கருத்து, வீட்டிற்குள் பாலின உழைப்பின் முதலாளித்துவ கட்டமைப்பைச் சிதைக்கவும், வீட்டு அடிமைத்தனத்தின் மூலம் பெண்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதைக் காட்டவும் பயன்படுத்தப்படுகிறது. இதைச் சமாளிக்க உணவு தயாரித்தல், குழந்தைப் பராமரிப்பு உள்ளிட்ட வீட்டு வேலைகளை சமூகமயமாக்குவது பொருளாதாரத்தில் இலாப நோக்கத்தின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக டேவிஸ் முடிக்கிறார்.

இங்கிலாந்தின் மார்க்சியப் பெண்நிலைவாதியான **ஷீலா ரோபோத்தம** (1943-) பெண்விடுதலை விவாதங்களில் பாலினப் பிரச்சினையைப் புறக்கணிப்பதற்காகப் பாரம்பரிய பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியை விமர்சித்தார். அதே நேரத்தில் அவர் பெண்நிலைவாதப் பிரச்சினையை வர்க்கப் போராட்டத்துடன் ஒருங்கிணைக்கும் புதிய இடதுசாரி அரசியலுக்காக வாதிட்டார். முதலாளித்துவத்துடன் ஆணாதிக்கமும் அகற்றப்பட வேண்டும் என்று வாதிட்டு, கலாச்சார, தனிப்பட்ட, இனப்பெருக்க அனுபவங்களை வலியுறுத்துவதன் மூலம் அவர் வைதீக மார்க்சிய இயக்கத்தினை விமர்சித்தார்..

அறுபது எழுபதுகளில் இலண்டனில் உள்ள ஆண் ஆதிக்கம் செலுத்தும் குறுங்குழுவாத கம்யூனிஸ்ட், ட்ராட்ஸ்கியக் குழுக்களின் வரம்புகளை ரோபோத்தம் அடையாளம் கண்டார்.

அவை பெரும்பாலும் பெண்களின் பிரச்சினைகளை ஓரங்கட்டின. பெண்கள் விடுதலை இயக்கத்தின் ஜனநாயக பங்கேற்பு, அதன் படிநிலை அல்லாத இயக்க முறைகளை இணைக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

முதலாளித்துவம் எவ்வாறு தனிப்பட்ட வாழ்க்கை, பெண்களின் உழைப்பு, இனப்பெருக்கம் ஆகியவற்றை வடிவமைக்கிறது என்பதில் கவனம் செலுத்தி, மார்க்சியத்தைப் பெண்ணியத்துடன் இணைக்க முயன்றார். பெண்களின் விடுதலையைப் பொருளாதார மறுசீரமைப்பு மூலம் மட்டுமே அடைய முடியாது: ஒரு தீவிரமான கலாச்சார மாற்றம் தேவை என்று அவர் வாதிட்டார்.

எழுபது எண்பதுகளில் சோசலிசச் செயல்பாட்டில் பெண்நிலைவாத உணர்வைக் கொண்டுவருவதில் ரோபோத்தம் ஒரு முக்கியப் பங்கை ஆற்றினார், எண்பதுகளில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தின் போது சுரங்க மூடல்களுக்கு எதிரான பெண்களின் போராட்டப் பிரச்சாரத்தை அவர் முன்னெடுத்தார். உண்மையான சமத்துவம் என்பதில் முதலாளித்துவச் சுரண்டல், இடதுசாரிகளுக்குள்ளேயே ஆணாதிக்கக் கட்டமைப்புகள் இரண்டையும் ஒழிப்பது அவசியம் என்பதை ரோபோத்தம் வலியுறுத்தினார்.

கம்யூனிஸ்டுக் கட்சிகளில் உள்ளோர் பெரும்பாலும் பெண்கள் பிரச்சினையை வர்க்கப் போராட்டத்திற்கு இரண்டாம் நிலையாகக் கருதுகின்றனர் என்ற அவர், முதலாளித்துவத்தின் கீழ் பெண்கள் இரட்டைச் சுமையை எதிர்கொள்கிறார்கள் என்பதை அவர் அடையாளம் கண்டார். பாட்டாளி வர்க்கமயமாக்கலால் பெண்கள் உயிர்வாழ்வதற்குத் தங்கள் உழைப்பை விற்க வேண்டும். அதே நேரத்தில் அவர்கள் வீட்டைக் கட்டியமைக்க ஊதியம் பெறாத உழைப்பையும் வழங்க வேண்டும். முதலாளித்துவ அமைப்புக்கு ஒரு கட்டுப்பாட்டு கருவியாக அவர்கள் செயல்படுகிறார்கள். உற்பத்தி அலகாகக்குடும்பத்தை மட்டுமே மையமாகக் கொண்ட பெண்களைக் குறித்த சில மார்க்சியக் கருத்துக்களுக்கு மாறாக, ஒரே நேரத்தில் ஒடுக்கும் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அனுபவிக்கும் அந்நியப்படுதலில் இருந்து ஆண்கள் தஞ்சம் அடையும் இடமாக ரோபோத்தம், குடும்பத்தை எடுத்துக்காட்டினார்.

பாலினவாதம், ஆணாதிக்கத்தின் வேர்கள் முதலாளித்துவ அமைப்புக்கு முந்தையவை என்று அவர் வாதிட்டார். முதலாளித்துவத்தை கவிழ்ப்பது மட்டும் பெண்களின் விடுதலைக்கு போதுமானதாக இல்லை என்ற அவர் ஆணாதிக்க அமைப்பு முறைகளை அவர் விமர்சித்தார். பெண்களின் குறிப்பிட்ட தேவைகள், அனுபவங்களை நிவர்த்தி செய்யத் தவறியதற்காகப் பாரம்பரிய மார்க்சிய அமைப்புகளின் தன்மையை அவர் விமர்சிததார்.

இவ்வாறாக முதலாளித்துவம் மூலம் பெண்கள் சுரண்டப்படும் வழிகளையும், தனியார் சொத்தின் தனிப்பட்ட உரிமையையும் மார்க்சியப் பெண்நிலைவாதம் பகுப்பாய்வு செய்கிறது. ஊதியம் பெறாத வீட்டு வேலை (Domestic Labour), பாலியல் உறவுகளுக்கும் இதனைப் பிரயோகிப்பதின் மூலம் மார்க்சியப் பெண்நிலைவாதிகள் பாரம்பரிய மார்க்சியப் பகுப்பாய்வை விரிவுபடுத்துகிறார்கள்.

(7) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பகால மார்க்சிய, சோசலிசப் பெண்ணியவாதிகள் பரந்த தொழிலாளர் இயக்கங்களுக்குள் உழைக்கும் பெண்கள் அமைப்புகளை உருவாக்கத் தொடங்கினர். இந்த அமைப்பாளர்கள் உழைக்கும் பெண்களின் தேவைகள் முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட பெண்ணிய இயக்கங்களின் தேவைகளிலிருந்து வேறுபட்டதாகக் கருதினர். விடுதலைக்கான வழிமுறையாக வர்க்கத்திலிருந்து பாலினத்தைப் பிரிப்பது இந்தப் பெண்களுக்கு நினைத்துப் பார்க்க முடியாதது. அவர்கள் தங்கள் கருத்துக்களுக்கும் சொந்த வாழ்வில் போராடுவதன் வழியாகவும் கம்யூனிஸ்ட்-கட்சிகளுக்குள் பல்வேறு நிலைகளில் வெற்றியைக் கண்டனர். சோசலிசப் புரட்சி மூலம் பெண்களை விடுவிக்கும் மிகவும் தீவிரமான அரசியல் திட்டத்தை மார்க்சிஸ்டுகள் ஆதரித்தனர். புரட்சிக்குப் பிறகு பெண்கள் மத்தியில் வேலை செய்வதிலும் அவர்களின் நிலைமைகளை பொருள் ரீதியாக மாற்றுவதிலும் சிறப்பு முக்கியத்துவம் அளித்தனர்.

சமூக இனப்பெருக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளாதார அமைப்பில் நாம் எவ்வாறு பணியாளர்களை உருவாக்கிப் பராமரிக்கிறோம் என்பதற்கான செயல்முறையாகும். முதலாளித்துவத்தில் இது வேலையின் உடல், சமூக அம்சங்கள், முதலாளிகள், தொழிலாளர்களுக்கு இடையிலான உறவுகள், இவற்றோடு இந்த உறவுகளை ஆதரிக்கும் நம்பிக்கைகளை உள்ளடக்கியது. இந்தச் செயல்முறை பெரும்பாலும் வீடுகளுக்குள் நடைபெறுகிறது. இது பெருமளவு பெண்களால் செய்யப்படும் பாரம்பரியப் பணிகளைப் பெரிதும் நம்பியுள்ளது.

மார்க்ஸ் தொடக்கத்தில் கவனிக்காத வீட்டு வேலைகளில் பெண்களின் பங்கை அங்கீகரிப்பதன் மூலம், நவீன சமூக மறுஉற்பத்தி மார்க்ஸின் அசல் கோட்பாட்டில் உள்ள இடைவெளிகளை மார்க்சியப் பெண்நிலைவாதம் நிரப்புகிறது. ஒரு முதலாளித்துவ சமூகத்தில் சமூக மறுஉற்பத்தி முக்கியமாக வீட்டிற்கு மட்டும் அல்லாமல், ஊதியம் பெறாத, குறைந்த ஊதியம் பெறும் வேலை மூலமும் நிகழ்கிறது. மறுஉற்பத்தி என்பது முதலாளித்துவத்திற்கும் கூலித் தொழிலாளிக்கும் இடையிலான உறவை உருவாக்குவதையும் பராமரிப்பதையும் உள்ளடக்கியது என்று மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். பெண் ஒடுக்குமுறையின் மிக முக்கியமான ஆதாரமாக உற்பத்தி உழைப்பிலிருந்து விலக்கப்படுவதை மையமாகக் கொண்டு சில மார்க்சியப் பெண்நிலைவாதிகள் கூலி முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குள் வீட்டு வேலைகளைச் சேர்ப்பதை ஆதரித்தனர்.

பெண்கள் தங்கள் இனப்பெருக்கப் பொறுப்புகள் மூலம் தொழிலாளர் சக்தியில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கிறார்கள். அவர்கள் இறுதியில் பணியிடத்தில் நுழையும் குழந்தைகளைப் பெற்றெடுப்பது மட்டுமல்லாமல் இந்தக் குழந்தைகளின் சமூகமயமாக்கலுக்கும் பங்களிக்கிறார்கள். தொழிலாளர்கள், பெற்றோர்களாக அவர்களின் எதிர்காலப் பாத்திரங்களுக்கு அவர்களைத் தயார்படுத்துகிறார்கள். கூடுதலாக ஊதியம் பெறாத வீட்டு வேலை மூலம் பெண்கள் தற்போதைய தொழிலாளர்களுக்கு, பெரும்பாலும் அவர்களின் கணவர்களுக்கு ஆதரவை வழங்குகிறார்கள்.

ஒரு முதலாளித்துவ சமூகத்தில் பெண்களால் நிறைவேற்றப்படும் இனப்பெருக்கப் பாத்திரங்களை விட ஆண்களால் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அதிக மதிப்பு வைக்கப்படுகிறது. வீட்டு வேலைகள, வீட்டு மேலாண்மை, குழந்தைப் பராமரிப்பு போன்ற பாரம்பரியமாக பெண்களால் மேற்கொள்ளப்படும் வீட்டு வேலைகள் பெரும்பாலும் ஒரு முதலாளித்துவக் கட்டமைப்பில் மதிக்கப்படுவதில்லை. ஏனெனில், அதற்குப் பரிமாற்ற மதிப்பு இல்லை. எனவே இந்த வேலை குறைவாக மதிப்பிடப்படுகிறது. அதற்கு ஊதியம் வழங்கப்படவில்லை. இருப்பினும் பெண்கள் இன்னும் அந்தப் பணிகளை முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மார்க்சியப் பெண்ணியவாதிகள் குடும்பத்தை முதலாளித்துவத்தின் ஒரு கருவியாகப் பார்க்கிறார்கள். ஆண்களை விடப் பெண்கள் ஒடுக்கப்படுவதற்கு முதலாளித்துவமே முக்கிய பங்களிப்பாளராகக் கருதுகிறார்கள். பெண்நிலைவாதத்தின் இந்தப் பிரிவு தனிப்பட்ட மட்டத்தை விடப் பெண்கள் மீதான நிறுவன ஒடுக்குமுறையை விளக்க சமூக மற்றும் அரசியல் கட்டமைப்புகளைப் பகுப்பாய்வு செய்கிறது.

இருபத்தியோராம் நூற்றாண்டில் பெண்ணியத்தின் பரவலாக பிரபலமான கோட்பாடாக அடையாள அரசியலை வலியுறுத்தும் ஊடறுப்புப் பெண்நிலைவாதத்தின் தோற்றம் மார்க்சியப் பெண்நிலைவாதிகளிடமிருந்து பல்வேறு பதில்களைக் கண்டது. பாரம்பரிய மார்க்சியப் பெண்நிலைவாதிகள் முதலாளித்துவ அடையாள அரசியலை நம்பியிருப்பதை விமர்சித்து வருகின்றனர் பாட்டாளி வர்க்க அனுபவத்தை அல்லாமல், தனிநபர் அடையாளத்தை அதிகமாக வலியுறுத்துவதன் மூலம் ஊடறுப்புப் பெண்நிலைவாதம் வர்க்கம், பிற அதிகாரங்கள் குறித்த கருத்தாக்கங்களை மட்டுப்படுத்துகிறது என்று மாரக்சியப் பெண்ணிலைவாதிகள் வாதிடுகின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில் முதலாளித்துவ கட்டமைப்புகளை ஒழிப்பதற்காக மாறுபட்ட அடையாளங்களைக் கூட்டுச் செயல்பாடு மூலம் கடக்க வேண்டும் என அவர்கள் சொல்கிறார்கள்.

கட்டமைக்கப்பட்ட முறையான ஒடுக்குமுறையின் விளைவான அடையாளத்தின் பல்வேறு அம்சங்களின் தொடர்புகளைப் பார்ப்பதற்கான ஓர் அடியாக மார்க்சியப்

பெண்நிலைவாதிகள் ஊடறுப் பெண்நிலை வாதத்தைக் கருதுகிறார்கள். முதலாளித்துவப் படிநிலையை மீண்டும் உருவாக்கும் முதலாளித்துவத்தின் முழுமையற்ற விமர்சனமாக வர்க்கத்தையும் சமூக அடையாளத்தையும் பிரிப்பதை மார்க்சியப் பெண்நிலைவாதம் மறுதலிக்கிறது.

மார்க்சியப் பெண்நிலைவாதிகளின் இயல்பு, சமூக மாற்றத்தை ஊக்குவிக்க அணிதிரட்டும் அவர்களின் திறன் ஆகியன, முக்கியமான சமூகச் செயல்பாடுகளில் ஈடுபட அவர்களுக்கு உதவியுள்ளன. செயல்பாட்டாளர்களாக மார்க்சியப் பெண்நிலைவாதிகள் பெண் ஒடுக்குமுறை, மானுட விடுதலை, வர்க்க அரசியல், ஏகாதிபத்திய எதிர்ப்பு, இனவெறி எதிர்ப்பு, பாலின அடையாளம் - பாலியல் பிரச்சினைகள் ஆகியவற்றை நிகழ்ச்சி நிரலின் மையத்தில் வைக்கும் அரசியலை வளர்க்க வலியுறுத்துகின்றனர். வரலாறு முழுவதும் இந்தப் பெண்கள் மேலாதிக்க முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதில் பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதன்வழி பெண்கள் முதலாளியத்திலிருந்தும் ஆணாதிக்கத்திலிருந்தும் விடுதலையை அடைவதற்கான உகந்த முறை குறித்த தம்முடைய மாறுபட்ட கருத்துக்களை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

♦♦♦

★ கட்டுரையாளர்
இலண்டன் வாழ் முற்போக்கு எழுத்தாளர்

எச்சிலையும் தமிழர் தன்மானமும்

தமிழ் இராசேந்திரன்

கரூர் மாவட்டம் நெரூர் என்ற இடத்தில் சதாசிவ பிரம்மேந்திராள் கோவில் அமைந்துள்ளது. ஒரு பிராமணர் அங்கே ஜீவசமாதி ஆனதாகத் தெரிவிக்கப்பட்டுப் பல ஆயிரம் பிராமணர்கள் ஆண்டுதோறும் அங்கே திருவிழாவுக்கு வருவதை வழக்கமாக வைத்திருந்தார்கள்.

அந்தத் திருவிழா பற்றி விசாரித்த பொழுது ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவின் இறுதி நாளில் பார்ப்பனர்கள் சாப்பிட்டுப் போட்ட எச்சில் இலையில் பக்தர்கள் அனைவரும் படுத்து உருள வேண்டும் அப்போதுதான் சதாசிவ பிரம்மேந்திரனுடைய அருள் கிடைக்கும் என நம்ப வைக்கப்பட்டுத் தமிழர்கள் எல்லாம் பன்றிகளைப் போல, நாய்களைப் போல எச்சில் இலையில் உருண்டு கொண்டிருந்தார்கள்

அதைக் கண்டு மனம் பொறுக்காத நான் எனது நண்பரான தலித் பாண்டியன் என்பவரை மனுதாரராக வைத்து எனது நண்பர் மதுரை வழக்கறிஞர் நாராயணன் மூலமாக மதுரை உயர்நீதிமன்ற இரண்டு நீதிபதிகள் அமர்வில் ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தேன் அந்த வழக்கு எண் 7068 / 2015 ஆகும்.

இந்த வழக்கை விசாரித்த நீதி அரசர்கள் எஸ் மணிக்குமார் மற்றும் எஸ் வேலுமணி ஆகியோர் எங்கள் கோரிக்கையை

ஏற்றுச் சதாசிவ பிரம்மேந்திரன் கோவிலில் நடைபெற்று வந்த எச்சில் இலையில் உருளும் சடங்கைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்தனர்.

எச்சில் இலையில் உருளும் பிரச்சனையில் முதன் முதலில் இரு நீதிபதிகள் தடை உத்தரவு பிறப்பித்த பொழுது, எச்சில் இலையில் மனிதர்களை உருள வைப்பது அரசியல் அமைப்பு அறநெறிக்கு முரணானது மற்றும் பொது சுகாதாரத்துக்குக் கேடு விளைவிப்பது என்று கூறி அந்த நிகழ்வைத் தடை செய்தனர். பின்பு ஜி ஆர் சுவாமிநாதன் எனும் நீதிபதி, தனது உத்தரவில் ஓர் இந்து, தான் விருப்பப்படி தனது நம்பிக்கையின்படி என்ன சடங்கு வேண்டுமானாலும் செய்யலாம். அதை யாரும் தடுக்க முடியாது என்று உத்தரவிட்டார். அதற்கு எதிராக மறுபடியும் இருநீதிபதிகள் அமர்வில் விசாரணை நடந்த பொழுது, அரசியல் சட்டம் ஒரு நபருக்குச் சில மத சுதந்திரங்களை வழங்கி உள்ளது. ஆனால் அந்த மத சுதந்திர நடவடிக்கைகளானது அரசியல் அறநெறிக்கு உட்பட்டதாகவும், பொது சுகாதாரத்துக்கு கேடு இல்லாததாகவும் இருக்க வேண்டும். ஆனால், இந்த நிகழ்வானது அரசியல் சட்ட அறநெறிக்கு மாறானதாகவும், பொது சுகாதாரத்துக்குக் கேடானாதாகவும் உள்ளது என்பதால், இந்த நிகழ்வு தடை செய்யப்படுகிறது. மேலும் இரண்டு நீதிபதிகள் தடை செய்த ஒரு பிரச்சனையைத் தனிநீதிபதி ஒருவர் மாற்றித் தீர்ப்பு எழுதுவது நீதித்துறையில் ஒழுங்கின்மையை காட்டுகிறது எனவே இதனை அனுமதிக்க முடியாது என்று கூறித்தான் தற்பொழுது மீண்டும் எச்சில் இலையில் உருள்வதை நிரந்தரமாகத் தடை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளனர் இது தொடர்பான கர்நாடக உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் இதே போன்ற ஒரு பிரச்சனையில் நிலுவையில் உள்ளது. எனவே இதே போன்ற பிரச்சனையில் நிலுவையில் இருக்கும் வழக்கில் உச்ச நீதிமன்றம் வேறு வித்தியாசமான தீர்ப்பு பிறப்பிக்கும் வரை இந்தத் தீர்ப்பு அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக மேற்படி சடங்கு சில ஆண்டுகள் நிறுத்தப்பட்டு இருந்தது. ஆனால், 2024 ஆம் ஆண்டு மேற்படி கோவில் நிர்வாகமும், நவீன் குமார் என்பவரும் சேர்ந்து மதுரை உயர்நீதிமன்றத்தில் தனி நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன்

முன்பாக ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். எச்சில் இலையில் உருளுவது இந்து பக்தர்களின் விருப்பம் என்றும், அது மதசுதந்திரம் என்றும், அதனை யாரும் தடை செய்யக்கூடாது என்றும் கோரி மனு செய்தனர் இந்த வழக்கை விசாரித்த நீதிஅரசர் தீர்ப்பு பிறப்பிப்பதை 30 நாள்கள் ஒத்திவைத்துச் சம்பந்தப்பட்ட எச்சில் இலையில் உருளும் சடங்கு நடக்கும் ஒரு நாளுக்கு முன்பாக இரவில் எச்சில் இலையில் பக்தர்கள் உருள அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்தார. அதற்கான உத்தரவு எண் 10496/2024 ஆகும்.

மேற்படி உத்தரவு குறித்து அறிந்தவுடன் மேற்படி வழக்குக்கு எதிராக மேல்முறையீடு செய்ய வேண்டும் என்று நான் பலருக்கும் வேண்டுகோள் விடுத்தேன்

அதன் தொடர்ச்சியாக கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள், மேற்கண்ட ஜி.ஆர். சுவாமிநாதன் உத்தரவுக்கு எதிராக இரு நீதிபதிகள் கொண்ட அமர்வில் மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கில் தமிழ்நாட்டில் தமிழ்நாடு அரசு மூலமாக அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தைச் சேர்ந்த அரங்கநாதன் மற்றும் நான் இடையிட்டு மனுக்களை தாக்கல் செய்து அரசுக்கு ஆதரவாக ஆஜரானோம்.

மேற்கண்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த நீதி அரசர்கள் சுரேஷ்குமார் மற்றும் அருள்முருகன் ஆகியோர் தங்களது தீர்ப்பில் ஏற்கனவே ஒரு பிரச்சனையில் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு ஒரு தீர்ப்பு பிறப்பித்திருக்கும்போது, அதே பிரச்சனை குறித்து தனி நீதிபதி மாறாகத் தீர்ப்பு எழுதுவது நீதித்துறையில் ஒழுங்கின்மையைக் குறிக்கும் என்று குறிப்பிட்டு மேல்முறையீட்டு மனுவை அனுமதித்து ஜி ஆர் சாமிநாதன் அவர்களின் உத்தரவை இரத்து செய்து தீர்ப்பளித்தனர்.

மேற்கண்ட தீர்ப்பில் ஏற்கனவே கர்நாடக மாநிலம் குக்கே சுப்பிரமணியம் கோவில் என்ற கோவிலில் நடைபெற்ற இதே போன்ற எச்சில் இலையில் உருளும் நடவடிக்கையைத் தடை செய்து கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து இருப்பதையும் அந்த உத்தரவை இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு உள்ளதையும் குறிப்பிட்டு, இந்தப் பிரச்சனையில்

உச்ச நீதிமன்றம் மாறாக ஏதும் உத்தரவு பிறப்பிக்கும் வரை இந்தத் தீர்ப்பு செல்லும் என்றும், நெரூர் சதாசிவ பிரம்மேந்திரன் கோவிலில் எச்சில் இலையில் உருளும் சடங்கு அதுவரை தடை செய்யப்பட வேண்டும் என்றும் தெளிவான உத்தரவைப் பிறப்பித்தனர்.

இதற்கிடையில் உச்ச நீதிமன்ற தடை இருக்கும்போது, மதுரை உயர்நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகளின் தடை இருக்கும்போது, அவற்றை எல்லாம் மீறித் தனி நீதிபதியாக ஜி.ஆர். சுவாமிநாதன் பிராமணர்கள் சாப்பிட்டு போட்ட எச்சில் இலையில் தமிழர்கள் உருளலாம் என்று தீர்ப்பளித்தது குறித்துக் கடுமையான கண்டனங்களைத் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கோவை இராமகிருஷ்ணன் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப வீரபாண்டியன் உள்ளிட்ட பலரும் கடுமையாகக் கண்டித்து இந்தியத் தலைமை நீதிபதிக்குக் கோரிக்கை மனுக்களை அனுப்பினர்.

இவ்வாறாக கரூரில் வாழும் வாய்ப்பு , எனக்கு இருந்ததால், தமிழர்களின் தன்மானம் சுய கௌரவம் பாதிக்கப்படாத வகையிலும் தமிழர்கள் பிராமணர்களால் ஏமாற்றப்படாத வகையிலும் நீதிமன்றத்தைப் பயன்படுத்தி ஒரு நன்மை கிடைக்க நான் பாடுபட்டேன்.

♦♦♦

★கட்டுரையாளர்
மூத்த வழக்கறிஞர்
கரூர் மற்றும் மதுரை உயர்நீதிமன்றம்.

ஊபா சட்டத்தின் கோர முகம்

பொன்.சந்திரன்

மனித உரிமைக் குழுக்கள் ஏன் ஊபாவை எதிர்க்கின்றன?

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) இந்தியாவின் முதன்மையான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாகும். ஆனால் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற அமைப்புகள் இதனை "கொடூரமான சட்டம்" என்று கடுமையாக எதிர்க்கின்றன. இதன் முக்கியக் காரணங்கள்:

- செயல்முறையே தண்டனையாவது (Process of Enquiry as a Punishment) (பிணை கிடைப்பதில் உள்ள சிக்கல்) பிரிவு 43D (5)-ன் கீழ், காவல்துறையின் குற்றச்சாட்டுகள் "முதல் பார்வையில் உண்மையாக (Prima Facie)" தெரிந்தால், நீதிமன்றம் பிணை வழங்க முடியாது. இது ஒரு நபரை விசாரணை முடிவதற்கு முன்பே பல ஆண்டுகள் சிறையில் இருக்க வைக்கிறது.
- தெளிவற்ற வரையறைகள்: "பயங்கரவாத செயல்" என்பதற்கான விளக்கம் மிகவும் தெளிவற்றதாக உள்ளது.

இது அரசுக்கு எதிரான போராட்டங்கள் அல்லது விமர்சனங்களைக்கூடப் பயங்கரவாதம் என்று முத்திரை குத்த வழிவகுக்கிறது.

- 2019 திருத்தம் (தனிநபர்களை குறிவைத்தல்): முன்பு அமைப்புகள் மட்டுமே பயங்கரவாத இயக்கமாக

அறிவிக்கப்பட்டன. இப்போது அரசாங்கம் எந்தவொரு தனிநபரையும் "பயங்கரவாதி" என்று அறிவிக்க முடியும். இது அந்த நபரின் சமூக மதிப்பை (Civil Death) சிதைக்கிறது.

- குறைந்த தண்டனை விகிதம்: தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) படி, கைது செய்யப்படுபவர்களில் வெறும் 2-3% பேருக்கு மட்டுமே தண்டனை கிடைக்கிறது. அதாவது 97% பேர் நிரபராதிகளாக விடுபடுகின்றனர், ஆனால் அதற்குள் அவர்கள் பல ஆண்டுகளைச் சிறையில் கழித்துவிடுகின்றனர்.

ஊபா மற்ற சட்டங்களிலிருந்து (TADA, POTA, MISA) **எப்படி வேறுபடுகிறது?**

ஊபா ஒரு "நிரந்தரமான" சட்டமாகும். தடா மற்றும் பொடா போன்ற சட்டங்கள், குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு காலாவதியாகும் (Sunset Clause) தன்மையைக் கொண்டிருந்தன, ஆனால் ஊபாவிற்கு அத்தகைய காலக்கெடு இல்லை.

MISA (1971) | TADA (1985) | POTA (2002) | UAPA (தற்போது) | கால அளவு, நிரந்தரம். வாக்குமூலம் ஏற்கப்படாது போலீசாரிடம் தரும் வாக்குமூலம் செல்லும் பிணை மிக மிகக் கடினம்.

2019 திருத்தத்தின் முக்கிய அம்சங்கள்:

- தனிநபர்களைப் பயங்கரவாதிகளாக அறிவிக்கும் அதிகாரம்.
- NIA அமைப்பின் இயக்குநர் (DG) அனுமதியுடன் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரம்.
- இன்ஸ்பெக்டர் பொறுப்பிலான அதிகாரிகளே வழக்குகளை விசாரிக்க அனுமதி.

உச்ச நீதிமன்றத்தின் அண்மைக்கால அவதானிப்புகள் (2024–2026):

- அண்மைக் காலமாக உச்ச நீதிமன்றம் தனிநபர் சுதந்திரத்திற்கும்" "தேசிய பாதுகாப்பிற்கும்" இடையிலான சமநிலையை ஆய்வு செய்கிறது:.
- நீண்ட காலச் சிறைவாசம்: ஒரு நபர் 5 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருந்து, விசாரணை முடிய நீண்ட காலம் ஆகும் என்றால், பிரிவு 43D(5)-ன் கட்டுப்பாடுகளைத்

தளர்த்தி பிணை வழங்கலாம் (K.A. நஜீப் வழக்கு முன்னுதாரணம்).

- பங்கு வாரியான பிரிவினை: 2026-ல் நீதிமன்றம் "மூளைச்சலவை செய்பவர்கள் (Masterminds)" மற்றும் "உதவியாளர்கள் (Facilitators)" என இரு பிரிவாகப் பிரித்து, சிறிய அளவில் தொடர்புடையவர்களுக்குப் பிணை வழங்குவதில் தாராளம் காட்டியுள்ளது.

முக்கியமான வழக்குகள்: பீமா கோரேகான் மற்றும் டெல்லி கலவரம்.

- பீமா கோரேகான்: இங்கு டிஜிட்டல் ஆதாரங்கள் (Digital Evidence) சிதைக்கப்பட்டதாகப் புகார் எழுந்தது.

ரோனா வில்சன் போன்றோரின் கணினிகளில் 'மால்வேர்' (கணிணி வைரஸ்) மூலம் தகவல்கள் திணிக்கப்பட்டதாக சர்வதேசத் தடய அறிவியல் ஆய்வுகள் தெரிவித்தன.

- * டெல்லி கலவரம்: சாலை மறியல் (Chakka Jam) போன்ற சனநாயக வழியிலான போராட்டங்களைப் பயங்கரவாதமாகக் கருத முடியுமா என்ற சட்டப் போராட்டம் இங்கு முக்கியமானது. வன்முறையில் நேரடியாக ஈடுபடாதவர்களுக்குப் பிணை வழங்கப்பட வேண்டும் என்பதே தற்காப்பு வாதமாக உள்ளது.

குறிப்பு: தேசியப் பாதுகாப்புக்கும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் இடையே உள்ள மெல்லிய கோட்டை இந்தச் சட்டம் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கி வருகிறது.

ஊபா மற்றும் பிணை: 2026-ன் புதிய சட்டப் பரிமாணங்கள்

2026 சனவரி 5-ஆம் நாள் , டெல்லி கலவரம் தொடர்பான 'பெரிய சதி' (Larger Conspiracy) வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு மைல்கல் தீர்ப்பை வழங்கியது. இதில் உமர் காலித் மற்றும் ஷார்ஜீல் இமாம் ஆகியோருக்குப் பிணை மறுக்கப்பட்ட நிலையில், குல்பிஷா பாத்திமா உட்பட ஐந்து பேருக்கு நிபந்தனைப் பிணை வழங்கப்பட்டது.

2026 தீர்ப்பில் 'பயங்கரவாதச் செயல்' பற்றிய புதிய விளக்கம்

நீதிமன்றம் ஊபா பிரிவு 15-ன் கீழ் 'பயங்கரவாதச் செயல்' என்பதற்கு ஒரு விரிவான விளக்கத்தை அளித்துள்ளது:

- ஆயுதம் தேவையில்லை: ஒரு பயங்கரவாதச் செயல் என்பது குண்டுவெடிப்பு அல்லது துப்பாக்கிச் சூடு போன்ற வன்முறையாக மட்டுமே இருக்க வேண்டியதில்லை.
- மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்குதல்: திட்டமிட்ட முறையில் சாலை மறியல் (Chakka Jam) செய்வது, அத்தியாவசிய சேவைகளை முடக்குவது மற்றும் நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது போன்றவையும் 'பயங்கரவாதச் செயலாக' கருதப்படலாம்.
- சதித்திட்டமும் ஒரு செயலே: வன்முறை நடப்பதற்கு முன்னால் தீட்டப்படும் சதித்திட்டமும் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியே என நீதிமன்றம் கூறியுள்ளது.

பிணை வழங்கப்பட்ட ஐந்து நபர்களுக்கான 12 கடுமையான நிபந்தனைகள்

குல்பிஷா பாத்திமா, மீரான் ஹைதர், ஷிஃபா-உர்-ரஹ்மான், முகமது சலீம் கான் மற்றும் ஷதாப் அகமது ஆகியோருக்கு பிணை வழங்கும்போது நீதிமன்றம் 12 நிபந்தனைகளை விதித்தது:

- சமூக ஊடகத் தடை: இந்த வழக்குப் பற்றியோ அல்லது இதில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றியோ சமூக ஊடகங்கள் (WhatsApp, Facebook, Twitter போன்றவை), செய்தித்தாள்கள் அல்லது மின்னணு ஊடகங்களில் எந்தவொரு கருத்தையும் பதிவிடவோ, பகிரவோ கூடாது.
- பேச்சு மற்றும் கூட்டத் தடை: எந்தவொரு பொதுக்கூட்டம், பேரணி அல்லது நிகழ்ச்சிகளிலும் நேரிடையாகவோ அல்லது இணைய வழியாகவோ (Virtually) கலந்து கொள்ளவோ, உரையாற்றவோ கூடாது.
- துண்டுப் பிரசுரங்கள் தடை: இந்த வழக்கு தொடர்பாக எந்தவொரு போஸ்டர்கள், பேனர்கள் அல்லது துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கக் கூடாது.

- எல்லை தாண்டுதல்: டெல்லி தேசியத் தலைநகர் பகுதியை (NCT of Delhi) விட்டு வெளியேறக் கூடாது. வெளியேற வேண்டுமெனில், நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற வேண்டும்.
- சாட்சிகளைத் தொடர்பு கொள்ளக் கூடாது: வழக்கின் சாட்சிகளையோ அல்லது தொடர்புள்ள நபர்களையோ எந்த வகையிலும் மிரட்டவோ, தொடர்பு கொள்ளவோ கூடாது.
- பிணைத் தொகை: தலா ரூ.2,00,000 பிணைத் தொகையும், அதே தொகைக்கு இணையான இரண்டு உள்ளூர் ஜாமீன்தாரர்களையும் (Sureties) வழங்க வேண்டும்.
- அமைதி காத்தல்: பிணையில் இருக்கும் காலத்தில் எந்தவொரு சட்டவிரோதச் செயலிலும் ஈடுபடக் கூடாது; மீறினால் பிணை உடனடியாக இரத்து செய்யப்படும்.

உமர் காலித் - ஷார்ஜீல் இமாம்: பிணை மறுக்கப்பட்டது ஏன்?

நீதிமன்றம் இவர்களை "முதன்மைச் சதிகாரர்கள்" (Masterminds) என்று வகைப்படுத்தியுள்ளது.

- அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகள் இவர்களுக்கு எதிராக "முதல் பார்வையில் உண்மையாக" (Prima Facie True) இருப்பதாக நீதிமன்றம் கருதியது.
- இருப்பினும், இவர்களுக்கும் ஒரு சிறிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது: பாதுகாக்கப்பட்ட சாட்சிகளிடம் விசாரணை முடிந்த பிறகு அல்லது இந்தத் தீர்ப்பு வந்து ஓராண்டு முடிந்த பிறகு, இவர்கள் மீண்டும் பிணை கோரி மனு தாக்கல் செய்யலாம்.

தகவல் ஆதாரம்:

How SC Expanded “Terrorist Act” Meaning Under UAPA | Vajiram & Ravi & YouTube

♦♦♦

கட்டுரைக்கு உதவி
நிவேதித்தா
கட்டுரையாளர்
மக்கள் சிவில் உரிமைக்கழகச் செயற்பாட்டாளர்

கவிதை

ரவி குமாரசாமி

இப்போது
நோய்க்காலம்
நெடுமரமென
வளர்ந்து நிற்கிறது.

விழிப்புநிலையில் இருக்க
முயன்ற போதும்
என் மனம்
அவ்வப்போது
சரிந்து விடுகிறது.

பிறரின் பிறழ் சொற்களோடு
இயைந்து போக முடியாமல்
நான்
விழுந்தும் விடுகிறேன்.

பிறழ்வில்
இருந்து விடுபடுதல்
நல்லதென்றே தோன்றுகிறது.
ஆனால்
பிறழ்வு என்று சொல்லி
குற்றங்கள் புரியும்போது
தண்டனைகளிலிருந்துதப்பித்துக்
கொள்ள முடிகிறது.
உறவுகளை
அறுத்தும்
தனிமைப்படுத்தியும் விடலாம்.

இப்போது
எனது கொடி
அரைக் கம்பத்தில்
பறக்கின்றது.
அப்போதும்
அது தலை நிமிர்ந்தே
பறக்கிறது.
அது அவமானமும் அல்ல.
வீழ்ச்சியும் அல்ல.

ஒருநாள் அது
உயரப் பறக்கும்
அப்போது
விடுதலைப் பாடலை
அனைவருடன்
இசைப்பேன்
நான்.

♦♦♦

நிகழ்வு

தூங்க விடாமல் செய்யும் படைப்பு

கண.குறிஞ்சி

பிரளயன் நெறியாள்கையில் ஈரோட்டில் அரங்கேற்றப்பட்ட "வனப்பேச்சி என்கிற பேரண்டச்சி" எனும் காவியத்தை மேடையில் நாடகமாகக் காண முடிந்தது. ஈரோடு ஆட்சியரும், கவிஞருமாகிய திரு.கந்தசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறிய இந்த நாடகத்தைக் கண்ட பார்வையாளர்கள் அறிவார்ந்த உணர்வில் கரைந்திருந்தனர். சூழலியல் கருவை மையமாகக் கொண்டு நெய்யப்பட்ட செய்நேர்த்தி மிக்க பிரளயனின் 95 நிமிட நேரப் படைப்பைக் கொண்டாடாமல் இருக்க முடியாது.

ஈரோடு ஆட்சியரும் கவிஞருமாகிய கந்தசாமி, பிரளயன், ரோகிணி

தவிரவும், மிகவும் காத்திரமான இரண்டு அரசியல் செய்திகள் இந்த நாடகத்தில் உள்ளுறையாகப் பதிந்து கிடக்கின்றன. இந்திய மக்களுக்கு முன்னால் இரண்டு எதிரிகள் உள்ளனர் என சோசலிசத் தலைவர் இராம்மனோகர் லோகியாவிலிருந்து அண்ணல் அம்பேத்கர் வரை தொடர்ந்து பலரும் நமக்குச் சுட்டிக்காட்டி உள்ளனர். "நமது மூளையைப் பார்ப்பனர்கள் ஆள்கின்றனர். நமது வயிறைப் பனியாக்கள் ஆள்கின்றனர்" என்றார் லோகியா. இதைப் பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தினார் அண்ணல் அம்பேத்கர். "முதலாளித்துவமும், பார்ப்பனியமும்தான் இந்திய மக்களின் முதன்மையான எதிரிகள் " என்பது அண்ணலின் பிரகடனம். இந்த இருபெரும் ஆபத்துக்களையும் தனது அடர்த்தியான வசனத்திலும், செறிவான உள்ளடக்கத்திலும் புதைத்து வைத்துள்ளார் தோழர் பிரளயன். கூடவே சமகாலத்தில் விசுவரூபம் எடுத்து நிற்கும் சூழலியல் பிரச்சனையையும் இணைத்திருப்பதில்தான் பிரளயனின் தனித்துவம் மிளிர்கிறது.

அண்மைக் காலத்தில் சூழலியல் சிக்கல் பெரும் சவாலாக மாறியது ஏன் என்ற கேள்வியையும் நாம் கேட்க வேண்டியுள்ளது. இது குறித்த எனது புரிதலைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கடந்த நூற்றாண்டுகளில் முதலாளித்துவத்தில் மூவகைப் போக்குகள் இருந்ததைப் பாவிக்க முடிகிறது. தங்களது பாரம்பரியச் சொத்தை வைத்துக் கொண்டு, தங்களது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட முதலாளிகள் ஒருவகை.

இதற்கு டாட்டா / பிர்லா போன்றோரை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். கல்வி / அறிவியல் தொழில்நுட்பத்தை வைத்துத் தங்களது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்ட முதலாளிகள் அடுத்த நிலை. நாராயண மூர்த்தி, சிவ் நாடார் - பில் கேட்ஸ் - உள்ளிட்டோரை இந்த வகையினத்தில் அடையாளப்படுத்தலாம். மூன்றாவதாக, இயற்கையைச் சூறையாடி உலகப் பணக்காரராக ஆனவர்கள். அதற்கு எடுத்துக்காட்டு அம்பானி, அதானி, வேதாந்தா போன்றோர்.

முதலிரண்டு வகைகளிலும் மனித உழைப்பைச் சுரண்டித்தான் மூலதனம் குவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இயற்கைக் கனிவளங்ளைச் சுரண்டுவதில் ஒப்பீட்டளவில் அந்த அளவு நச்சரிப்பும் தொல்லையும் இல்லை என்பதைக் கார்ப்பரேட்டுகள் உணர்ந்தனர். ஊதிய உயர்வு, போனஸ், பணி நிரந்தரம் போன்ற "எரிச்சல்" ஊட்டும் தடைகள் இதில் இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே இயற்கைக் கனிவளங்களை அதிகாரத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு வேண்டுமானாலும் தடையின்றிச் சுரண்டலாம் என்பது அவர்களது கணக்கு ஆனால் இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், மக்களை விழிப்படையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுதான் முதலாளிகளுக்கு முக்கியம். இந்த இடத்தில்தான் பிரளயன் போன்றோரது தேவையை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

முதலாளியம் (கார்ப்பரேட்) பார்ப்பனியம் / சூழல்நாசம் ஆகிய முப்பெரும் பகை சக்திகளை அழித்தொழிக்க வேண்டியதன் தேவையைத் தனது படைப்பு நேர்த்தியால் பார்வையாளர்களிடம் நன்கு கடத்தி விடுகிறார் பிரளயன்.

தாடகையும் விசுவாமித்திரனும் பேசும் உரையாடல் இந்தக் கோட்பாட்டுப் பின்னணியை எளிதில் தெளிவாக்கி விடுகிறது. பார்ப்பனர்கள் ஆயுதம் தூக்க மாட்டார்கள். ஆனால், பிறரைக் கொண்டு தங்களது காரியத்தைத் தந்திரமாகச் சாதித்துக் கொள்வார்கள் என்பதை மிக அருமையாக வெளிப்படுத்தும் அரிய காட்சி அது. அதே போல் தாடகை, ராட்சசி போன்ற சொற்களுக்குப் பின்னால் இருக்கும் சாதி அரசியலையும் நாடக ஆசிரியர் தோலுரித்துக் காட்டுகிறார். "ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் ஓர் அரசியல் உள்ளது" எனத் தோழர் மாவோ குறிப்பிட்டதை நாம் மறக்கலாகாது.

தாடகையை இயற்கை அன்னையின் குறியீடாகக் கொண்டால், அவர் மீது ஏவப்படும் அம்புகள் என்பவை, இரும்புச்சுரங்கங்கள், தேயிலைத் தோட்டங்கள், மீதேன் / ஆற்றுமணல் கொள்ளை போன்றவற்றைக் குறிக்கிறது என்பதைப் பிரளயனின் உரையாடல் உடனடியாகப் புரிய வைக்கிறது. "இயற்கையை வெல்ல மனிதன் முயன்றால்,

இயற்கை அவனுக்குக் கடுமையான பாடங்களைக் கற்றுத்தரும்" என்றார் ஏங்கெல்ஸ். ஆனால், தான் பால் குடித்த தாயின் மார்பகத்தைக்கூட அறுக்கத் தயங்காத மனச்சாட்சியற்ற மனிதர்களைக் கொண்டதாக இருக்கிறது இந்த உலகம். உலகின் ஓர் இருண்ட பக்கம் இது.

ஆனால் ஒளி மிக்க இன்னொரு பக்கமும் இருக்கிறது. தனது தாயகத்தின் இயற்கைக் வளத்தைக் காப்பதற்காக கென் சாரோ விவா (நைஜீரியா) சன் ரதா (கம்போடியா) போன்ற எண்ணற்ற புரட்சியாளர்கள் சூழலியல் காக்கத் தங்கள் உயிரையே காணிக்கையாகத் தந்தார்கள் என்பதுதான் நம்பிக்கை ஊட்டும் அந்த மறுபக்கம். வனத்தின் இயற்கை வளத்தைக் காக்கத் தமிழரான பாதிரியார் ஸ்டேன்சாமி ஊபா சட்டத்தில் கைது செய்யப்பட்டுச் சிறையிலேயே உயிர் நீத்தார். இருப்பினும், "பறவையைக் கூண்டில் அடைத்தாலும், அது பாடுவதை நிறுத்தாது " எனப் பிரகடனப் படுத்தினார். இத்தனை ஒப்பீடுகளையும் "வனப்பேச்சி" நாடகம் நம் உள்ளத்தில் கிளர்ந்தெழச் செய்கிறது.

ஒரு நாடகம் என்பது இலக்கியம் போன்றதல்ல! அதற்குத் தனிமனிதனின் உழைப்பு மட்டும் போதாது. அது ஒரு கூட்டு முயற்சி. நாடக ஆசிரியனின் ஆன்மாவை காட்சிப்படுத்தும் சக நடிகர்களின் ஒத்துழைப்புத்தான் அதன் வெற்றிக்குக் காரணமாக இருக்கும். அழகான மலருக்கு இனிய மணத்தைத் தருவது போல், வனப்பேச்சியாக வரும் **திரைக்கலைஞர் ரோகிணி** அவர்களின் நடிப்பு இந்நாடகத்தின் அடர்த்தியைக் கூட்டி நம்மைப் பிரமிக்க வைக்கிறது. அவரது திரை அனுபவமும், முற்போக்குக் கோட்பாட்டின்பாலான அவரது ஆத்மார்த்தமான ஈர்ப்பும் இந்த நாடகத்தின் சிகரம் என்றால் அது மிகை ஆகாது. கூடவே **கவின்மலர்** மற்றும் விசுவாமித்திரர் உட்பட பல்வேறு பாத்திரங்களில் நடித்த பலரது நடிப்பும் உயிரோட்டமாக அமைந்துள்ளது.

பழமையையும் புதுமையையும் இணைக்கும் பாலமாகத் திகழ்பவர் பிரளயன். இக்கலவை இந்த நாடகத்திற்குக் கூடுதல் ஈர்ப்பைத் தருகிறது. இந்நாடகத்தின் இசையும் நடனமும் அதற்கோர் எடுத்துக் காட்டு. தனது இருப்பைச் செயற்கையாகத்

திணிக்காமல், இறுதிவரை நம்மோடு இயல்பாகப் பயணிக்கும் பின்னணி இசையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

உள்ளத்தில் கிளர்ச்சி ஊட்டிச் செயலுக்குத்தூண்டாத ஒன்று சிறந்த படைப்பாக இருக்க முடியுமா? 'சௌந்தரிய உபாசகர்கள்" வேண்டுமானால், இதை ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் மக்களுக்காகச் சிந்திப்பவர்கள் அப்படி வாளாவிருக்க முடியாது. ஒரு படைப்புக்குள் நுழையும் போது உள்ள மனிதன், நுழைந்த பின் அதிலிருந்து வெளியேறும் போது மேம்பட்ட வேறோர் புதிய மனிதனாக வரவேண்டும். **ஷெல்லி, வால்ட் விட்மன், பாப்லா நெரூடா, பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், இன்குலாப்** போன்ற படைப்பாளிகள் இந்த இரசவாதத்தைத்தான் செய்தார்கள். அப்படிப்பட்ட உருமாற்றத்தைப் பிரளயன் இதில் உருவாக்கி உள்ளார்.

நாடக அரங்கை விட்டு வெளியேறும் போது, தொல்லைக்குள்ளாக்கும் கேள்வி ஒன்று நம்மைத் துரத்திக் கொண்டே வரும். இத்தகைய நாசகார சக்திகளை ஒழித்துக் கட்ட நாம் என்ன செய்ய,வேண்டும் எனும் அந்தக் கேள்வி மிகவும் பொருள் மிக்கது. அந்தக் கேள்வி அவர்களை நிச்சயம் செயலுக்குத் தூண்டும். அநீதியைக் கண்டு அமைதியாகக் கடந்து செல்லும் பார்வையாளனாக நாம் இருக்கக் கூடாது என்ற உணர்வை அவர்களிடம் அது தூண்டும். அப்பொழுது பிரளயனின் வெற்றி அங்கே நிலைநாட்டப்படும்.

♦♦♦

உங்கள் மனஓசை

மார்ச் மாதம் என்றாலே அது பெண்களுக்கான மாதமாக மாறிவிடுகிறது." சர்வதேச உழைக்கும் பெண்கள் தினம்", மார்ச் 8 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ் நாட்டிலும் பல வழிகளில் சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது என்பது வரவேற்கத் தக்க செய்தி.

திரும்புகின்ற பக்கமெல்லாம், காணும் இடமெல்லாம் பெண்களுக்கான அங்கீகாரங்கள் பல வழிகளில் வழங்கப்படுகின்றன. அப்படியான ஓர் அங்கீகாரத்தைச் சமூகச் செயற்பாட்டாளர், கல்வியாளர், தமிழ் மொழியின் மீது பற்றுக் கொண்ட இலக்கியச் செயற்பாட்டாளர் எனப் பன்முக ஆளுமையாக விளங்கும் தோழர் கண. குறிஞ்சி அவர்கள், தமது புதுமலர் 2026 சனவரி - பிப்ரவரி - மார்ச்சு காலாண்டிதழில் வழங்கியுள்ளார்.

இந்த இதழில், 14 பெண்களின் படைப்புகளை வெளியிட்டு இதழை முழுமையான பெண் படைப்பாளர்களின் வெளியீடாகக் கொண்டு வந்துள்ளார். அவரை மனமுவந்து பாராட்ட வேண்டும்.

அட்டைப் படத்தில் காரல் மார்க்சின் அன்புக்குரிய, தனது இணையரோடு சேர்ந்து சமூகத்தின் விடுதலைக்குப் போராடிய ஜென்னி மார்க்ஸின் படத்தையும் பின் அட்டையில் இந்த இதழின் படைப்பாளர்கள் 14 பேரின் படங்களையும் போட்டுப் புதுமலர் இதழை வெளிக்கொண்டு வந்துள்ளார்.

திராவிட இயக்க எழுத்தாளரும், செயல்பாட்டாளருமாகிய **ஓவியா,** பெண்ணிய மற்றும் நாடகச் செயற்பாட்டாளர் **அ. மங்கை,** ஊடகவியலாளர் **கவின்மலர்,** சென்னை உயர்நீதிமன்றத்தின்

மூத்த வழக்கறிஞர் **சுதா ராமலிங்கம்,** முற்போக்கு எழுத்தாளர் **புதிய மாதவி,** சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் **அஜீதா,** முற்போக்கு எழுத்தாளர் **சமந்தா,** கவிஞர், முற்போக்குப் படைப்பாளி **ரேவதி சுயம்புலிங்கம், கவிஞர் மாலதி மைத்ரி** மற்றும் **கவிஞர் இளம்பிறை** ஆகியோரின் கவிதைகள், ஆசிரியர் /கல்விச் செயற்பாட்டாளர் **சு. உமா மகேஸ்வரி,** உதவிப் பேராசிரியர் **செங்கொடி,** முற்போக்கு எழுத்தாளர் **பா.ஜீவசுந்தரி,** தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் **திருப்பூர் சிவகாமி** ஆகியோர் தங்கள் படைப்புகளை வழங்கிப் புதுமலர் இதழை அழகுபடுத்தியுள்ளனர்.

மார்ச் 8 அன்று இந்து தமிழ் திசை இந்தப் புதுமலர் இதழ் குறித்துச் செய்தி வெளியிட்டுள்ளது. அனைவரும் இதழை வாசிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சு. உமாமகேஸ்வரி
சென்னை.

புதுமலர் சனவரி 2026 இதழில் ஜென்னியைப் பற்றி கண. குறிஞ்சி அவர்கள் எழுதிய கட்டுரை மிகச்சிறப்பு. ஜென்னி மார்க்ஸ் அவர்களை இவ்வளவு நெருக்கமாக, முழுமையாக அறிமுகப்படுத்தி வந்த வேறு பதிவுகளை நான் கண்டதில்லை..

புதுமலரில் தொடர்ந்து இடம்பெறும் "இதழின் குரல்" எப்பொழுதும் இதயத்தைத் தொடுகிறது.

அதில் தலையானது சாதி குறித்து முன்னைய இதழில் வந்த பதிவு.. அதில் குறிப்பிடப்படும் சாதிவெறி பற்றிய செய்திகள் வருத்தம் அளிப்பவை. என்றாலும், விளைவு வாசகனைக் களத்தைநோக்கி நகர்த்துகிறது..

புதுமலர், புதிய உயரங்களை எட்ட எனது வாழ்த்துகள்.

எழில்சுப்பிரமணியன்
நிறுவனர்,
தாய்த்தமிழ் உயர்நிலைப் பள்ளி,
திருப்பூர்.

நன்றி: இந்து தமிழ் - 08/03/2026

பெண்களுக்கான மலர்

சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டிதழான 'புதுமலர்', சர்வதேச மகளிர் நாளை முன்னிட்டு மகளிர் சிறப்பிதழாக மலர்ந்திருக்கிறது. வரலாறு தொடங்கி சமகாலம் வரை பல்வேறு துறைகளில் பெண்களின் பங்களிப்பு குறித்த கட்டுரைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. உலகம் முழுவதும் பொதுவுடைமை மலர வேண்டும் என்பதற்காகத் தன் வாழ்நாளெல்லாம் உழைத்த கார்ல் மார்க்ஸின் எல்லாப் பணிகளிலும் துணைநின்ற ஜென்னி மார்க்ஸ் குறித்த கட்டுரை, பெண் எனும் பேராற்றலைத் துலக்கமாக்குகிறது. பெரியாரைப் பின்பற்றிப் பின்னாளில் தன்னை சுயமரியாதை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட நாகம்மை குறித்த கட்டுரை, பெண்களுக்கான சட்ட உரிமைகள், கல்வியில் பெண்கள் கடந்து வந்த பாதை, மகளிர் தின வரலாறு எனப் பல தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளும் மாலதி மைத்ரி, இளம்பிறை ஆகிய இருவரது கவிதைகளும் இதழின் நோக்கத்துக்கு வலுசேர்க்கின்றன. (புதுமலர், தொடர்புக்கு: 9443307681)

புத்தகப்பேழை

வரப்பெற்றோம்



இடது

சமூக அரசியல் பண்பாட்டுக் காலாண்டிதழ்

ஆசிரியர்
ஒடை.பொ.துரை அரசன்

விலை: ரூ. 100

இடது பதிப்பகம்
விசயமங்கலம்
ஈரோடு - 638 056.
94432 43167.



தமிழ் சினிமாவில் சாதியம்

கோட்பாடுகளும் நோக்குநிலையும்

ஜமாலன்

விலை: ரூ. 240

நாதன் பதிப்பகம்
சென்னை - 600 093.
98840 60274.



உக்ரைன் போர் - ஓர் ஆய்வு

தொகுப்பும் மொழியாக்கமும்

க. விஜயகுமார்

விலை: ரூ. 100

தமிழோசைப் பதிப்பகம்
கோவை - 641 006.
97884 59063.

காவிரிப் பெருநிலம்

ஆ.விஜய்

விலை: ரூ. 370

காரா பதிப்பகம்
மதுரை - 625 107.
95662 60955.